# பழங்காசு

சிறப்பாசிரியர் :
வரலாற்று வித்தகர் ம. இராசசேகர தங்கமணி

திருவள்ளுவர் ஆண்டு 2032 மேழம் (சித்திரை) திங்கள் (ஏப்ரல் 2001)
பேழை : 1 (இதழ் எண் : 2) காசு : 2



தமிழகத்தில் கிடைத்த
கி.மு. 4–ஆம் நூற்றாண்டின் கிரேக்கக் காசு




பிட்சாடனர்–சோழமாதேவி கோவில் சிற்பம்
சோழப்பெருவேந்தர் காலம்


ஆசிரியர்
மரு. சுசீலாதேவி சீனிவாசன்



பழங்காசு
முதல் இதழ்
'திருச்சிராப்பள்ளி'
யிடமிருந்து
'யாழ்ப்பாணம்'
பெறுகிறது.



"இராஜராஜனைப்
போல் புகழ்
பெறுக" –
இராஜராஜனின்
உருவச்சிலை
நினைவுப்
பரிசாக.



திருச்சிராப்பள்ளி
நாணயவியல்
கழகத்தின்
சார்பில்
சீனிவாசனுக்கு
பொன்னாடை

ஆ. பக்கேமவத்

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

# பழங்காசு

நாணயவியல், வரலாற்றியல் காலாண்டிதழ்

பேழை : 1 மேழம் (சித்திரை) தி.பி. 2032 ஏப்ரல் 2001 காசு : 2

## இருபெரும் துயரங்கள்

நண்பர்களுக்குத் தோழமை வணக்கங்கள். மூன்று திங்களுக்குப் பிறகு நாம் மீண்டும் சந்திக்கிறோம். பழங்காசு வெளியீட்டு விழா (28.1.2001) அன்று மாலை 4.30 மணி அளவில் நிகழ்த்த ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்த நேரத்தில்தான் குஜராத் பூகம்பச் செய்தி இடிபோல் தாக்கியது. நமது சகோதர சகோதரிகளும் அவர்தம் மழலைச் செல்வங்களும், பூமித்தாய் மடியில் புதையுண்டு போனதைக் கேட்டு ஆறாத் துயரடைந்தோம். எத்தனையோ இயற்கைச் சீற்றங்களை எதிர்த்து நின்ற வரலாற்றுச் சின்னங்கள் இன்று மண்ணுக்கடியில் மறைந்த வரலாறாய்ப்போனது. அவ்வாறே வரலாறாய்ப்போன குஜராத் மக்களுக்கும் மௌன அஞ்சலி செலுத்திய பின்பே, வரலாற்றிதழ் ***பழங்காசு*** அன்று வெளியிடப்பட்டது.

குஜராத்தில் நிகழ்ந்த அழிவுகள் இயற்கையானது என்றால், நமது அண்டை நாடான ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற அழிவுகளோ செயற்கையானவை. கனிஷ்கர் காலத்திய வரலாற்றுச் சின்னங்கள், பாமியானின் மிகப் பெரிய அமைதி தவழும் புத்தர் திருவுருவங்கள் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன. ஆப்கானிஸ்தானின் வரலாறே தகர்த்து நொறுக்கப்பட்டது என்பதை தாலிபன் அரசு உணரவில்லை. கடந்த பல நூற்றாண்டுகளாக எத்தனையெத்தனை அரச மரபுகள் மாறி மாறி, அந்த நாட்டில், தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்தியபோதிலும் இப்படிப்பட்டதொரு அழிவுச் செயலை அவ்வரசுகள் எதுவுமே செய்யத் துணியவில்லை. உலக நாடுகளின் வேண்டுகோளையும், அனைத்து நாடுகளின் கல்வி, அறிவியல், கலைக் கழகத்தின் (யுனஸ்கோவின்) மன்றாடலையும் சிறிதும் பொருட்படுத்தாது, தாலிபன் அரசின் இச்செயல்பாடு, நாம் 21–ஆம் நூற்றாண்டில்தான் வாழ்கிறோமா என்ற ஐயப்பாட்டையே தோற்றுவித்துவிட்டது.

சில நிமிடங்களுக்குள் தூள்தூளாக்கப்பட்ட இப்பிரமாண்டமான புத்தர் திருஉருவங்களை, மீண்டும் தங்களால் உருவாக்க இயலுமா என்பதை, தாலிபன் அரசும், அவ்வரசின் இவ்வழிவுச் செயலை ஆதரிப்பவர்களும், சிறிதாவது சிந்தித்துப் பார்க்கட்டும்.

இம்மாபெரும் வரலாற்றுச் சின்னங்களை இன்றைய ஆப்கன் ஆட்சியாளர்கள் அழித்தாலும், ஆப்கானிஸ்தானின் பண்டைய வரலாற்றையே அழித்துவிட முடியுமா என்பதே நமது கேள்வி! எதிர்கால ஆப்கானிஸ்தான் வரலாற்றில் தாலிபன் அரசின் இவ்வழிவுச் செயல், மிகப்பெரிய கரும்புள்ளியாகவே விளங்கப் போவது உறுதி.

இவ்விரு பெரும் துயரங்களுக்காக, எமது ஆழ்ந்த வருத்தத்தைப் பழங்காசின் நண்பர்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.

அன்புடன்

15.4.2001
திருச்சிராப்பள்ளி–19.

*சுசீலாதேவி சீனிவாசன்*



# தமிழகத்தில் கிடைத்த கி.மு. நான்காம் நூற்றாண்டின் கிரேக்கக் காசு

- பேராசிரியர். க.ஆ. திருஞானசம்பந்தம்

சங்க இலக்கியங்களின் காலம் கி.மு. 5–ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3–ஆம் நூற்றாண்டு வரை என்று பெரும்பாலான அறிஞர்கள் வரையறுத்துள்ளனர். கி.மு. 5–ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படும் இலக்கண நூலான தொல்காப்பியம், தமிழகத்தின் பண்டைய அரசுகளான சேர, சோழ, பாண்டியர்களைப் பற்றிப் பேசுகிறது. ‘திரைகடலோடியும் திரவியம் தேடு’ என்ற தமிழ்ப் பழமொழிக்கேற்ப பழந்தமிழர் கடல் வாணிகத்தில் சிறந்து விளங்கினர். கிறிஸ்து பிறப்பதற்கு முன்பிருந்தே, வாணிகம், கடலோடுதல் மற்றும் வெளிநாட்டுத் தொடர்புகளில் தமிழகம் முன்னணியில் இருந்தது என்பதைச் சங்க இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன.

சங்க காலத்தில் கிரேக்கர்களும், உரோமானியர்களும் ‘யவனர்கள்’ என்றே அழைக்கப்பட்டனர் என்பதை இலக்கியங்கள் மூலம் அறிய முடிகிறது. தமிழர்கள், யவனர்களோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதையும் இவ்விலக்கியங்கள் சுட்டுகின்றன.

உள்நாட்டு வாணிகம் பெரும்பாலும் பண்டமாற்று முறையிலேயே நடைபெற்றது. காசுகளின் பயன்பாடு பெரும்பாலும் கடல் வணிகத்திலேதான் – கிரேக்க, உரோமானிய நாடுகளுடன் நடைபெற்ற பண்டப் பரிவர்த்தனையில்தான் – இருந்து வந்துள்ளது. இந்த வெளிநாட்டு வணிகத்தால் தமிழகம் பெரும் பயனடைந்தது என்பதும் உண்மையே!

கிரேக்கரும் உரோமானியரும், பொன்னையும் வெள்ளியையும் தமிழகத்திற்கு அனுப்பி வைத்து அதற்கு நிகராக, முக்கிய பயன்பாட்டுப் பொருட்களான மிளகு, முத்து, யானைத் தந்தம், மெல்லிய ஆடைகள் (மஸ்லின் துணி) ஆகியவற்றைப் பெற்று வந்தனர். இவ்வாணிகத்தின் வழி தமிழகம் பெற்ற பொன், வெள்ளிக் காசுகளில் ட்யூராட்ராக்கம் (TEURADRACHM) ஸ்டேட்டர் (STATER), அயூரியஸ் (AUREUS), தினாரியஸ் (DENARIUS) ஆகிய காசுகளும் அடங்கும். உரோமானியரின் காசான ‘தினாரிய்’ (DINARII) கிரேக்கர்களின் காசான ‘திரக்மா’ (DRACHMA), ஆகியவற்றின் தமிழ் வடிவமே ‘திரமம்’ என்று தமிழ்க் கல்வெட்டில் உள்ள சொல்லைச் சான்றாகக் கூறலாம் *(DIRAMMAM is a Tamil form of DRACHMA - TAMIL COINS - A study - By Dr. A. NAGASAMY - Page : 14)*

சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயங்களாக பொன், காசு, பொலஞ்செய் காசு, பளிங்கு காசு, பாண்டிற் காசு, காணம் ஆகியன இலக்கியங்களில் சுட்டிக்காட்டப்படுகின்றன.

(பொன் -அகம் 149; காசு -அகம் 293; பொலஞ்செய் காசு - பொன்னாற் செய்த காசு - அகம் 363; பளிங்கு காசு-அகம் 315; பாண்டிற்காசு - ஐங்குறுநூறு - செலவழுங்குவித்த பத்து 10 ; காணம் - பதிற்றுப்பத்து - ஆறாம்பத்தின் பதிகம்)

சங்கப் புலவர்களில் பலரும், தமிழர்கள் யவனர்களோடு கொண்டிருந்த வணிகத்தொடர்பை தமது பாடல்களில் எடுத்தாண்டுள்ளனர். தாயங்கண்ணனாரின் (அகநானூறு 149 வது) பாடலும் பரணரின் (புறநானூறு 343 ஆம்) பாடலும் எடுத்துக் காட்டுகளாகும்.

சேரர்களின் செழிப்பான துறைமுகப்பட்டினமான முசிறியில் யவனர்களின் அழகிய பெரிய கப்பல்கள் பொன்னை ஏற்றி வருகின்றன; திரும்பும்பொழுது மிளகு மூடைகளை ஏற்றிச் செல்கின்றன என்று கூறும்

"..........................................சேரலர்
சுள்ளியம் பேரியாற்று வெண்நுரை கலங்க
யவனர் தந்த வினைமான் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி......................." (அகம் 149)

பாடல் வரிகள் (8 - 12) சிறந்த சான்றாக விளங்குகின்றன. 'யவனப் பிரியா' என்றழைக்கப்பட்ட சேர நாட்டு விளைபொருளான மிளகு, மேலைநாட்டுக் கப்பல்களில் நிறைக்கப்பட்டு, தமிழகத் துறைமுகங்களி-லிருந்து புறப்பட்டுச் சென்றன.

வீடுகளில் வாங்கப்பட்ட மிளகு மூடைகளை ஏற்றிய படகுகள், கரையிலிருந்து புறப்பட்டு, கடலின் ஆழமான பகுதியில் நின்றிருக்கும் கப்பல்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன என்பதனை

"மனைக்குவைஇய கறிமூடையால்
கலிச்சும்மைய கரைகலக் குறுத்து
கலந்தந்து பொற் பரிசம்
கழித் தோணியாற் கரை சேர்க்குந்து"

என்ற பரணரின் (புறநானூறு 343 ஆம்) பாடல் வரிகள் விளக்குகின்றன.

யவனக் காவலாளிகள் பலர், பாண்டிய மன்னன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனின் கோட்டை வாயிலைக் காத்து நின்ற செய்தியை சிலப்பதிகாரம் (மதுரைக் காண்டம், ஊர் காண்காதை, வரிகள் 66 -67

கடிமதில்வாயில் காவலிற் சிறந்த அடல்வாள் யவனர்க்கு அயராது புக்கு : ஆங்கு) செப்புகிறது. பதிற்றுப் பத்து (2 ஆம் பத்தின்) பதிகத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனால் யவனர்கள் சிறை செய்யப்-பட்டமையை அறிய முடிகிறது. (வரி 7-8 : பேரிசை மரபின் ஆரியர் வணக்கி நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து). எனினும் அதற்குரிய காரணம் அறியவியலவில்லை.

யவனர்களின் தோற்றத்தையும் பிறவற்றையும் முல்லைப்பாட்டு (59 -66 வரிகள்) விவரிக்கின்றன.

“மத்திகை வளைஇய மறிந்து வீங்கு செறிவு உடை,
மெய்ப்பை புக்க வெரு வரும் தோற்றத்து
வலி புணர் யாக்கை வன்கண் யவனர்
புலித் தொடர் விட்ட புனை மாண் நல்இல்”

(பொருள் : குதிரைச் சவுக்கை இடுப்பில் சுற்றி அதனை மறைத்து ஆடையணிந்து அச்சம் தரும் தோற்றத்தையும், வலிமை பொருந்திய உடலையும் கொண்ட யவனர்கள் செய்த புலிச் சங்கிலியால் அலங்கரிக்கப்பட்ட நற்பாடி இல்லம்)

சங்ககாலத் தமிழகத்தின் மேலைக் கடற்கரையில் நறவு, தொண்டி, மாந்தை, முசிறி, வைக்கரை, மேல் கிந்தா, விழிஞம் ஆகியவைகளும் கீழ்க்கரையில், கொல்லத்துறை, எயிற்பட்டினம் அரிக்கமேடு, புகார், தொண்டி (கீழைக் கடற்கரையிலும் மேலைக் கடற்கரையிலுமாக இரண்டு தொண்டிகள் இருந்துள்ளன) மருங்கூர்ப் பட்டினம், கொற்கை, குமரி, மாவிலங்கை (தற்கால மகாபலிபுரம்) ஆகியவைகளும், அக்காலத்தில் சிறந்த துறைமுகப்பட்டினங்களாக விளங்கின என்பதை இலக்கியம் மற்றும் அகழாய்வுச் சான்றுகளின் மூலம் அறிய முடிகிறது.

## பாம்பிளியா — ஆஸ்பெண்டாஸ் (PAMPHYLIA–ASPENDOS)

அண்மையில் இக்கட்டுரை ஆசிரியருக்கு, கி.மு.4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அரிய கிரேக்க வெள்ளி நாணயம் (ஸ்டேட்டர்) ஒன்று கிடைத்துள்ளது. ஆஸ்பென்டாஸ் என்பது ஆசியாமைனதிலிருந்த-தொரு கிரேக்க நகரமாகும்.

## ‘ஸ்டேட்டர்’ கிரேக்கக் காசின் விபரம்

| | | |
|---|---|---|
| கிடைத்த இடம் | : | மகாபலிபுரம் |
| உலோகம் | : | வெள்ளி |
| வடிவம் | : | வட்டம் |

| | | |
|---|---|---|
| அளவு | : | 2.4 செ.மீ. விட்டம்<br>3.2 மி.மீ. கனம் |
| எடை | : | 9.0 கிராம் |
| முன்புறப் பொறிப்பு | : | இரண்டு மற்போர் வீரர்கள் சண்டை செய்வது போன்ற பொறிப்பு<br>(அநேகமாக இது ஆஸ்பென்டோஸ் நகரிலிருந்த ஒரு வெண்கலச் சிலையின் வடிவமைப்பாக இருக்கலாம்) |
| பின்புறப் பொறிப்பு | : | கவண்வீசும் வீரரின் உருவம் மற்றும் 'ESTVEDIYS' என்ற உச்சரிப்பில் கிரேக்க மொழி, பாம்பிலியன் வரிவடிவத்தில் உள்ள 'ஆஸ்பென்டோஸ்' பெயர் பொறிப்பு : மற்றும் TRISKELES என்ற மூன்று கால் வடிவம். இவ்வடிவம் பண்பாடு மற்றும் காலகட்டத்தை குறிக்கும் அடையாளமாகவும் கொள்ளலாம். |

கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் தமிழர்களுக்கும் கிரேக்க அயோனியர்களுக்கும் நெருங்கிய வணிகத் தொடர்பு இருந்தமைக்கு தமிழகத்தின் பழம்பெரும் துறைமுகப்பட்டினத்திலிருந்து கிடைத்த இக்காசு ஒரு சிறந்த சான்றாக அமைகிறது.

"ஆசியா மைனரின் பண்டைய அரசான லிபியாதான். கி.மு. 7 ஆம் நூற்றாண்டில் முதன்முதலாக நாணயங்களை உருவாக்கியது...... கிரேக்க நாணயங்கள் அக்காலத்தில் உலகம் முழுமைக்கும் (வணிகத்திற்கு) அங்கீகரிக்கப்பட்ட நாணயங்களாக விளங்கின." (நாணயங்கள்– ரிச்சர்ட். எல். லெய்சென் ரிங், கோல்டன் பிரஸ், நியூயார்க்)

"கி.மு. 4 ஆம் நூற்றாண்டு முதல் கி.மு.2 ஆம் நூற்றாண்டு வரை கிரேக்கம் முழுவதிலும் பலவகைப்பட்ட நாணயங்கள் தயாரிக்கப்பட்டன. அவைகளைப் பரிசீலிக்கும்பொழுது, இப்பொழுது தயாரிக்கப்படுவது போல மிக அழகியதாகவும், நல்ல வடிவமைப்புடனும் விளங்குகின்றன" (காசுகளை சேகரிப்போம் – கென் ப்ரஸ்ஸெட், வொயிட் மேன் பப்ளிஷிங் கம்பெனி, ராக்சின் விஸ்கான்சின்)

இம்மேற்கோள்கள் இங்கு எடுத்துக்காட்டியுள்ள கிரேக்க நாணயத்தின் வடிவமைப்பிற்குச் சான்றளிப்பதாக உள்ளன.


- தமிழில் ப. சீனிவாசன்.



# சங்க காலச் சேரரின் அரிய பொற்காசு

பேராசிரியர். க.ஆ. திருஞானசம்பந்தம்

ஒரு நாட்டின் பொருள் வளம் சிறக்க அந்நாட்டின் வெளிநாட்டு வாணிகம் உச்சம் பெற்றிருப்பது காலத்தின் தேவை எனப் பொருளியல் கோட்பாடுகள் கூறும். வாணிகத்தால் உரோம நாட்டை வற்றவைத்தது தமிழகம் என மேல்நாட்டு அறிஞர்கள் கூறுவர். எனவே வெளிநாட்டு வணிகம் சிறக்க கடற்கலங்களும் நீண்ட கடலும் துறைமுகங்களும் இயற்கையாகவே சங்ககாலத் தமிழகத்தில் அமைந்திருந்தன. கடல் வளம், நாட்டின் பொருளியலை மிகுதியும் மாற்றியது என்பதை (தொல்காப்பியம் – பொருள் – அகம் 34) சுட்டுகிறது. ஒரு நாட்டின் தொழில் வளத்திற்கு உற்ற துணையாகக் கப்பல் கட்டும் தொழிலும் சிறந்திருக்க வேண்டும். சங்க இலக்கியங்களில் மரக்கலங்களின் பெயர்கள் நாவாய், வங்கம், பஃரி, அம்பி, திமில், தோணி எனச் சுட்டப்படுகின்றன. (அகம் 187, நற் 74, 131, 388 புறம் 343) பதிற்றுப்பத்து 52, பட்டினப்பாலை 172–174) பலவகை மரக்கலங்கள் தமிழகத்தில் பயன்படுத்தப்பட்டன என்பதை "எரித்திரியக் கடற்செலவு" என்ற யவன நூலும் குறிப்பிடுகிறது.



சங்க காலச் சேர நாட்டில் மிகச் சிறந்த துறைமுகம், முசிறித் துறைமுகம் எனக் கடற் செலவு குறிக்கிறது. யவனர்களின் கலங்கள் பேரியாற்றின் வழியாக இம் முசிறித்துறைக்கு வந்தன என்று அகப் பாட்டு (149 : 9) கூறுகிறது.

மதுரைக் காஞ்சியும், பட்டினப்பாலையும் மேற்றிசையிலிருந்து கலங்கள் பொன்னைச் சுமந்து வந்தன என்பதைக் கூறுகின்றன. அண்மைக் காலத்தில் கிடைத்துள்ள சங்க காலக் காசுகள் பல சேரருடயவை. (கரூர் அமராவதி ஆற்றில் – ஆற்றுப் படுகையிலும், பேரூர் காஞ்சி மாநதியிலும் கிடைத்த அரிய காசுகள் தமிழர் வாணிகத்தின் எச்சங்களாக அமைபவை).

## அரிய செம்பொன் கப்பல் காசு

அண்மையில் கரூர் அமராவதி ஆற்றுப்படுகையிலிருந்து மண்காசு எடுப்போரால் தரப்பட்ட ஓர் அரிய பொற்காசின் முகப்பில் ஒரு பாய்மரக் கப்பல் சின்னமும் மறுபுறத்தில் அம்பு தொடுக்கப்பட்டுள்ள நாண் ஏற்றிய வில் சின்னமும் குறிக்கப்பட்டுள்ளன. இது இருபுறமும் அச்சடிக்கப்பட்டுள்ள மாற்றுக் குறைந்த பொற்காசாகும். இக்காசு எந்தச் சேர மன்னனால்

செலாவணிக்கு வெளியிடப்பட்டது என்பதைத் திட்டவட்டமாகக் கூற இயலாத நிலையில் உள்ளோம். காசில் மன்னனின் பெயர் பொறிக்கப்படாமையே இதற்குக் காரணம். ஒரு வேளை வெல்கெழு குட்டுவன் அல்லது சிலம்பு புகழ் பாடும் செங்குட்டுவன் வெளியிட்ட காசாகலாம். இது முடிந்த முடிபன்று. நாணயவியலாரின் ஆய்வுக்குரியது!

நூற்றுவர் கன்னர் எனச் சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகளார் குறிக்கும் ஆந்திர சாதவாகனரைப் போல, சேரன் செங்குட்டுவனும், கப்பல் சின்னம் பொறித்த பொற்காசினை, யவனர் உறவால் வெளியிட்டிருக்கலாம்.

## காசின் விளக்கம்

| | | |
|---|---|---|
| கிடைத்த இடம் | : | கருவூர் அமராவதி ஆற்றுப்படுகை |
| உலோகம் | : | மாற்றுக் குறைந்த பொன் |
| வடிவம் | : | வட்ட வடிவம் 72 செ.மீ., நிறை 21 கிராம் |
| முகப்பில் | : | ஒற்றைப் பாய்மரக் கப்பல் |
| புறத்தில் | : | வில் அம்பு பூட்டிய நிலையில் |

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

# பழங்காசு

*நாணயவியல், வரலாற்றியல், காலாண்டிதழ்*

1/385, சீதக்காதி தெரு, காட்டூர் (தெற்கு), திருச்சிராப்பள்ளி – 620 019.

*சிறப்பாசிரியர்:* வரலாற்று வித்தகர் கருவூர் **ம. இராசசேகர தங்கமணி** M.A.,

*ஆசிரியர் : மரு.* **சுசீலாதேவி சீனிவாசன்**

அறிவுரைஞர்கள்

கலைமாமணி பேரா. **சாலமன் பாப்பையா** மதுரை

முனைவர் மரு. **இரா. கலைக்கோவன்,**

நிறுவனர் டாக்டர். *மா. இராசமாணிக்கனார்* வரலாற்று ஆய்வு மையம் திருச்சிராப்பள்ளி

முனைவர் **பே.க. வேலாயுதம்,**

நிறுவனர் 'தமிழ்க்கோட்டம்', புதுக்கோட்டை.

பேரா. **க.ஆ. திருஞானசம்பந்தம்,**

நிறுவனர் கொங்கு நாணயவியல் ஆய்வுமையம், ஈரோடு.

ஸ்தபதி **வே. இராமன்,**

அரசு தொல்லியல் துறை, திருச்சிராப்பள்ளி.

திரு. **ப. சீனிவாசன்,**

நிறுவனர் திருச்சிராப்பள்ளி நாணயவியல் கழகம்

சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் **ம.தி. சோழர்,** திருச்சிராப்பள்ளி.




# கோழியர்கோன் கோப்பெரும் சோழனின் 'கோழிக்காசு'

பேராசிரியர். க.ஆ. திருஞானசம்பந்தம்

சங்க கால இலக்கியங்களின் கால எல்லை கி.மு. 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 3 ஆம் நூற்றாண்டுவரை என இலக்கிய நெறியாளர் குறிப்பிடுவர். கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் முகிழ்த்த தொல்காப்பியம் நாடாண்ட சேர, சோழ, பாண்டிய வேந்தர்களை 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' (தொல். செய்யுளியல் சூத்திரம் 79) எனக் குறிக்கும்.

## தமிழக வேந்தர்களை அறியக் காசுகளின் பங்கு



அண்மைக் காலத்தில் தமிழக ஆறுகளான வைகை, அமராவதி, தென்பெண்ணை முதலான ஆற்றுப் படுகைகளில் "மண் காசு எடுப்போரால்" எடுக்கப்பெற்ற வெள்ளி, செப்புக் காசுகளில் பொறிக்கப் பட்ட மூவேந்தர்களின் குலமரபுச் சின்னங்கள், தமிழ் எழுத்தில் பதிக்கப்பெற்ற வேந்தர்களின் பெயர்களைக் கொண்டு நாடாண்ட அந்நல்லவர்களின் புகழ்ப் பரணியை அறிய அரிய வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக நாணயவியலார் ஒரு சிலரிடம் சேகரிக்கப்பெற்றிருக்கும் காசுக் குவியலைக்கொண்டு, பெருவழுதி, காரி, கொல்லிப்பொறை, கொல்லிரும்பொறை, மாக்கோதை, குட்டுவன் முதலிய சங்ககால வேந்தர்கள் பற்றிச் சங்க இலக்கியங்கள் கூறும் செய்திகள் வரலாற்று உண்மையே; வெறும் புகழ்ச்சி இல்லை என்பதை அக்காசுகள் மெய்ப்பிக்கின்றன. அக்காசுகள் ஆற்றங்கரை நாகரிகத்தின் எச்சங்கள் எனலாம்!

## கோழியர்கோன் கோப்பெருஞ்சோழன்

நாணயச் சேகரிப்பாளரிடமோ அல்லது தமிழக அகழ்வாராய்ச்சியிலோ இந்நாள்வரை சங்க காலச் சோழ மன்னரின் திருவுருவப் பொறிப்புடைய காசுகள் கிடைக்கவில்லை! அண்மையில் கரூர் அமராவதி ஆற்றுப் படுகையில் இருந்து ஒரு சிறு வட்டவடிவமான செப்புக் காசை மண் காசு எடுப்பவரிடமிருந்து, கட்டுரையாளர் சேகரித்துள்ளார்.

இச்சிறிய செப்புக்காசில் வடக்கிருந்து தன் இன்னுயிர் ஈந்த புலவரால் பாடப்பெற்ற கோப்பெருஞ்சோழனுடைய பெயர் பொறிக்கப்பெற்றிருக்கிறது.

இச்சோழன் உறையூரை ஆண்டவன். மாறுபட்ட மக்களோடு பொற எழுந்தபோது, புலவர். புல்லாற்றூர் எயிற்றியனாரால் அமைதிப்படுத்தப் பட்டபோது, வடக்கிருந்து இன்னுயிர் நீத்த காவலன்! புலவர் பிசிராந்தையார், தாம் பாடிய புறநானூற்றுப் பாடல்களில் வேந்தனை "கோழியோனே கோப்பெருஞ்சோழன்" எனவும், அவன் மாடநகர்" "கோழி" எனவும் சுட்டியுள்ளார் (புறநானூற்றுச் செய்யுள் எண் 67; வரி 8; புறம் செ. 212; வரி 8) சோழன் உறைந்த உறையூரை "கோழி" எனவும், கோழியை ஆண்டமையால் கோழியர்கோன் கோப்பெருஞ்சோழன் எனவும் பாராட்டியுள்ளார். காசின் முகப்பில் தமிழ் எழுத்தில் (கோழி) என்னும் பொறிப்பு அவன் தலைநகர் அல்லது அவன் பெயரைச் சுட்டுவதாக அமைகிறது!

## காசின் விளக்கம்

| | | |
|---|---|---|
| கிடைத்த இடம் | : | கரூர் அமராவதி ஆற்றுப்படுகை |
| உலோகம் | : | செம்பு |
| வடிவம் | : | வட்டம் |
| அளவு | : | 1 x 1 செ. மீ. |
| நிறை | : | .770 கிராம். |
| முகப்பு | : | வலப்பக்கம் திரும்பிய நிலையில் மன்னனின் உருவம்; காதணி சாதவாகன மன்னர்களின் காதணி போல. நெளிவு சுழிவான கவின் திருமுடி. இடப்புறம் காசின் விளிம்பை ஒட்டி தமிழ் எழுத்துப் பொறிப்பு. |
| காசின் புறத்தில் | : | காசின் கீழ் வலப்புறம் நோக்கிப் பாயும் புலியின் உருவம்; புலியின் மேல் மூன்று முகடுள்ள மலைச் சின்னம். இக்காசு அச்சடிக்கப்பெற்ற காசு வகையைச் சார்ந்தது. காசில் காணப்பெறும் எழுத்தமைதி கொண்டு காலம் கி.மு. 3 அல்லது 2–ஆம் நூற்றாண்டு எனக் கருதலாம். இவ்வெழுத்துகள் தமிழகக் குகை எழுத்து வகையைச் சேர்ந்தவை. |


எமக்கு வந்த இதழ்கள் **நாளைவிடியும்**, திருச்சி–14; **முங்காரி**, கோவை–7; **புதிய தடம்**, இராமேசுவரம்; **யாதும் ஊரே**, சென்னை–75; **ஏர்**, மதுரை–21; **தமிழாட்சி**, புதுச்சேரி–5; **தன்முன்னேற்றம் நம் பிறப்புரிமை**, சென்னை–48; **உங்கள் பாரதி**, புதுச்சேரி–10; **ஏழைதாசன்**, புதுகை–2; **முகம்**, சென்னை–78; **இறக்கை**, விஜயமங்கலம்; **பெண்ணியக்குரல்**, புதுகை; **அன்னம்**, கீழமுடிமன்; **கண்ணியம்**, சென்னை–82; **செம்பருத்தி**, கோலாலம்பூர், மலேசியா.



# காளிங்கநர்த்தனர் காசு

மு. துரைராசு, எம்.ஏ.,

## மதுரை நாயக்க மன்னர்களின் நாணயங்கள் (கி.பி. 1529-1736)



மதுரையின் முதல் நாயக்கர் மன்னரான விசுவநாதர் ஆட்சிக் காலம் தொடங்கி இறுதியாக ஆட்சி செய்து மறைந்த மீனாட்சி அரசி காலம் வரை ஒவ்வொரு மன்னர்கள் காலத்திலும் வெவ்வேறு வகையான நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் பெறும்பகுதி காசுகள் சமய அடிப்படையில் வெளியிடப் பட்டுள்ளன. வைணவக் கடவுள்களான மகாவிஷ்ணு, மகாலெட்சுமி, கெஜலெட்சுமி, புல்லாங்குழல் கண்ணன் உருபொறித்த நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதுபோன்று சைவ கடவுள்களான சிவன், பார்வதி, சிவபார்வதி, விநாயகர், முருகன், மயில், லிங்க உருவங்கள் பொறித்த நாணயங் களும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், மன்னர்களின் பெயரும், அரசு இலட்சினையான காளைச் சின்னமும் பொறித்த நாணயங்களும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், முன்புறம் எழுத்துக்கள் மட்டும் உள்ள நாணயங்களும், முன்புறம் மட்டும் உருவம் பொறித்த நாணயங்களும் வெளிவந்துள்ளன. தமிழ், தெலுங்கு, கன்னடம், நாகரி, ஆகிய மொழிகளில் சைவம், வைணவம் ஆகிய கடவுள்களின் திருஉருவங்களில் வெளியிடப்பட்ட இந்நாணயங்களால் நாயக்க மன்னர்களது ஆட்சிக் காலம் மொழி, சமயம், ஆகியவற்றின் ஆதிக்கமற்ற, வேறுபாடுகள் இல்லாத, பொறையுடைய ஆட்சிக் காலமாக விளங்கியுள்ளதை அறியலாம். மதுரை நாயக்க மன்னர்களின் ஆட்சிகாலத்தில் வெளிவந்த வைணவ சமயக் கதையினைக்கூறும் காசு ஒன்றினைப்பற்றி இங்கு ஆய்வோம்.

## காளிங்க நர்த்தனர் கதை

கம்சன் தன்னைக் கொல்வதற்காகப் பிறந்த குழந்தை கண்ணனை அழிக்கும் பொருட்டு கோகுலத்தில் காளிங்கமடு என்ற நீர் தடாகத்தில்

காளிங்கன் என்ற கொடிய ஐந்து தலை கொண்ட நச்சுப் பாம்பை ஏவிவிட்டுக் கொண்டு இருந்தான். காளிங்கன் தன் கொடிய நஞ்சை அவ்வப்போது உமிழ்வதன் மூலம் உயிர்களுக்குச் சேதம் ஏற்படுத்தி வந்தது. அதனால் அங்கு மாடு கன்று மேய்த்து வந்த யாதவர் துன்பம் தாளாது கண்ணனிடம் முறையிட்டனர்.

யமுனா நதியின் மேல் கரையில் அமைந்துள்ள அழகிய நகரான மதுராபுரியில் கண்ணன் வேய்ங்குழல் இசைத்தும், மகுடி வாசித்தும் காளிங்கனை மயக்கமுறச்செய்து காளிங்கனின் தலைகளின்மீது நடனமாடி இடதுகையில் வாலைப்பிடித்து உயர்த்தி, அதன் வேகத்தையும், பலத்தையும் அடக்கி வலது கையால் உலகைக் காத்தருளி யாதவ குலத்தையும் காப்பாற்றினார். இக் கதையின் மையக் கருத்தை உணர்த்தும் காளிங்க நர்த்தன உருவவழிபாடு வைணவ ஆலயங்களில் இன்றும் நடப்பதை நாம் காண்கிறோம். இக் காளிங்கநர்த்தன உருவத்தினை உடைய அரிய காசு ஒன்று மதுரை நாயக்கர்களின் ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

## காளிங்கநர்த்தனர் காசு

இக் காசு மதுரை வைகையாற்றங்கரையில் பெருமளவில் கிடைத்துள்ளதாலும், இக்காசின் வடிவமைப்பு, உருவ அமைப்பு, எடை, உலோகம் ஆகியவை மதுரை நாயக்கர்கள் வெளியிட்ட பல்வேறு காசுகளோடு ஒன்றுபடுவதாலும், இக்காசின் பின்புறத்தில் உள்ள ஸ்ரீவீர என்ற தெலுங்கில் எழுதப்பட்டுள்ள எழுத்தமைதியானது இதற்கு முன் கண்டறியப்பட்ட ஆடல்வல்லான் காசு போன்ற பல்வேறு காசுகளோடு ஒப்பிடும்படியாக உள்ளதாலும் இக்காசு மதுரை நாயக்கர் காசு என நம்மால் அறியமுடிகிறது.

## காசின் அமைப்பு விவரம்

| | | |
|---|---|---|
| 1. காசு கிடைத்த இடம் | – | வைகையாறு, மதுரை |
| 2. காலம் | – | மதுரை நாயக்கர் ஆட்சிக் காலம் |
| 3. உருவம் | – | வட்டம் |
| 4. உலோகம் | – | செம்பு |
| 5. எடை | – | 1.1 கிராம் |
| 6. விட்டம் | – | 1 செ.மீ. |
| 7. கனம் | – | 1 மி.மீ. |
| 8. முகப்பு | – | காளிங்கநர்த்தனம் |
| 9. புறம் | – | ஸ்ரீவீர (தெலுங்கு மொழியில்) |

ஆய்வுக்குத் துணைநின்ற நூல்கள்:
1. மதுரை நாயக்கர் வரலாறு–அ.கி. பரந்தாமனார்
2. பாகவத புராணம்
3. ஆடல்வல்லான் காசு கட்டுரை(1976)–மு. துரைராசு



# இலங்கைத் தமிழரின் பண்டைய நாணயங்கள் காட்டும் முருக வழிபாடு

கலாநிதி. பரமு. புஷ்பரட்ணம், யாழ்ப்பாணம்

இலங்கை மதங்களுள் இந்து மதத்திற்கு மிகத் தொன்மையான வரலாறு உண்டு. இதன் தொடக்க காலச் சான்றாகப் பெருங்கற் காலப் பண்பாட்டு (கி.மு. 800இல் இருந்து) மட்பாண்டங்களில் பெறப்பட்ட குறியீடுகள், சுடுமண் பாவைகள், இலிங்க வடிவங்கள், உலோகச் சின்னங்கள் விளங்குகின்றன. கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பௌத்த மதத்தின் அறிமுகம் அம்மதம் அரச ஆதரவுடன் மிகக் குறுகிய காலத்தில் இலங்கையில் வளர்ச்சியடையக் காரணமாகியது. அதனால் இந்து மதம் தனது தனித்துவத்தை இழந்ததெனக் கூறமுடியாது. இந்து மதத்திற்கு எதிராகப் பௌத்த மத வரலாற்றை முதன்மைப்படுத்திக் கூறும் பாளி இலக்கியங்கள் கூட இக்காலத்தில் இலங்கையில் இருந்த இந்து ஆலயங்கள் பற்றியும், அம்மதத்திற்கும் தமிழ் மன்னர்களுக்கும் இடையிலான உறவு பற்றியும் பல இடங்களில் எடுத்துக் கூறுகின்றன (*Mahavamsam X:102, XIX:37, XXI:1 21, XXII:3 4*). இதை மேலும் எடுத்துக் காட்டும் சான்றுகளில் ஒன்றாக இலங்கைத் தமிழ் மன்னர்களும், மற்றையோரும் வெளியிட்ட நாணயங்கள் விளங்குகின்றன.

பண்டைய கால வரலாற்றை அறிய உதவும் நம்பகரமான வரலாற்று மூலாதாரங்களில் நாணயங்களும் ஒன்றாகும். இவற்றை வரலாற்றாய்வுக்குப் பயன்படுத்தும் மரபு ஐரோப்பியரிடையே பதினெட்டாம் நூற்றாண்டளவில் உணரப்பட்டாலும், இந்தியாவில் அதிலும் குறிப்பாக இலங்கையில் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்தே ஓரளவு ஏற்பட்டதெனக் கூறலாம். இவை கல்வெட்டுக்களைப் போல் விரிவான வரலாற்றுத் தகவல்களைத் தராவிட்டாலும், அவற்றால் அறியப்படும் செய்திகள் பெருமளவுக்கு நம்பகரமானவை. இலங்கைத் தமிழர்கள் கி.மு.3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.17 ஆம் நூற்றாண்டு வரை காலத்திற்குக் காலம் பலவகை நாணயங்களை வெளியிட்டு வந்துள்ளனர் என்பதற்கான சான்றுகள் அண்மைக் காலத்தில் கிடைத்துள்ளன (புஷ்பரட்ணம் 2001). இவை அவர்களது பண்டைய கால மொழி, எழுத்து, அரச உருவாக்கம், குடியிருப்பு, வர்த்தகம், அயல்நாட்டுறவு போன்ற பல அம்சங்களை அறியப் பெரிதும் உதவுகின்றன. இவற்றில் பல வகையான குறியீடுகள், சின்னங்கள், தெய்வ வடிவங்கள், தெய்வப் பெயர்கள் இடம்

பெற்றுள்ளன. இவை, நாணயங்களை வெளியிட்ட மன்னர்களதும், அவர்கள் ஆட்சிக்குட்பட்ட மக்களதும் சமய நிலையையும் பிரதிபலிப்பதாக எடுத்துக்கொள்ளலாம். அவற்றுள் முருக வழிபாட்டுடன் தொடர்புடைய வாகனம், ஆயுதம், சின்னங்கள், தெய்வப் பெயர்கள் என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. அவற்றின் அடிப்படையில் பண்டைய கால இலங்கைத் தமிழரின் முருக வழிபாடு பற்றி இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.


தமிழருக்குரிய தனித்துவமான வழிபாடுகளில் ஒன்றாக முருக வழிபாட்டைக் கொள்ளும் மரபு நீண்ட காலமாக இருந்து வருகிறது. சங்க இலக்கியத்தில் வரும் “முருகு” (அகநானூறு : 22 11, புறநானூறு 56:11, நற்றிணை 47:10) “செவ்வேள்” (மதுரைக் காஞ்சி 611, நற்றிணை 34, குறுந்தொகை 53:3), „மஞ்சையன்” (திருமுருகாற்றுப்படை 210), „விரைமயில் மேல் ஞாயிறு” (பரிபாடல் 18:26) என்ற சொற்றொடர்கள் முருக வழிபாட்டுடன் தொடர்புடையன. இம்முருகன் வழிபாடு வட இந்திய வழிபாட்டுடன் இணைந்து காலப்போக்கில் “குமர”க் கடவுள் என்ற பெயரையும் பெற்றது.

தமிழகத்தைப் போல் இலங்கையிலும் இவ்வழிபாடு மிகத் தொன்மையானது. இதன் தொடக்க காலச் சான்றுகளாக தமிழகத்தில் ஆதிச்ச நல்லூர் பெருங்கற்காலப் பண்பாட்டில் கிடைத்தது போல் இலங்கையில் பொம்பரிப்பு, அநுராதபுரம், பின்வேவ, கந்தரோடை, பூநகரி ஆகிய இடங்களில் பெறப்பட்ட வேல், சேவல் சின்னங்கள் விளங்குகின்றன (சிற்றம்பலம் 1995:182, புஷ்பரட்ணம் 1991:38). கி.பி.5 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பாளி இலக்கியங்களிலும், பிராமிக் கல்வெட்டுகளிலும் அக்காலச் சமூகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பலதரப்பட்ட மக்களுடைய பெயர்கள் காணப்படுகின்றன. எந்த சமுதாயத்திலும் ஆள் பெயர்கள் சில அடிப்படைக் கோட்பாடுகளை வைத்தே பெயரிடப்படுவதாகக் கூறும் பேராசிரியர் சுப்பராயலு அப்பெயருக்கும் அவை பிரதிபலிக்கும் சமய நம்பிக்கைக்கும் இடையிலான தொடர்பைச் சான்றாதாரம் காட்டி விளக்குகிறார் (1989:92 103) பரணவிதான இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் ஆட்பெயர்களை மத அடிப்படையில் வேறுபடுத்தி அவற்றை பௌத்த இந்துக் கடவுளரோடு தொடர்புபடுத்திப் பார்க்கிறார் (1970:CXXIII). அப்பெயர்களில் சில முருக வழிபாட்டுடன் உள்ள தொடர்பைக் காட்டுவதாக உள்ளன. அவற்றுள் வேல் என்ற பெயர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது (Paranavithana 1970:nos) இது சங்க இலக்கியத்தில் வரும் வேலன் வழிபாட்டை நினைவுபடுத்துவதாக உள்ளது. தமிழகத்தில் எப்படி வடஇந்திய வழிபாட்டுக் கலப்பால் முருகன் குமரன் என்ற

பெயரில் வழிபடப்பட்டதோ அதேபோல் பௌத்த மதத்தின் வருகையைத் தொடர்ந்து ஏற்பட்ட இலங்கை, வட இந்தியத் தொடர்பால் முருக வழிபாட்டிலும் சில மாறுதல்கள் ஏற்பட்டதை குமர, மகாசேனன், விசாக போன்ற பெயர்கள் எடுத்துக் காட்டுகின்றன. இதில் „விசாக" என்ற பெயர் வட இலங்கையில் பெரியபுளியங்குளம் என்ற இடத்தில் உள்ள கி.மு.2 ஆம் நூற்றாண்டுக்குரிய இரு கல்வெட்டுக்களில் தமிழ் வணிகர்களுக்குரிய ஒரு பெயராகக் குறிப்பிடப்பட்டுள்ளது (Paranavithana 1970: Nos.356-357) இதையொத்த பெயர் தமிழகத்தில் கொடுமணல் அகழ்வாய்வின் போது பெருங்கற்கால மட்பாண்டத்தில் பெறப்பட்டுள்ளது (Rajan 1994:82). பேராசிரியர் பரணவிதான இப்பெயருக்குரியவர்களை முருக (ஸ்கந்த) வழிபாட்டுடன் தொடர்புடையவர்களாகக் கருதுகிறார் (1970:CX XII) இப்பின்னணியில் நாணயங்களில் வரும் முருக வழிபாட்டுடன் தொடர்புடைய சான்றுகளை நோக்கலாம்.




தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற இடத்தில் கிடைத்த கி.பி. 2 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நாணய-மொன்றின் முன்புறத்தில் மயில் சின்னமும், பின்புறத்தில் தமிழ்ப் பிராமி எழுத்தில் மகாசாத்தன் என்ற பெயரும் காணப்படுகின்றது (Bopearachchi 1999:54)



வட இலங்கை – கந்தரோடையில் கிடைத்த (Seyone 1998) இதே காலப்பகுதிக்குரிய இன்னொரு நாணயத்தின் முன்புறத்தில் ஸ்ரீவத்ஸாவும், பின்புறத்தில் மயில் சின்னத்துடன் தமிழ்ப் பிராமி எழுத்தில் உதி(ஹ)பன் என்ற பெயரும் காணப்படுகிறது (Pushparatnam 2001) (படம் 2).

இவற்றில் இடம்பெற்றுள்ள ஸ்ரீவத்ஸ, மயில் சின்னங்கள் நாணயங்களை வெளியிட்ட தமிழர்களின் சமய நம்பிக்கையை பிரதிபலிப்பதாகக் கொள்ளலாம். இதில் இடம்பெற்றுள்ள மயில் முருக வழிபாட்டை நினைவுபடுத்துகிறது. பண்டு தொட்டு முருகனுடைய வாகனங்களில் ஒன்றாக மயில் இருந்ததற்கு புறநானூறு (65:7 8), திருமுருகாற்றுப்படை (210), பரிபாடல் (18:26) கந்தபுராணம் (4:13.376-381) போன்ற தமிழ் இலக்கியங்களில் சான்றுகள் உள. இதனால் நாணயங்-களில் இடம்பெற்றுள்ள மயில் சின்னம் அவற்றை வெளியிட்டவர்கள் முருக வழிபாட்டில் ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதைக் காட்டுவதாக எடுத்துக் கொள்ள இடமுண்டு.

கி.மு. 2 – கி.பி. 5 ஆம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்ட காலத்தில் இலங்கைக்கேயுரிய தனித்துவமான நீள் சதுர நாணயங்கள் புழக்கத்தில் இருந்துள்ளன. இவற்றில் ஓம் என்ற வேதமந்திரம், ஸ்ரீவத்ஸம், லக்ஷ்மி, யானை, தாமரை, சூலம், காளை, சிவலிங்கம் போன்ற சின்னங்கள் இடம்பெற்றுள்ளன (*Parkar 1981:461-482, Peries 1919:40-67 Boearachchi 1999: Sitrambalam 1992:151-158.* சிவசாமி *1970:26 36,* கிருஷ்ணராஜா *1983:71 84,* புஷ்பரட்ணம் *2001:90 100)*. இவற்றிலிருந்து இக்காலத்தில் இந்து மதத்திற்கும், நாணயங்களை வெளியிட்ட தமிழர்களுக்குமிடையிலான நெருக்கமான உறவு தெளிவாகத் தெரிகிறது. இந்நாணயங்கள் சிலவற்றில் மயில் சின்னத்துடன் வேல், சேவல் போன்ற சின்னங்களும் இடம் பெற்றுள்ளன. சமகாலத்தில் இவ்வாறான சின்னங்களுடன் முருகனைக் குறிக்கும் பெயர்களும் இந்திய நாணயங்களில் குறிப்பாக வட இந்திய நாணயங்களில் இடம்பெற்றுள்ளன (*Gupta 1969:187*). இதில் வரும் வேல் வெற்றிக் கடவுளான முருகனை "வடிவேலன்" (சிலப்பதிகாரம் 1:2, 49 50), "வெல்வேலான்" (கலித் தொகை. மருதக்கலி 28:26), எனத் தமிழ் இலக்கியங்களில் அழைக்கப்பட்டதை நினைவுபடுத்துகிறது. சேவலை முருகனுடன் தொடர்புபடுத்துவது ஆரியக் கலப்பால் ஏற்பட்ட ஒன்று என்ற கருத்துக் காணப்பட்டாலும் அது பண்டுதொட்டு முருக வழிபாட்டுக்குரிய அடையாளமாகப் பார்க்கப்படுகிறது (காந்திதாசன் 1988:120). இதனால் மேற்குறிப்பிட்ட நாணயங்களில் வரும் இச்சின்னங்கள் முருக வழிபாட்டைக் குறித்ததெனக் கூறலாம்.



இடைக்காலத் தமிழ் நாணயங்களில் வேல், மயில் சின்னங்களுடன் முருகனின் உருவமும், முருகனைக் குறிக்கும் பெயர்களும் இடம்பெற்றிருப்பது சிறப்பான அம்சமாகும். இதற்கு கி.பி. 13 ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 17ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும். இவர்களின் ஆரம்பகால நாணயங்கள் சிலவற்றின் முன்புறத்தில் மன்னன் உருவமும், பின்புறத்தில் நந்தியும், நந்திக்கு முன்னால் நந்தியைப் பார்த்த வண்ணம் சிறிய மயில் சின்னமும், நந்திக்கு கீழே தமிழில் "சேது" என்ற வாசகமும் காணப்படுகின்றன.

(அடுத்த இதழில் நிறைவுறும்)

## புரவலர்கள்

திரு. ஏ.எஸ். நாகேந்திரன்,
பெங்களூர்–52.

திரு. ஏ.எஸ். லோகேஸ்வரன்,
பெங்களூர்–52.

திரு. சாலமன் பாப்பையா
மதுரை–16.

திருமதி. மு. ஜெயந்தி
நெய்வேலி–3.

திரு. ஜி. முத்துசாமி, சென்னை–44.

திரு. லே. சுபாஸ் சந்திரபோஸ்
திருச்சிராப்பள்ளி–1.

திரு. பி. ஆல்பர்ட் ராஸ்
திருச்சிராப்பள்ளி–13.

திரு. இரா. தமிழாதன், கூடலூர்.

திரு. எப். அந்தோணிராஜ்,
திருச்சிராப்பள்ளி–19.

## வாழ்நாள் நன்கொடையாளர்கள்

திரு. இராஜேந்திரதேவன்
திருச்சிராப்பள்ளி–3.

திரு. சி.எம். சுப்ரமணியன்
திருச்சிராப்பள்ளி–6.

திரு. டி. சிதம்பரராஜன்
திருச்சிராப்பள்ளி–26.

திரு. கே.எச் தாசரதி
திருச்சிராப்பள்ளி–3.

பி.எஸ். ஜீஹைனாபைசல்,
அடியக்கமங்கலம், திருவாரூர் மாவட்டம்.

திரு. ஏ. ரெங்கராஜன்
திருச்சிராப்பள்ளி–20.

பேரா. பரமு. புஷ்பரட்ணம்
யாழ்ப்பாணம், இலங்கை.

திரு. என். கஸ்தூரிரெங்கன்
திருவரங்கம், திருச்சிராப்பள்ளி–6.

திரு. வி. பாரதமணி
திருச்சிராப்பள்ளி–14.

திரு. பி. தமிழகன்
திருச்சிராப்பள்ளி–23.

திரு. சி. ராஜ்குமார்
திருச்சிராப்பள்ளி–3.

திரு. ஏ. விக்டர்
திருச்சிராப்பள்ளி–14.

திரு. என். கலியமூர்த்தி
திருச்சிராப்பள்ளி–14.

திரு. டி.ஆர். சிவக்குமாரன்
திருச்சிராப்பள்ளி–8.

## நண்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்

பழங்காசினைச் சீராட்டி வளர்த்தெடுக்க, தாயகத்தின் பெருமைதனைப் போற்றும் உங்களையும் இப்புனிதப் பயணத்தில் எங்களோடு இணைத்துக் கொள்ள விழைகிறோம்.

| | |
|---|---|
| ஓராண்டு நன்கொடை உருபா | **50/-** |
| ஈராண்டு நன்கொடை உருபா | **100/-** |
| வாழ்நாள் நன்கொடை உருபா | **500/-** |
| புரவலர் நன்கொடை உருபா | **1000/-** |

*கேட்பு வரைவோலை (D.D.) **பழங்காசு** பெயரிலும், பணவிடை (M.O.) மட்டும் **சுசீலாதேவி சீனிவாசன்** பெயரிலும் அனுப்ப வேண்டுகிறோம்.*

*பழங்காசு வெளிவர, தொடர்ந்து தொய்வின்றி பணியாற்ற உங்களின் பங்களிப்புகளை விரைந்து அளித்திடுவீர்! மகிழ்ந்து அளித்திடுவீர்!*

*இது ஓர் இலாப நோக்கு இதழல்ல. நாட்டுப்பற்றின் வெளிப்பாடு.*



# பெரிய கருப்பூர் கல்வெட்டு

**Er.** லெ. சுபாஸ் சந்திரபோஸ், D.M.E., B.O.E.,

மாவட்டம் : திருச்சிராப்பள்ளி வட்டம் : திருச்சிராப்பள்ளி

ஊர் : பெரிய கருப்பூர் (ஜீயபுரம் அந்தநல்லூர் பேருந்து நிறுத்து-மிடத்திலிருந்து தெற்கே 4 கி.மீ. தொலைவில் உள்ள ஊர்)

கல்வெட்டு உள்ள இடம் } சிவன் கோவிலின் நுழைவாயிலில் இடது நிலைக்காலில் (வலது நிலைக்காலில் உள்ள கல்வெட்டு முற்றிலும் சிதைந்த நிலையில் உள்ளது)

காலம் : கி.பி. 15ஆம் நூற்றாண்டு.

செய்தி : பிரமாதீச வருடத்தில் திருவகத்தீசுரமுடையனார் கோவில் கட்டியபொழுது நரசநாயக்கர் தர்மம் அளித்தார். அந்த தர்மத்துக்கு துரோகம் செய்தவர்கள் கங்கைக் கரையில், அன்னை தந்தையையும் காராம் பசுவையும் கொன்ற பாவத்தில் போவார்கள் என்ற செய்தி இக்கல்வெட்டில் உள்ளது. இக்கல்வெட்டில் கூறப்படும் நரசநாயக்கர், விசயநகர மன்னர் சாளுவ நரசிம்மரின் அமைச்சரும் படைத்தலைவருமான துளுவ மரபைச் சார்ந்த நரச நாயக்கராக இருக்கலாம் என்று கருத இடமுண்டு.

பிரமாதீச வ
ஷம் ஆடி மாசம்
ஸ்ரீ மன் மகா மண்
டேலெசுரவிட்டி
ல தெவ மகா
ராசா வி..
............
அபயம் நரச
நாயக்கர் தன்ம
ம் நாயனார் திருவ
கதீசுரமுடைய
நார் தெவ தான
ம் விலாடராயர்

கோயி(ல்)ப்பணி
வணவையிக்
கையில் இந்த
தன்மத்துக்கு அ
கிதம் பண்ணி
னவன கெங்க
கைக்கரையி
லெ மாதா
பிதாவையும்
காராம்பசுவை
யும் கொன்றபா
வத்திலே பொக
க் கடவாநகவும்.



இக்கல்வெட்டு பற்றித் தகவல் தந்தவர்:
திரு. பி. தங்கராசு முத்தரையர், நிலக்கிழார், பெரிய கருப்பூர்
ஆய்வில் ஒத்துழைப்பு : திரு. ப. சீனிவாசன்.



# சக்ர வியூகம்

பாறையில் பொறித்த ஒரு விந்தைக் குறியீடு

Er. லெ. சுபாஸ் சந்திரபோஸ், D.M.E., B.O.E.,

திருச்சிராப்பள்ளி கோயம்புத்தூர் நெடுஞ்சாலையில் காவிரியாற்றின் தென்கரையில் அமைந்துள்ள அந்தநல்லூர் ஜீயபுரம் பேருந்து நிறுத்துமிடத்திலிருந்து தென்திசையில் சுமார் 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள அழகிய சிற்றூர் பெரிய கருப்பூர். இவ்வூரில் ஒரு கற்பாறையில் ('சக்ரவியூகம்' என்று கூறப்படும்) இக்குறியீடு பொறிக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது.

இக்குறியீடு தமிழகம் தவிர பீகார் மாநிலத்திலும் உள்ளதாக அறிய முடிகிறது. அம்மாநிலத்தில் இக்குறியீட்டிற்கு 'சக்ரவியூகம்' என்று பெயர். இச் சக்ர வியூகம் பீகாரிலிருந்து தமிழகம் வந்ததா அல்லது தமிழகத்திலி-ருந்து பீகார் சென்றதா என்பது ஆய்வுக்குரிய ஒன்றாகும். மாந்திரீக, தாந்ரீகங்களுக்கு உரிய குறியீடுகளான 'யந்த்ரங்கள்' பலவற்றைத் தொகுத்து 'யந்த்ரா' (YANTRA) என்றத் தலைப்பில் ஆங்கிலத்தில் வெளியிட்ட திரு. மதுகன்னா அவர்கள், 'சக்ரவியூகத்-தையும்' சேர்த்தே வெளியிட்-டுள்ளார்.



பீகார் மாநிலத்தில் பழங்குடி மக்களின் தலைவர்க-ளாகவும், மத குருமா-ராகவும், மருத்துவர்க-ளாகவும் விளங்கும் ஓஜா (OJHAS)

க்கள், தந்திர, மந்திர, எந்திரங்களில் தேர்ச்சி பெற்றவர்களாகவும், இயற்கை மருத்துவம் மற்றும் மூலிகை மருத்துவத்திலும் பட்டறிவு பெற்றவர்களாகவும் விளங்கி வருகிறார்கள்.

மேலும் அம் மாநிலத்தின் ராஞ்சி (*RANCHI*), பாலமு (*PALAMU*) மாவட்டங்களில் ஓரோன்கள் எனப்படும் திராவிட மொழி பேசும் மக்கள் வாழ்கிறார்கள். இவர்களின் கிராமத் தலைவர் மாட்டோ (*MAHTO*) என்றும், கடவுளுக்குரிய சடங்குகளை செய்பவர் பாகன் (*PAHAN*) என்றும், பாகனுக்கு உதவியாளரை பூஜார் (PUJAR) என்றும் பெயரிட்டு அழைக்-கின்றனர் (பூஜார்-பூஜாரி-பூசாரி?) இந்த ஓரோன்கள் பயிர்த் தொழிலில் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள், இறைவழிபாட்டிலும், தேவ தேவதைகளை வழிபடுவதிலும் முன்னோர்களை வழிபடுவதிலும், மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள். 'சக்தி வழிபாடு' இவர்களிடம் பரவலாகக் காணப்படுகிறது.

வட்டவடிவ கோடுகளுடன் மையத்தில் கூட்டல் (+) குறியுடன் உள்ள இச்சக்கர வியூகம், ஒரு பெண்ணின் கருப்பையை உருவகப்-படுத்துவதாக உள்ளது. கீழ்ப்பகுதி நுழைவாயிலாகவும், மையத்தில் உள்ள குறி, கரு வளர்ச்சியைக் குறிக்கும் 'பிந்து' வாகவும் கொள்ளலாம்.

## மது கன்னாவின் நூல், 'யந்திரா' கூறும் செய்திகள்

பேறுகால வலியினால் அவதிப்படும் பெண்ணின் கவனத்தையும், சிந்தனையையும் ஒருமுகப் படுத்துவதற்காக, அவளின் பார்வையை, சமயகுருவானவர் சக்ர வியூகத்தில் நிலைப்படுத்தச் செய்வார். கூர்மையான பார்வையாலேயே சக்ரவியூகத்தின் நுழைவாயிலின் வழியாகச் சுற்றிச் சுற்றிச் சென்று மையத்திலுள்ள பிந்துவை அடைதல் வேண்டும். பின்பு அதே போன்று பிந்துவில் தொடங்கி சுற்றி சுற்றி வெளியே வர வேண்டும். இவ்வாறு பேறு கால வலியுடன் உள்ளப் பெண்ணின் கவனத்தையும், சிந்தனையையும் ஒருமுகப்படுத்துவதால், தாயாகப் போகும் அப்பெண்ணின் மனவலிமை கூடுகிறது. அதோடு குழந்தைப் பிறப்பு வலி குறைந்தும், எளிதாகவும் மாறிவிடுகிறது. இவ்வாறு திரு. மதுகன்னா அவர்கள் தனது 'யந்த்ரா' நூலில் கூறுகிறார்.

## அதர்வண வேதத்தில்

முற்கால மக்கள் யந்திரங்கள் மற்றும் மந்திரங்களைக் கொண்டு அனைத்து உடல் உபாதைகளையும் நீக்கிக் கொள்ள முடியும் என்று மிகவும் நம்பினார்கள். இதற்குச் சான்றாக பேறு காலத்தில் கூற வேண்டிய மந்திரமாக அதர்வண வேதத்தில் ஒரு மந்திரம் காணப்படுகிறது. அம்மந்திரத்தின் பொருள் வருமாறு.

**(அதர்வண வேதம் – காண்டம்–1 : சூக்தம் 11 : மந்திரம் 1–6)**

1. பூஷனனே! அரியமான் இந்த பிரஸவதில் ஆற்றலுள்ள ஹோதாவாய் உனக்கு வஷட்டை (யக்ஞ முழக்கத்தை) கூறுக; அவளது அங்கங்கள் பிரஸவத்துக்குப் பக்குவமாகுக.
2. சோதியின் திசைகள் நான்கு; புவியின் திசைகள் நான்கு; அத்திசைகளின் – கருப்பாசயத்தால் சூழ்ந்துள்ள சிசுவை தேவர்கள் சலனமளிப்பார்கள். அவர்கள் ஸ்திரீயை பிரசவத்துக்குப் பொருத்தம் செய்க.
3. பூஷணன் புறஞ் செய்க. சனனாங்கத்தை நாங்கள் விசாலமாக்குவோம்; அன்னையே! உனது அங்கத்தை தளர்த்திக் கொள். பிஷ்கலையே! நீ பாலனை கீழே பிரேரனை செய்.
4. மாசு மிகும் பசையுள்ள நஞ்சுக்கொடி, மாமிசத்தில் கொழுப்பில் பற்றாதது போல், மச்சைகளிலும் – ஸ்தாபிதமாகாமல், நாய்புசிக்க கீழே வருக. நஞ்சுக்கொடி கீழே வருக.
5. நான் உனது மர்ம அங்கத்தை விசாலமாக்குகிறேன்; நான் மூலஸ்தானத்தை அகலமாக்குகிறேன்; இரு பக்கங்களின் நாடிகளை விசாலமாக்குகிறேன்; தாயையும் பாலனையும் பிரித்து தனிமை–யாக்குகிறேன்; குமாரனை நஞ்சுக் கொடியினின்றும் நீக்குகிறேன். நஞ்சுக் கொடி இறங்கும்.
6. எப்படி வாயு, எப்படி மனம், எப்படி பறவை பறக்கின்றனவோ, அப்படி பத்து மாத பாலனான நீயும் ஜராயுவோடு ஓடிவா, ஜராயு இறங்குக.

*(அதர்வ வேதம் – எம்.ஆர். ஜம்புநாதன் மொழிபெயர்ப்பு)*

## சக்ரவியூக பூசை — ஊமைப்புலி உடைத்தல்

சக்ர வியூகம் பொறிக்கப்பட்டுள்ள பெரிய கருப்பூரில் சாமுண்டீஸ்வரி அம்மன் திருவிழா பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. அத் திருவிழாவின்போது அவ்வூர் மக்கள் சக்ர வியூகத்திற்கும் பூசனை செய்கிறார்கள். அதோடு ஊமைப்புலி உடைத்தல் என்ற எல்லைச் சட்டி உடைக்கும் சடங்கையும் செய்கிறார்கள்.

இப்பூசையின்போது, கோவில் பூசாரி, ஒரு மண்பானையில் அரிசிச் சோறு, ஆட்டிறைச்சி மற்றும் குருதி கலந்த கலவையை வைத்து வாயை மூடிவிடுகிறார். அப்பானையை கையில் எடுத்துக் கொண்டு சக்ரவியூகத்தை வலம் வருகிறார். அவ்வாறு வலம்வரும்போது அனத்துவது போல வாயினால் (ஹூம்....ஹூம் என்று) ஒலியெழுப்புகிறார். வலம் வந்த பிறகு பானையைத் தலைகீழாக கவிழ்த்து கீழ்நோக்கச் செய்து, தரையில் போட்டு உடைக்கிறார். குருதியும், இறைச்சியும் சோறும் கலந்த கலவை தரையில் சிதறுகிறது. குழந்தைப் பிறப்பின்போது நிகழும், குருதி வெளிப்படல், தாய் ஒலியெழுப்பால் ஆகியவை ஊமைப்புலி உடைக்கும் சடங்காக அமைந்திருக்கும் பொருத்தப் பாட்டினை என்னென்பது? இச்சக்ர வியூகக் குறியீட்டில், எழுத்துப் பொறிப்புக்களோ அல்லது காலத்தை கணிக்கக் கூடிய வேறு அடையாளப் பொறிப்புக்களோ இல்லாததால், இப்பொறிப்பின் காலம் எதுவென அறிய இயலவில்லை.

சக்ரவியூகப் பொறிப்பு பற்றி தகவல் தந்தவர்:

திரு. பி. தங்கராசு முத்தரையர், நிலக்கிழார், பெரிய கருப்பூர்

ஆய்வில் ஒத்துழைப்பு : திரு. ப. சீனிவாசன்.

**துணை நூல்கள்:** 1. YANTRA - Mr. MADHU KHANNA 2. BIHAR - RAMCHANDRA PRASAD
3. அதர்வ வேதம் (தமிழ்மொழி பெயர்ப்பு) – எம்.ஆர். ஜம்புநாதன்



# புதுக்கோட்டைத் தொண்டைமான் செப்பேடுகள்

– புலவர் செ. இராசு

வரலாற்றை எழுதப் பயன்படும் ஆவணங்களில் கல்வெட்டுகளைப் போல செப்பேடுகளுக்கும் மிகுந்த பங்கு உண்டு. முன்பு அரசு ஆவணங்களும், ஆணைகளும், கொடைச் செய்திகளும் முடிவில் பெரும்பாலும் ஓலைகளிலேயே எழுதப்பட்டன. அந்த ஓலைகளின் இறுதியில் 'சிலையிலும் செம்பிலும் செய்து கொள்ளுக' என்று சில சமயங்களில் எழுதுப்படுவதும் உண்டு. அந்த வகையில் செப்பேடுகளை 'மூன்றாம் பிரதி' என்று கூறுவர். சோழப் பெருவேந்தர்கள் சிலரின் செப்பேடுகள் பல செப்புத் தகடுகளில் எழுதப்பட்டுள்ளன. முதலாம் இராசேந்திர சோழரின் கரந்தைச் செப்பேடு 57 ஏடுகளை உடையது. செப்பேடுகள் பல செப்புத் தகடுகளில் எழுதப்பெறும் நிகழ்ச்சியைக் கண்ட ஒரு புலவர் 'அரசே உம்முடைய நாட்டில் செம்புக்குப் பஞ்சம் வந்துவிடும்' என்று உயர்வு நவிற்சியாகக் கூறியுள்ளான்.

புதுக்கோட்டைத் தொண்டைமான் செப்பேடுகள் இருபத்து நான்கு கிடைத்துள்ளன. அவை அனைத்தும்

| | |
|---|---|
| **இரகுநாத ராயத் தொண்டைமான்** | **1686 – 1730** |
| **விஜய ரகுநாத ராயத் தொண்டைமான்** | **1730 – 1769** |
| **இராய ரகுநாதத் தொண்டைமான்** | **1769 – 1789** |
| **விஜயரகுநாதத் தொண்டைமான்** | **1789 – 1807** |

ஆகிய மன்னர்களின் காலத்தைச் சேர்ந்தவை. 23 செப்பேடுகள் தமிழிலும், ஒரு செப்பேடு தெலுங்கிலும் உள்ளன. மத்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினரால் 13 செப்பேடுகள் படி எடுக்கப்பட்டுள்ளன. 1911இல் ஒரு செப்பேடும், 1915இல் ஒரு செப்பேடும், 1924இல் ஒரு செப்பேடும், 1950இல் 10 செப்பேடுகளும் படி எடுக்கப்பட்டுள்ளன. இதுவரை ஏழு செப்பேடுகள் பதிப்பிக்கப்-பட்டுள்ளன. து.அ. கோபிநாதராவ் அவர்களின் 'சங்கரமடத்துச் செப்பேடுகளி'ல் ஒரு செப்பேடும், 'புதுக்கோட்டை சமஸ்தானத்துக் கல்வெட்டுத் தொகுப்பி'ல் ஒரு செப்பேடும், இக்கட்டுரையாளர் பதிப்பித்துள்ள 'திருப்பனந்தாள் காசிமடத்துச் செப்பேடுகள்' என்னும் நூலில் ஐந்து செப்பேடுகளும் பதிப்பிக்கப்பட்டுள்ளன.


திருப்பனந்தாள் மடம் (5) தருமபுரமடம் (2) திருவாவடுதுறை மடம் (1) சூரியனார் கோயில் சிவாக்கிரயோகிகள் மடம் (1) சங்கர மடம் (1) ஆகிய 5 மடங்களுக்குப் பத்துச் செப்பேடுகள் அளிக்கப்பட்டுள்ளன.



திருப்பனந்தாள் காசிமடம் –
ஈரவயல் செப்பேடு (25.7.1790)

நான்கு செப்பேடுகளில் அக்கிரகாரம் அமைத்த கொடை கூறப்படுகிறது. அவை (1) ரெகுநாத காதலி ஆயிபுர அக்கிரகாரம் (20.11.1709), (2) கீரனூர் பேரய்யா அக்கிரகாரம் (28.5.1732) (3) கீரனூர் மங்களாம்பா சமுத்திர அக்கிரகாரம் (22.7.1804) (4) மலையூர் இராமச்சந்திர அக்கிரகாரம் (12.8.1803) என்பன. ஆறு செப்பேடுகளில் சத்திரம் அமைத்த செய்தி கூறப்படுகிறது. (1) அடப்பங் கூத்தப்பன் சத்திரம் (சேதுமார்க்கம் 9.6.1747), (2) அடப்பன் கூத்தப்பன் சத்திரம் (சேதுமார்க்கம் 3.11.1797), (3) அடப்பன் கூத்தப்பன் சத்திரம் (காசி 1.12.1800), (4) அம்மணி சத்திரம் (8.5.1799), (5) அடப்பம் சுப்பிரமணியம் சத்திரம் (சேதுமார்க்கம்) (28.11.1803), (6) திருச்சி இருசப்ப முதலியார் சத்திரம் (3.12.1805) என்பன அமைக்கப்பட்ட சத்திரங்கள் ஆகும். அடப்பங்கூத்தப்பன் சத்திரம் இப்போது அடப்பங்காரன் சத்திரம் என்று வழங்கப்படுகிறது.

காசிவிசுவநாதர் கோவில், திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி கோயில், வைத்தீசுவரன் கோயில் வைத்தியநாத சுவாமி கோயில், திருவாசபுரம் திருமேனி நாதர் கோயில் சிங்கத்தாபட்டி சஞ்சீவிராயர் கோயில் ஆகிய கோவில்கட்குத் தொண்டைமான் அரசர்களால் பல கொடைகள் அளிக்கப்பட்டன. காசித் தலத்திற்கு மட்டும் ஐந்து செப்பேடுகள் அளிக்கப்பட்டன. புதுக்கோட்டை மாநிலத்தில் ஏற்படுத்தப் பட்ட நான்கு சத்திரங்களும் சேது மார்க்கத்தில் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளன. சந்திரங்களுக்குத் தெப்பக்குளங்களும், நிலங்களும், பசு, எருமைகளும், பல்வேறு பாத்திரங்களும் அளிக்கப்பட்டன. அங்கு அன்னதானம்




திருப்பனந்தாள் காசிமடம் –
துருவாசபுரம் செப்பேடு (22.7.1732)

நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது. சத்திரங்களுக்கு வாணியர் எண்ணெய் அளந்துள்ளனர். எண்ணெய் அளக்கப்பயன்பட்ட படி பல்லவன் படி என்று கூறப்பட்டுள்ளது. பல்லவராயர்கள் தொண்டைமானுக்கு முன்பு புதுக்கோட்டையை ஆட்சி புரிந்தவர்கள்.

சில செப்பேடுகளில் விசயநகர அரசர் கால்வழிகள் கூறப்பட்டு மதுரை நாயக்கர் வம்சாவளியும் கூறப்பட்டுள்ளது. சில தொண்டைமான் செப்பேடுகள் மதுரை நாயக்கர் ஆட்சியில் பொறிக்கப்பட்ட குறிப்பு உள்ளது. மதுரை நாயக்கர் ஆட்சித் தாக்கத்தால் பெரும்பாலான செப்பேடுகளில் 'ஸ்ரீ ராமஜெயம்' என்ற எழுத்துக்கள் மிகப் பெரிய அளவில் தெலுங்கில் பொறிக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டைத் தொண்டைமான்கள் காசியகோத்திரம் சார்ந்தவர்கள் என்று கூறப்பட்டுள்ளனர். இந்திரகுல வங்கிஷன், அன்பில் நாடன், தென்கோடி ஆதிபன், வடகரைப் புலி, வாகைமாலைப் புயன் என்றெல்லாம் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். இவைகளை அவர்களின் மெய்க்கீர்த்தித் தொடர்கள் எனலாம்.

கானாட்டு சுபேதார் பதவி வகித்தவர் செங்கமலம் பிள்ளை. அவருடைய இரண்டு மக்கள் கூத்தப்பன், சுப்பிரமணியம் ஆகியோர், இருவரும் விஜய ரகுநாதத் தொண்டைமானிடம் தனி அந்தரங்க அலுவலராகப் பணிபுரிந்தார். அவர்கள் பார்த்த அலுவலர் 'அடப்பம்' என்று கூறப்பட்டது. அவர்கள் பெயரில் மன்னர் விஜயரகுநாதத் தொண்டைமான் (1789 1807) சத்திரம் அமைத்தமை அவர்களிடம் மன்னர் கொண்டிருந்த அன்பைப் புலப்படுத்துகிறது. மடங்கள் மீதும், அந்தணர்களிடமும், கோயில்களிடத்தும், தம் அலுவலர்களிடத்தும், நாட்டு மக்களிடத்தும் தொண்டைமான் மன்னர்கள் கொண்டிருந்த அன்பு இச் செப்பேடுகள் மூலம் புலப்படுகிறது. நிலக் கொடைகளின் செப்பேட்டில் வாமனர் உருவம் பொறிப்பது வழக்கமாக இருந்துள்ளது. இச்செப்பேடுகள் பலவற்றை ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே எழுதியுள்ளனர்.




என்ற பெயர்கள் செப்பேடுகள் எழுதியவர்களாகக் காணப்படுகின்றன. இது அவர்கள் கால்வழி ஆகும்.

கிழவன் சேதுபதி (இரகுநாத சேதுபதி காத்த தேவர்) ராய தொண்டைமானார் புத்ரி ரெகுநாத ராயத் தொன்டைமானார் சஹோதரியான காதலி

நாச்சியார் அவர்களை மணந்து கொண்டார். ராயத் தொண்டைமானார் தம் மகனுக்குக் கிழவன் சேதுபதியின் பெயராகிய 'இரகுநாத' என்பதை வைத்தார். இந்த உறவினாலேயே நாடாண்ட 'பல்வராயர்' நீக்கப்பட்டுப் புதுக்கோட்டையில் தொன்டமான் அரசு அமைந்ததது. காதலி என்பது இராமேசுவரம் அம்மன் மலைவளர் காதலி (பர்வதவர்த்தனி) என்ற பெயரின் சுருக்கமா கும். மேலப் பனையூர் கரு. இராசேந்திரன் 'கதகல்லி' என்ற இறைவன் பெயரே காதலி ஆயிற்று என்பார். இப்பெயர் புரியாமல் சில சரித்திர ஆசிரியர்கள் கதலி, காத்தாயி, காட்டேரி என்று எழுதியுள்ளனர். கொடை நிலங்களுக்கு நாற்பாங்கு எல்லைகள் விரிவாகக் கூறப்படுவதுடன் வயல், காடுகளுக்குப் பெயர்களும் கூறப்படுகின்றன. சில இடங்களில் நிலம் உழுகின்ற ஏர்க்கணக்கில் கூறப்பட்டுள்ளன.

செப்பேடு 'தாம்புர சாதனப் பட்டயம்' என அழைக்கப்பட்டுள்ளது. தொண்டைமான் ஊறணி, தொண்டைமான் புன்செய் என அரசர் பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன. ஊரில் அனுபவிக்கும் சுதந்திரம் 18 என்று கூறப்படுகிறது. அவை ஆனிரை, கொளிஞ்சி, அறுகு, தாளிவைப்பு, செம்பு, மாவடை, மரவடை, மேல்நோக்கிய மரம், கீழ் நோக்கிய கிணறு, கோவில், குளம், பெருநீர்நிலை, சிறுநீர் நிலை, நீர்வரும் ஆறு, தான் போகும் குளக்கால், பறைமை, வலைமை, அம்பலம், உம்பளம் என்பன. இவையன்றி அனாதி தரிசு, உடைப்பு, ஏந்தல், ஓடை, குட்டை, குளம், திட்டு, திடல், தோப்பு, தொரவு, அமாவாசை என்பனவும் கூறப்படுகின்றன. பெரும்பாலான கொடைகள் பவுர்ணமி, அமாவாசை, மற்றும் கிரகண நாட்களில் கொடுக்கப்பட்டுள்ளன. பல்வேறு வரிகளம், வருவாய் பற்றிய சொற்களும் காணப்படுகின்றன. ஆளமைஞ்சி, இடங்கை, வலங்கை, இடுகாடு, இறை, ஊழியபாழீயம், காணிக்கை, கொட்டிய எருது, சுரப்பிப்பசு, சேத்துக்காணிக்கை, செம்புவிலை, சீட்டு, சொர்னாதாயம், நீராணிக்கம், படுதுறை, பலவரி, பள்வரி, பலசுதந்திரம், பெடிவிலாடம், பாசிவிலை, புல்லுவரி, பெட்டி, பைங்குடி, மடத்துவரி, வகையறுப்பு வண்டிவ்மாடு, வேண்டுகோள்வரி என்பன அவை.

மத்தியத் தொல்லியல் துறை தொண்டைமான் செப்பேடுகள் அனைத்தையும் விஜயநகரச் செப்பேடுகள் என்று குறித்துள்ளதும். அரசர் பெயர்களாக ஸ்ரீரங்கராயர், 'வெங்கடதேவர்' என்றும் கூறுவது மிகவும் தவறாகும். 1805ஆம் ஆண்டுச் செப்பேடுகூட விசயநகர மன்னர் செப்பேடு என்று குறித்துள்ளனர். தொண்டைமான் செப்பேடுகளில் 5 செப்பேடுகள் முற்றுப் பெறாத செப்பேடுகள் ஆகும். அவை அனைத்தும் விஜயரகுநாதத் தொண்டைமான் (1789 1807) காலத்தைச் சேர்ந்தவை. இவை அனைத்தும் ஒரே இடத்தில் பதிப்பிக்கப்பெற வேண்டும். இத்துடன் அறந்தாங்கித் தொண்டைமான் செப்பேடுகளையும் சேர்த்துப் பதிப்பிக்கலாம்.

புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் 24.03.2001 அன்று நிகழ்ந்த புதுக்கோட்டை வரலாற்றுக் கருத்தரங்கில் அளிக்கப்பட்ட உரை

# கொங்கு மலைகளில் சமணர் தவப் பள்ளிகள்

**ஆர். பூங்குன்றன்**

கொங்கு நாடு நாற்புறமும் மலைகள் சூழ்ந்த பீடபூமிப் பகுதியாகும். இப்பகுதி மலைகளில் இயற்கை அழகுடன் கூடிய குகைகள் மிகுந்திருந்தன. அக்குகைகளின் அருகிலேயே வற்றாத சுனையும், அருவிகளும் நிறைந்திருக்கும். அக்குகைகளில் ஆதிநாளைய மனிதன் வாழ்ந்தான். அவன் விட்டுச் சென்ற ஓவியங்கள், கற்கருவிகள் ஆகியவை மிகுதியும் காணப்பெறுகின்றன. அவை தொல்பழங்கால மனிதன் வாழ்வில் பொருளாதாரம், பண்பாடு, வழிபாடு ஆகியவற்றை விளங்கிக் கொள்ளச் சான்றுகளாக உள்ளன. கொங்கு மக்கள் வாழ்க்கையில் காலந்தோறும் மாற்றங்கள் நிகழ்ந்தவண்ணம் இருந்தன. பொருளியல் வாழ்க்கையில் பாரதூரமான மாற்றங்கள் நிகழ்ந்தன. கொங்கு மக்களிடையே பழங்குடி சமயமே நிலை பெற்றிருந்தது. ஆனால் கொல்லாமையை உயிர் மூச்சாகக் கொண்டிருந்த சமண சமயம் கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்து செல்வாக்குப் பெறத் தலைப்பட்டது. பத்திரபாகு முனிவரிடம் பயிற்சி பெற்ற முனிவர்கள் கொங்கு நாட்டின் வழியே தமிழகத்திற்கு வந்து சமண சமயத்தைப் பரப்பினார்கள். அவர்கள் தவமியற்ற மலைமுழைஞ்சுகளையே தேர்ந்தெடுத்தார்கள். தமிழ்நாட்டில் மலைகளில் முனிவர்கள் தவமியற்றும் வழக்கம் இருந்துள்ளது. 'குன்றுறைதவசியர்' என்று நற்றிணைப் பாடல் கூறும். ஆகையால் மலைகளில் தவம் செய்யும் வழக்கம் சமணர்கள் வருகைக்கு முன்பே இருந்திருக்க வேண்டும். சித்தர் மரபிற்குரியதாகவும் கொள்ளலாம்.

கொங்கு நாட்டில் அரசண்ணார்மலை, அரச்சலூர் மலை ஆர்நாட்டார்மலை, ஆழியாறு, சித்தர்மலை, திருச்செங்கோடு, குமாரபாளையம், செந்நாக்குன்று, அர்த்தநாரிபாளையம், சுக்காலியூர், அய்யர்மலை, ஐவர்மலை, திருமூர்த்திமலை, குன்னமலை, கொல்லி மலை, முதலிய மலைகள் சமணர்கள் தவமியற்றிய மலைகளாகும். இம்மலைகளில் சமணப்பாழிகள், கல்வெட்டுகள், சமணச் சின்னங்கள், திருமறு ஆகியவை உள்ளன. அய்யன்மலை ஐவர்மலை ஆகிய மலைகளிலும் சமணக் கல்வெட்டுகள் உள்ளன. கொங்குநாட்டு சமண மலைகளைப் பற்றி தமிழ்ப் பல்கலைக்கழகம் - கல்வெட்டியல் துறைத் தலைவர் முனைவர் செ. இராசு அவர்கள் விரிவாகவும் ஆழமாகவும் ஆய்வு செய்துள்ளார். இம்மலைகளை மட்டும் முனிவர்கள் தேர்ந்தெடுத்ததற்குக் காரணங்கள் இருந்திருக்க வேண்டும். அவற்றைக் கண்டறிவதே இவ்வுரையின் நோக்கம்.

சமண மலைகளில் தாய்த்தெய்வம் உறைந்தது என்பது பற்றி கல்வெட்டுகளும், மரபுவழிக்கதைகளும், வரலாறுகளும் பேசியுள்ளன. பழனி ஐவர் மலைக் கல்வெட்டில் இயக்கி (தமிழில் 'அவ்வை') என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. அவ்வை என்பது தமிழில் கொற்றவை என்று பொருள். ஐவர்மலை அவ்வை மலை என்பதன் திரிபாக இருக்க வேண்டும். பதிற்றுப் பத்தில் கூறப்பெறும் அயிரைமலை சேரர் குலதெய்வமாகிய கொற்றவை உறைந்த மலை ஆகும். அதனால் ஐவர்மலை சமணர் வருகைக்கு முன் கொற்றவை வழிபாடு செய்யப் பெற்ற முழைஞ்சுநிறைந்திருந்த மலையாக இருந்தது.

ஐவர்மலைக்கு அருகில் மானூர் என்ற ஊர் உள்ளது. இவ்வூர் கருநாடக மாநிலக் கல்வெட்டுகளிலும், மரபு வழிக்கதைகளிலும் மலனூர் என்று கூறப்பெறுகின்றது. இங்கு யாப்பனிய சமணம் தோன்றியது என்ற பேராசிரியர் நந்தி அவர்கள் கூறுவார். யாப்பனிய பிரிவு வைதிக சமணத்திலிருந்து பிரிந்த புரட்சிகரமான சமயம். யாப்பனிய என்பதன் பொருள் பழிவிலகியவர்கள் ஏன்பது. அதனால் பிரிந்து வந்தவர்கள் எனலாம். பெண்களுக்கும் வீடுபேறு அடையும் வாய்ப்பு உண்டு என்று கூறும் சமயம். பேய் ஓட்டுதல், கொற்றவை வழிபாடு, தாயத்து கட்டுதல் ஆகியவற்றையும் பின்பற்றினர். இச்சமயம் பெல்காம் பகுதியில் சிறப்புற்றிருந்தது. சாளுக்கிய மன்னன் பங்களேசனின் மெய்க்கீர்த்தியை எழுதிய ரவிபீர்த்தி யாப்பனிய சமணப் பிரிவினன்.

விசயமங்கலத்திற்குத் தெற்கில் உள்ள அரசன்னாமலை சமணமலைகளுள் ஒன்று. இம்மலைமீது தீர்த்தங்கரருடைய உருவமும், குசுமாண்ட இயக்கியின் உருவமும் உள்ளன. இயக்கிக்கு மக்கள் வைத்துள்ள பெயர் அரசாத்தாள் என்பது. கொற்றவை என்பதன் வடமொழி வடிவம் அரசாத்தாள் (கொற்றம் - கொற்றவை) இன்றும் அப்பகுதியில் வாழும் மக்கள் தங்களின் பெண் குழந்தைகளுக்கு அரசாத்தாள் என்று பெயர் வைக்கின்றனர். அதனால் இத்தெய்வம் அப்பகுதி மக்களின் குலதெய்வமாக விளங்குகின்றது எனலாம்.

கொல்லிமலை சமணர்கள் மிகுதியும் தங்கித் தவம் செய்த மலையாகும். இம்மலையில் கொல்லிப்பாவை ஓவியம் இருந்தது. என்று பண்டைய புலவர்கள் பாடியுள்ளனர். கொல்லிப் பாவை வழிபாட்டிற்காக ஆண்டுதோறும் வரையப்பட்டது. அதனால்தான் 'பூதம் புணர்த்தபுதயில் பாலை என்று பாடிச் சென்றனர். தொல் பழங்கால மனிதன் கொல்லிப் பாவை உருவத்தை வரைந்து வழிபட்டிருக்க வேண்டும். கொல்லிப் பாவை கொற்றவை வழிபாட்டின் வேறு வடிவம் கொல்லி என்ற பெயரே அக்கருத்தினை வலியுறுத்தும். கொல்லிப் பாவை வழிபாடே இயக்கி வழிபாடு எனத் திரிந்தது. கொல்லிமலை வாழ்

பழங்குடிக்ளைத் தங்கள் சமயத்திற்கு மாற்றுவதற்கு அம்மலையில் சமணர்கள் தவப்பள்ளிகளை அமைத்தனர். அறைப்பள்ளி என்று கூறுவதிலிருந்து மலை மேலிருந்த பள்ளிகள் என்று கொள்ளலாம். கொல்லிமலை முழுவதும் சமணப் பள்ளிகளும் இயக்கி கோயில்களும் பிரம்மசாத்தா கோயில்களும் நிறைந்துள்ளன. இன்றும் அங்குள்ள மக்கள் சமணர் கோயில்களை சமணாண்டிப் பாட்டம் என்று கூறுகின்றனர். ஈசுவரன் கோயிலே அறப்பளீஸ்வரர் கோயில் என்று அழைக்கப் பெறுவதிலிருந்து சமணத்தில் செல்வாக்கினை அறியலாம்.

மோகனூர் சர்க்கரை ஆலை அருகில் உள்ள செந்நாக்குன்று சமணர் படுக்கைகளும் சுவஸ்திகம், ஸ்ரீவத்சம் ஆகிய உருவங்கள் உள்ளன. இவை காலத்தால் முற்பட்ட சமண சமயச் சின்னங்கள் என்பர். ஸ்ரீவத்சம் தெய்வ வழிபாட்டினை வலியுறுத்தும். பொள்ளாச்சி ஆழியாற்று அணையின் உட்புறத்தில் ஆகாழி அம்மன் கோயில் என்றொரு கோயில் உள்ளது. அங்கு இயற்கையான குகைத் தளத்தில் படுக்கைகள் உள்ளன. இவை கி.பி. 3,4-ம் நூற்றாண்டினைச் சேர்ந்தவை. அருகில் கி.பி. 10-ம் நூற்றாண்டு தீர்த்தங்கரர் உருவம் உள்ளது. அதன் முகம் சிதைக்கப்பெற்று அம்மன் உருவமாக மாற்றப் பெற்று வழிபடப் பெறுகின்றது. ஆகையால் இங்குள்ள சமணப் பள்ளி உருவாகும் முன் ஆழி அம்மனுக்கு வால்பாறைக்குச் செல்லும் லாரி ஓட்டுநர்கள் பலியிட்டு வழிபாடு செய்யும் வழக்கம் இன்றும் உள்ளது. அருள்பாலிக்கும் சமணப் பள்ளியில் பலி இடும் வழக்கம் எப்படி ஏற்பட்டது என்பது வியப்பிற்குரியதாக இருக்கலாம். ஆனால் அதற்குக் காரணம் உண்டு.

சமயப் பள்ளிகள் அணங்குடை நெடுமுடிகளில் உருவானபோது பழங்குடிகள் பலியிட்டு வழிபடும் வழக்கத்தினைப் பின்பற்றினர். அப்பழக்கத்தைக் கைவிட சமணர்கள் அரும்பாடுபட்டனர். இருப்பினும் பழங்குடிகள் தங்கள் அணங்கிற்குப் பலியிடும் வழக்கம் தொடர்ந்தது, சமணம் செல்வாக்கு இழந்தபோது பலியிடும் வழக்கம் தொடர்ந்தது. இந்த வழக்கம் வடமேற்குத் தக்கணத்தில் கார்வே பௌத்த விகாரத்தில் இந்திற்பாவையாக நிற்கும் யமி என்ற தெய்வத்திற்கு அளிக்கும் பலியுடன் ஒப்பிடத் தக்கது. அங்கு பம்பாய் மீனவர்கள் அத்தேவதைக்குப் பலியிடும் வழக்கத்தை இன்று வரை கடைப்பிடிக்கின்றனர்.

கருவூருக்கருகில் உள்ள சக்காலியூர் சமணப்படுக்கை முன் பலி இடும் வழக்கம் இன்றுவரை நிலைபெற்றுள்ளது. சமணப் பள்ளி, பௌத்தப் பள்ளி ஆகியவற்றின் முன் பலியிடும் வழக்கம் பள்ளி உருவாவதற்கு முன் தொல் பழங்கால மக்கள் உருவாக்கிய வழக்கம். அவ்வழக்கம் பழங்குடி மரபின் தொடர்ச்சியாக இன்றுவரை நிலை பெற்றுள்ளது.

(அடுத்த இதழில் நிறைவுறும்)




# சோழமாதேவி கைலாயமுடையார் திருக்கோயில்

- கி. ஸ்ரீதரன்



திருச்சி – தஞ்சை நெடுஞ் சாலையில் திருவெறும்பூரி-லிருந்து தெற்கே சூரியூர் செல்லும் சாலையில் 3 கி.மீ. தொலைவில் உய்யக்கொண்டான் ஆற்றின் கரையில் சோழமாதேவி கிராமம் அமைந்துள்ளது. ஊரின் வடகிழக்கு மூலையில் கிழக்குத் திசை நோக்கி கோயில் அமைந்துள்ளது. கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்ற அமைப்பு களை உடையதாக விளங்கு கின்றது. மகாமண்டபத்தில் தெற்கு நோக்கிக் காணப்படும் அம்மன் சன்னதி சிதிலமடைந்-திருந்ததை அண்மையில் மீண்டும் கட்டி புதுப்பித்-துள்ளது. மகா மண்டபத்தில் காணப்படும் மாலைக்கட்டி மேடை போன்றவை இக்கோயிலில் சிறப்பாக வழிபாடு நடைபெற்று வந்ததை நமக்கு எடுத்துக்கூறும் வகையில் அமைந்துள்ளது.







கோயிலை வலம் வருவோம். கருவறைச் சுவரின் அர்த்தமண்டப தேவகோட்டத்தில் முதலில் காண்பது இறைவன் பிச்சை உகக்கும், பிட்சாடனர்(படம் வலது) திருக்கோலம். ஆடை இன்றி கபாலம் ஏந்தி இளநகை புரிந்த வண்ணம் நடைபோடு-கின்றார். இவர் எதிரே பெண் ஒருத்தி (படம் இடது) கரண்டியை ஏந்தி ஆடைநெகிழ

நிற்கிறாள். அவளுக்கு அருகே பானைகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. சிவபெருமான் தாருகாவனத்துப் பெண்களின் கர்வத்தை அடக்கும் புராண நிகழ்ச்சியைக் கூறும் சிற்பமாக இது அமைந்துள்ளது. பிட்சாடனர் திருஉருவத்தைத் தேவகோட்டத்தில் அமைக்கும் வழக்கம் பராந்தக சோழன் காலத்து கோயில்களிலிருந்தே துவங்கிவிட்டது எனலாம். கோவிந்தபுத்தூர், உய்யக்கொண்டான்திருமலை, திருப்பால்த்துறை போன்ற கோயில்களில் தேவகோட்டங்களில் பிட்சாடனர் வடிவத்தைக் காணலாம். பிட்சாடனர் அருகே சதுர வடிவான சிறு பிறை போன்ற அமைப்பில் விநாயகரின் திருஉருவம் அமைக்கப்பட்டுள்ளது.



கருவறைச் சுவரின் தெற்கு தேவகோட்டத்தில் உள்ள தட்சிணாமூர்த்தி வடிவம் முழுவதும் சிதைந்து காணப்படுகிறது. மேற்குப் புற தேவகோட்டத்தில் திருமால் சங்கு, சக்கரம் ஏந்தி நிற்கும் கோலத்தைக் காணலாம். தலைக்கு மேலே இரு புறமும் சாமரங்கள் காணப்படுகின்றன. காலின் அருகே இருபுறமும் குத்து விளக்குகள்காணப்படுகின்றன. இத்தேவகோட்டத்திற்கு மேலே மகர தோரணம் அழகிய வேலைப்பாடுடன் விளங்குகிறது. மகரதோரணத்தின் நடுவே கண்ணன் தன் தோழர்களுடன் உரியிலிருந்து வெண்ணெய் எடுக்கும் காட்சி அற்புத சிற்ப வடிவாகக் காணப்படுகிறது.



தெற்குப்புறச்சுவரில் உள்ள தேவகோட்டங்களில் பிரம்மா, துர்க்கையின் வடிவங்– களைக் காண்கிறோம். கருவறையின் அதிட்டானப் பகுதியில் முப்பட்டைக் குமுத அமைப்புக்கு மேலே கழுத்துப் பகுதியில் சிறு சிறு பலகைச் சிற்பங்கள் (PANEL SCULP-TURES) காணப்படுகின்றன. காளியமர்த்தனர், கஜசம்காரமூர்த்தி, நந்தி, நடன மகளிர், இசைக்கருவி வாசிக்கும் ஒருவன், ஆடவல்லான், திரிபுராந்தகர், கஜலட்சுமி, சரசுவதி, அன்னம், அய்யனார், சிம்மம், யாளி, லிங்கோத்பவர் போன்ற அழகிய சிற்பங்கள் நம் கருத்தைக் கவர்கின்றன. விமானத்தில் கபோதகத்தின் கீழே அமைந்திருக்கும் பூத வரியில் காணப்படும் பூதகணங்களின்






கஜசம்ஹாரமூர்த்தி

தோற்றங்கள் மற்றும் அவை வாசிக்கும் இசைக்கருவிகள் நம் கருத்தைக் கவர்கின்றன.

இக்கோயிலின் சுவர்களில் மொத்தம் 16 கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவைகள் முதலாம் இராஜராஜசோழன், முதலாம் இராஜேந்திரசோழன், அவனது மைந்தன் வீரராஜேந்திர சோழன் ஆகியோரது காலத்தைச் சேர்ந்தவையாகும். இராஜராஜனது 8வது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் வீரசோழ இளங்கோவரையர் தேவியார் பராந்தகன் ஆதித்த படாரியார் என்பவர் இக்கோயிலில் வழிபாட்டிற்காக தானமளித்திருக்கிறார். இக்கல்வெட்டில் குறிப்பிட்டுள்ள பெண் இருக்குவேளிர் குலத்தைச் சேர்ந்தவளாக விளங்குகிறாள்.



இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவன் ஸ்ரீகயிலாயமுடையார், ஸ்ரீ கைலாசர் பரமேசுவரர் என்று கல்வெட்டுகளில் அழைக்கப்படுகிறார். இவ்வூர் தென்கரை, பிரம்மதேயம் 'ஸ்ரீ சோழமாதேவி சதுர்வேதிமங்கலம்' எனவும் குறிக்கப்படுகிறது. காவிரி ஆற்றின் தென்கரையில் இவ்வூர் அமைந்துள்ளது.

சோழமாதேவி சதுர்வேதிமங்கலத்து ஊர் மத்யஸ்தன் (கிராம கணக்கு அலுவலர்) ஏறன் கூத்தாடியான மகாஜனப்பிரியன் என்பவன் இக்கோயிலுக்கு நந்தவனம் அமைக்க நந்தவனப்புறமாக நிலம் அளித்தான். அதில் மல்லிகை, இருவாட்சி, செண்பகம் ஆகியவை பயிர் செய்யப்பட்டுக் கோயிலுக்கு அளிக்கப்பட்டன. அந்நந்தவனத்தை நீர்க்குறைவும், வேலிக்குறைவும், மற்றும் எப்பேர்ப்பட்ட குறைவும் இன்றிப் பராமரிக்க வேண்டும் என்று கல்வெட்டு கூறுகிறது. நிலத்தின் எல்லையைக் குறிக்கும்பொழுது பல நிலங்களின் பெயர்கள், வாய்க்கால்களின் பெயர்கள் எல்லாம் கல்வெட்டில் குறிக்கப்படுகின்றன. இக்கோயிலில் இருந்த ஸ்ரீகைலாசத்து உமாபட்டாரகிக்குத் திருவமுது படைப்பதற்காக நிலம் அளிக்கப்பட்டது. இந்நிலத்தை 'ஸ்ரீகோயிலுடையார்கள்' என்பவர்கள் பெற்றுக்கொண்டு கோயிலைப் பராமரித்து வந்தார்கள் என்பதையும் அறிய முடிகிறது.

ஒவ்வோர் ஊரிலும் ஊர்ச்சபை அவ்வூரில் இருந்த மண்டபத்தில் கூடியது என அறிகிறோம். சோழமாதேவியிலும் ஊர்ச்சபை இராஜராஜன் என்று பெயரிட்டு அழைக்கப்பட்ட ஒரு மண்டபத்தில் கூடியது. இதனை பிரம்மஸ்தானம் என்று கல்வெட்டு குறிப்பதிலிருந்து இராஜராஜசோழன் காலத்தில் முதன்முதலில் இவ்வூர் அமைக்கப்பட்டது என்பதையும் அறிய முடிகிறது.



இவ்வூரில் பெருமாள் கோயிலும் இருந்திருக்கிறது. ஊர்ச்சபையார் இவ்வூரின் நடுவில் இருந்த ஸ்ரீவீரசோழ விண்ணகரப் பெருமானடிகள் மற்றும் நம்பிராட்டியார் ஸ்ரீதேவி பிராட்டியார்க்கும், பூமிதேவிப் பிராட்டியார்க்கும் அமுது செய்ய 220 கலம் நெல் அளக்க முடிவு செய்ததை ஒரு கல்வெட்டு குறிக்கிறது. தற்பொழுது இவ்வூரில் பெருமாள் கோயில் ஏதுமில்லை. ஆனால் இவ்வூரை ஆய்வு செய்தபோது ஊரின் நடுவில் சாலையோரத்தில் திருமால் சிற்பம் ஒன்றும் தேவியின் சிற்பம் ஒன்றும் பூமியில் புதைந்திருப்பது காணப்பட்டது. சிற்பத்தின் வடிவமைப்பினைப் பார்க்கும்பொழுது அவை 10 ம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனக் கூறலாம்.

கோயில்களில் இசைக்கருவிகளை வாசிப்பவர்கள் உவச்சர்கள் எனப்பட்டனர். சோழமாதேவி கோயிலில் உவச்சப் பணி செய்த 1) இரண்டாயிரவன் கணத்தானான சோழமாதேவிப் பேருவச்சன் 2) இவன் தம்பி இரண்டாயிரவன் கடம்பனான காந்தருவப் பேருவச்சன் 3) இவன் தம்பி இரண்டாயிரவன் பல்லவராயன் 4) இவன் தம்பி இரண்டாயிரவன் திருவரங்கதேவன் என்ற பெயர்கள் கொண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு சகோதரர்கள் நியமிக்கப்பட்டனர். உவச்சப்பணி செய்ய தானமளிக்கப்பட்ட நிலம் 'உவச்சப்புறம்' எனப்பட்டது.

சிவன் கோயிலிலும், பெருமாள் கோயிலிலும் உவச்சர்கள் 'பஞ்ச மகாசப்தம்' செய்ய நிலம் அளிக்கப்பட்டதாக இராஜராஜசோழனின் 26வது ஆட்சி ஆண்டு கல்வெட்டு கூறுகிறது. பஞ்சமகாசப்தம் பற்றி 'பஞ்ச மரபு' என்ற நூல்

"சொல்லிய நற்றோய்
துளை துய்ய மென்னரம்பு
கல்விமிகு கஞ்சமிடறெனவே
வெல்லு மதன்
அஞ்சப் படும் விழியா
யாயுங்கா விவ்வவைந்தும்
பஞ்சமா சத்தமாய்ப்பார்"

என்று கூறுகிறது.

(அடுத்த இதழில் நிறைவுறும்)




# திருக்கோயிலைத் தெரிந்துகொள்வோம்

ஸ்தபதி வே. இராமன்

(தமிழகத்தில் இடம்பெற்றுள்ள திருக்கோயில்கள் யாவும் வரலாற்றுச் செய்திகளைத் தாங்கி நிற்கும் கருவூலங்களாகும். திருக்கோயிலின் புறச்சுவர் பகுதிகளில் காணப்படும் கல்வெட்டுகளை என்ன பகுதியில் காணப்படுகிறது எனச் சுட்டிக்காட்டுவதற்கு எளிதாக பழங்காசு வாசகர்கள் பலர் கேட்டுக் கொண்டதற்கிணங்க "திருக்கோயிலைத் தெரிந்து கொள்வோம்" என்ற தொடர் தொடங்கப்பட்டுள்ளது. திருக்கோயிலின் அங்கங்கள், உறுப்புகள், அவ்வுறுப்புகளின் பெயர்களை முடிந்த மட்டும் வாசகர்களுக்கு வரைபடங்களோடு தர முயற்சிக்கின்றோம். கல்வெட்டு ஆய்வாளர் மற்றும் கோயிற்கலை பயில்வோர்க்கு இத்தொடர் பெரிதும் பயன்படவேண்டும் என்ற நோக்கத்தோடு பழங்காசு இத்தொடரை பெருமையோடு வெளியிடுகிறது –ஆசிரியர்)

தென்னகக் கோயில்கள் பொதுவாக கருவறை, அந்தராளம், முகமண்டபம், சாவகாச அந்தராளம், மஹாமண்டபம், திருச்சுற்று, பரிவாரக் கோயில்கள், திருமதில், கோபுரம் எனப் பல பகுதிகளைக் கொண்டு எழுப்பப்படுவதாகும்.



கருவறை உபானம் முதல் ஸ்தூபி வரையிலான பகுதியை விமானம் எனக் கூறுவர். இந்த விமானமானது ஆறு ஆதார உறுப்புகளை கொண்டதாகும். அவ்வுறுப்புகள் முறையே அதிஷ்டானம், பித்தி, பிரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி எனப் பெயர் பெறும். இதனையே பீடம், கால், கூரை, கழுத்து, தலை, முடி என மனித உடல் உறுப்புகளுக்கு உவமானமாக கூறுவர் அறிஞர் பெருமக்கள்.

## அதிஷ்டானம் (பீடம்)

நிலமட்டத்தின் மேலும், கோயிலின் முதல் அங்கமாகவும் இடம்பெறும் அமைப்பை அதிஷ்டானம் எனலாம். அதிஷ்டானம் இல்லாமல் விமானம் எழுப்புவதில்லை. இந்த அதிஷ்டானம் இரண்டு வகைப்படும். அவை முறையே "பாதபந்தம்"என்றும் "பிரதிபந்தம்"என்றும் பெயர் பெறும். அதிஷ்டானம் என்றச் சொல்லுக்கு தரணி, பூமி, ஆதாரம், ஆதியங்கம், மசூரகம், குட்டிமம் என்ற வேறு பெயர்களாலும் குறிப்பதுண்டு. அதிஷ்டானத்தில் இடம்பெறும் சிற்றுறுப்புகளை ஆராய்ந்து பார்க்கும்போது உபானம், ஜகதி, குமுதம், கண்டம், பட்டிகை என்ற பேருறுப்புகளைக் கொண்ட அமைப்பை பாதபந்தம் என்றும், உபானம் மஹாபத்மம், குமுதம், யாளிவரி என்றபேருறுப்புகளைக் கொண்ட அமைப்பை பிரதிபந்தம் என்றும் சிற்ப நூல்கள் அடையாளம் காட்டுகின்றன.

காஸ்யபம், மயமதம், மானசாரம் ஆகிய சிற்பநூல்கள் பலவகையான அதிஷ்டானங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அதிஷ்டானத்தின் பேருறுப்புகள் மற்றும் அதில் இடம்பெறும் சிற்றுறுப்புகளை தேவைக்கேற்ப கூட்டியும் குறைத்தும் பலவகையான அதிஷ்டானங்களை உருவாக்கி இடம்பெறும் ஒவ்வொரு உறுப்புகளின் உயரம் மற்றம் அகல அளவுகளை சிற்பநூல்கள் விரிவாக குறித்துத் தருகின்றன. சில கோயில்களில் அதிஷ்டானத்தின் கீழ் உபபீடம் என்னும் அங்கத்தை இணைத்து கட்டமைப்புதுண்டு. பொதுவாக உபபீடமானது விமானத்தின் உயரத்தை அதிகப்படுத்தி காட்டுவதற்கும், விமானத்தின் எழிலைக் கூட்டுவதற்கும் அமைக்கப்படுவதாகும். விமான அமைப்பில் உபபீடம் இடம்பெறாமல் எழுப்பப்பட்ட கோயில்கள் பல உண்டு.

தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம், திருபுவனம் ஆகிய ஊர்களில் அமைந்துள்ள கோயில்களில் இந்த உபபீடம் சிறப்பான கட்டமைப்பைக் கொண்டுள்ளதையும், ஒன்றுக்கொன்று மாறுபட்டதாயும் அமைக்கப்பட்டுள்ளதையும் இங்கு நினைவுகூறலாம். பல்லவர்கால கோயிலான மாமல்லபுரம் திரௌபதிரதம் மற்றும் அர்ச்சுனன் ரதம் என்றழைக்கப்படும் கோயில்களின் கட்டுமானத்தில் உபபீடத்தைப் பார்க்க முடிகிறது. இதுவே தமிழகத்தில் நாம் காணும் முதல் உபபீடம் எனலாம்.

## பித்தி (பாதச் சுவர்)

அதிஷ்டானத்தின் மேல்பகுதியிலிருந்து உத்தரத்தின் கீழ்ப்பகுதி வரையிலான பகுதியைப் பித்தி என்றும், பாதச்சுவர் என்றும், கால் என்றும் குறிப்பிடுவர். இப்பாதச் சுவரை வெறும் சுவராக அமைத்திடாமல் கலையுணர்ச்சியோடு அமைப்பதே மரபாகும். எனவே இப்பாதச்சுவரை பல பகுதிகளாகப் பிரித்து முன்பின் வந்ததாய் இடம்பெறச் செய்திடுவார்கள். இதனை பத்திபிரிப்பு என்பர். கர்ணகூடுபத்தி–அகாரைபத்தி–முகசாலைபத்தி–அகாரைபத்தி–கர்ணகூடுபத்தி என்றவாறு பெயரிட்டு அழைப்பதுண்டு. பக்கச்சுவர் அளவானது அதிகரிக்கும்போது இப்பத்தியமைப்பு அதிகமாகும் என்பது பொது விதி.

திருப்பங்களில் இடம்பெறும் சதுரவடிவிலான அமைப்பை கர்ணகூடு என்றும், மையப்பகுதியில் வண்டிக்கூடு போல் அமையும் அமைப்பை முகசாலை என்றும் அடையாளம் காணலாம். மையமாக இடம்பெறும் இந்த முகசாலை பகுதி இதர பத்தியமைப்புகளிலிருந்து சற்று முன் வந்ததாய் இழுக்கப்பட்டு தேவகோஷ்டம் அமைத்து திசைக்கான தெய்வங்களை இடம்பெறச் செய்வார்கள். எடுத்துக்காட்டாக கிழக்குநோக்கிய பார்வையுடைய சிவன்கோயிலாக இருக்குமேயானால் தேவகோஷ்டங்களில் முறையே வடக்கே பிரம்மா, மேற்கே ஹரிஹரன் (அ) அர்த்தநாரிஸ்வரர் (அ) விஷ்ணு (அ) லிங்கோத்பவர்; தெற்கே தெக்ஷிணாமூர்த்தி, கிழக்கே இந்திரன் (அ) முருகன் போன்ற தெய்வங்களை நிறுத்திடுவர். இம்முறை தொடக்க சோழர்கால கோயில்களில் மாறுபட்டுள்ளதையும் காண்முடிகிறது.

மேலும் இப்பக்கச் சுவரில் தூண்களை இடம்பெறச்செய்து விமானத்தின் எழிலை கூட்டுவர். இத்தூணின் அடிப்பகுதியில் வேதிகையை அமைத்து நாற்புறமும் சுற்றிவருவதாயும் அமைத்திடுவர். சில கோயில்களில் நிஷ்கராந்த பஞ்சரம், மகரதோரணம், கும் பஞ்சரம், இரட்டைக்கால் பஞ்சரம் முதலானவற்றையும் இடம்பெறச் செய்து கட்டடப் பகுதியை எழில் பெறச் செய்வர்.

## பிரஸ்தரம் (கூரை)

அதிஷ்டானம், பாதச்சுவர் ஆகியவற்றை மூடும் வகையில் அமையும் அங்கமே பிரஸ்தரமாகும். இதனை கூரை என்றும் கூறுவார்கள். இப்பிரஸ்தர மட்டத்திற்கு மேல்தான் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தளங்கள் கொண்டதாக அமைப்பார்கள். மேல்தளத்தை உபானம் முதல் பிரஸ்தரம் மேல்மட்டம் வரையிலான பகுதியை கல்ஹாரம் என்றும், அதன் மேல்தளத்தை விமானம் என்றும் ஸ்தபதிகள் வழக்கில் பேசுகிறார்கள்.

## கிரீவம் (கழுத்து)

பிரஸ்தரம் மட்டம் தளப்பகுதியிலிருந்து சற்று உள்ளடங்கியவாறு இடம்பெறும் அமைப்பை கிரீவம் என்பர். இக்கிரீவத்தின் நான்கு திசைகளிலும் கல்ஹாரம் தேவகோஷ்டத்தின் தொடர்ச்சியாக விமான தேவதைகளை கோஷ்டங்களில் இடம்பெறச் செய்வார்கள். திக்குகளில் அஷ்டதிக் பாலகர்களையும் இடம்பெறச் செய்வதுண்டு.

சிகரம் எவ்வடிவத்தில் அமைக்கப்படுகிறதோ அவ்வடிவத்தில் தான் கிரீவத்தை அமைத்திட வேண்டும் என்பது பொது விதியாகும்.

## சிகரம் (தலை)

கிரீவத்திற்கு மேல் அமையும் பகுதி, சிகரம் என அழைக்கப்படும். இச்சிகர அமைப்பினை சதுரமாகவோ, எண்பட்டையாகவோ, வட்டமாகவோ அமைத்திடுவர். அம்மன் கோயிலாக இருப்பின் சிலவிடங்களில் சிகரப்பகுதியை சாலைப் போன்றும் அமைப்பார்கள். சிகர அமைப்பைக் கொண்டு கோயிலைப் பல்வேறு வகையாகக் கூறுவதுண்டு. எண்பட்டைச் சதுரமாக இருந்தால் திராவிடம் என்றும், சதுரமாக இருந்தால் நாகரம் என்றும், வட்டமாக இருந்தால் வேஸரம் என்றும் கூறுவார்கள். இவ்வமைப்பு சிகரங்களை பரவலாக எல்லா கோயில்களிலும் காணலாம்.

## ஸ்தூபி (கலசம்)


சிகரத்தின் மேல் இறுதியாக இடம்பெறுவன ஸ்தூபி என்பர். குடம் என்றும் கலசம் என்றும் கூறுவதுண்டு. தொடக்க காலத்தில் கருங்கல் கொண்டு அமைக்கப்பட்ட கலசம் பிற்காலத்தில் செப்பு கலசமாக மாற்றம் பெற்று பொலிவு பெற்று விளங்குகிறது.

திருக்கோயிலின் முன்பாக எடுக்கப்படும் மண்டபங்கள் மூன்று அங்கங்களைக் கொண்டு அமைக்கப் பெறுவதாகும். அதிட்டானம், கால், பிரஸ்தரம் என்று இவைகளைப் பெயரிட்டு அழைக்கலாம்.


இங்கு கல்ஹாரம் என்றழைக்கப்படும் கருவறையின் கட்டடத்தில் இடம்பெறும் (அதிஷ்டானத்தின் கீழே அமையப்பெறும்) உப பீடத்தைப் பற்றி அறிந்து கொள்வோம். உப பீடமானது பொதுவாகக் கருவறை மட்டுமல்லாமல் பரிவார ஆலயங்கள், மண்டபம், பலிபீடம், த்வஜ ஸ்தம்பம், கோபுரம் ஆகிய கட்டுமானங்களிலும் இடம் பெறுவதுண்டு.

சிற்ப நூல்களில் குறிப்பிடப்படும் சில வகை உப பீடங்களையும் அவற்றில் இடம்பெறும் உறுப்பின் பெயர்களையும் இங்கு வரைபடங்களோடு சுட்டிக் காட்டப்படுகிறது.


திரியாங்க உபபீடம்





அஷ்டாங்க உபபீடம்





பஞ்சாங்க உபபீடம்





பிரதிபுத்ர உபபீடம்





ஷடாங்க உபபீடம்





பிரதி சுந்தர உபபீடம்



சௌபத்ர உபபீடம்




கல்யாணக் காரிகை உபபீடம்




(வளரும்)

# நந்தவனப் புறம் கல்வெட்டு

**கி. ஸ்ரீதரன்**

மாவட்டம் : திருச்சிராப்பள்ளி வட்டம் : துறையூர்

ஊர் : சின்னகண்ணுப்பட்டி

கல்வெட்டு உள்ள இடம் } திருவாளர் வாசுதேவன் அவர்களின் நிலம்

காலம் : 16ஆம் நூற்றாண்டு

செய்தி : துறையூர் அருகே பெருமாள் மலையில் உள்ள திருமால் கோயிலுக்கு நந்தவனம் அமைப்பதற்காக நந்தவனப்புறமாக நிலம் அளித்த செய்தி கூறப்படுகிறது.

கல்வெட்டு : ஆழிக்கல்

சக்கரம் பொறிக்கப்பட்டு அதன் கீழே கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

1. ஸ்வஸ்திஸ்ரீ அ
2. ழகிய மண
3. வாளப் பெரும
4. ாள் (ஏசா) ந்தை
5. திருநந்தவன
6. ப்புறம்

குறிப்பு : இக்கல்வெட்டு குறித்து தகவல் அளித்தவர்கள் திருச்சி பீமநகர் திரு. லெ. சுபாஸ் சந்திரபோஸ், காளிப்பட்டி திரு. வாசுதேவன் மற்றும் இக்கல்வெட்டினை படியெடுத்தவர் திரு. சு. நடராசன், தொல்லியல் துறை பதிவு அலுவலர் அலுவலகம், திருச்சி.

(சென்ற இதழ் தொடர்ச்சி)



# திருமுருகாற்றுப்படையின் ஆசிரியர்

முனைவர் பே.க. வேலாயுதம்

## நக்கீரதேவ நாயனாரின் நூல்கள்

இனி, நக்கீர தேவ நாயனாரின் நூல்களாகப் பதினோராந் திருமுறையில் இடம்பெற்றுள்ள நூல்கள் பத்து, அவை (1) கயிலை பாதி காளத்தி பாதித் திருவந்தாதி (2) திரு ஈங்கோய்மலை எழுபது (3) திருவலஞ்சுழி மும்மணிக் கோவை (4) திருஎழுகூற்றிருக்கை (5) பெருந்தேவ பாணி (6) கோபப் பிரசாதம் (7) கார்எட்டு (8)போற்றித் திருக்கலிவெண்பா (9) திருமுருகாற்றுப் படை (10) திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்பன. அத் திருமுறையில் இவை முறையே 9 முதல் 18 வரையுள்ள நூல்களாகும்.

## சிக்கலுக்குரிய நூல்

இப்பத்தனுள் திருமுருகாற்றுப்படையே சிக்கலுக்குரிய நூல். அதனால் அதனைக் கடைசியில் ஆராயலாம்.

## குறிப்பும் இல்லை

எஞ்சியுள்ள ஒன்பது நூல்களில் கயிலை பாதி காளத்தி பாதித் திருவந்தாதி, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, பெருந்தேவ பாணி, கார் எட்டு, திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்ற ஐந்து நூல்களில் முருகனைப் பற்றி இம்மியும் குறிப்பு இல்லை.

## குறிப்புள்ள நூல்கள்

எஞ்சியுள்ள நூல்களுள் திருஈங்கோய்மலை எழுபது என்னும் நூலில்

"பூமயிலி தாதை பொருப்பு" (10)

"இன்பக்
குமரன்முது தாதையார் குன்று" (40)

என்றும், திருஎழுகூற்றிருக்கை என்னும் நூலில்

"நன்றி இல்லா முந்நீர்ச் சூர்மாக்
கொன்றங்(கு) இருவரை எறிந்த ஒருவன்
தாதை"

என்றும் முருகனைப் பற்றிய குறிப்புக்கள் உள்ளன.

இம் மூன்று இடங்களும் சிவனையே சுட்டுவன. என்றாலும், முருகனைச் சொல்லிச் சிவனைச் சுட்டுகின்றன. இது இடைக்காலத்தில் வழக்கிலிருந்த ஒரு மரபு. சங்க காலத்திலேயே இம் மரபு தொடங்கிற்று என்பதைக் கந்தரத்தனார்' என்றும் பெயர்கொண்டு காட்டினோம்.

தேவாரங்களில் முருகன் தாதை, கந்தன் காதை எனச் சிவனைச் சுட்டும் வழக்கம் மிகுதி. ஏன், வைணவ இலக்கியங்களாகிய திவ்வியப் பிரபந்தங்-களிலும் கம்ப இராமாணத்திலும்கூட இம் மரபு பின்பற்றப்பட்டுள்ளது. இந்த அடிப்படையிலேயே மேலே நாம் காட்டிய மூன்று குறிப்புக்களும் அமைந்துள்ளன. இக்குறிப்புக்களைக் கொண்டு நக்கீர தேவ நாயனார் முருகனுக்கு முதன்மையிடம் கொடுத்துவிட்டதாகக் கொள்ள முடியாது.

அடுத்து, போற்றித் திருக்கலி வெண்பா என்னும் நூலில்

"–விடைகாவல்
தானவர்கட்கு ஆற்றாது தன்னடைந்த நன்மைவிறல்
வானவர்கள் வேண்ட மயிலூரும் – கோனவனைக்
சேனா பதியாகச் செம்பொன் முடிகவித்து
வானாள வைத்த வரம்போற்றி" (கண்ணி 31,32)

என்று சிவன் முருகனைச் சேனாபதியாக்கித் தானவர்களை வென்றி கொண்ட பிறகு முருகனுக்கு முடிகவித்து வானுலகை ஆளவைத்த கதை கூறப்படுகிறது. இப் பகுதியும் சிவன் பெருமை கூற அமைந்ததேயன்றி முருகன் பெருமை கூற அமைந்தது அன்று.

## உள்ளமெல்லாம் சிவனே

நக்கீரதேவ நாயனார் படைத்ததாகக் கருதப்படும் பத்து நூல்களுள் திருமுருகாற்றுப்படை ஒன்று மட்டுமே முருகன் பெருமையை நூல் முழுதும் பேசுவது. ஏனைய அனைத்தும் தொடும் இடங்களில் எல்லாம் சிவன் பெருமையைச் செப்புவதாகவே காண்கின்றோம். அதனால் நக்கீரதேவ நாயனாரின் உள்ளமெல்லாம் பிற தெய்வத்திற்கு இம்மியும் இடங்கொடாது சிவச் சிந்தனையே நிறைந்திருந்தது என்பது உறுதி.

## தீர்ப்புரைக்கும் நூல்

நக்கீர தேவ நாயனாரின் நூல்களிலே இன்னும் நம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளாத நூல் 'கோபப் பிரசாதம்' மட்டுமே. அந்நூலே அவரது உள்ளத்தை நன்கு வெளிப்படுத்துவது; இவ் வழக்கை முடித்துவைப்பதுங் கூட.

## கூற்றுவன் குற்றவாளியே!

குற்றவாளிக் கூண்டிலே கூற்றுவனை (எமனை) நிறுத்தி நக்கீர தேவ நாயனார் தீர்ப்பு வழங்குகிறார். கூற்றுவன் குற்றவாளியே எனத் தீர்ப்புரைக்கும் கடைசி வரிகள்

"முன்னே அறியா மூர்க்க மாக்களை
இன்னே கொண்டு ஏகாக் கூற்றம்
தவறுபெரி துடைத்தே தவறுபெரி துடைத்தே"

என்பவை ஐயத்திற்கு இடமின்றி அடுக்குத் தொடரில் தேற்றோகாரத்தோடு தீர்ப்பு அமைகிறது.

## செய்த குற்றம்

"முன்னே அறியா மூர்க்க மாக்கள்" என்று யாரைக் குறிப்பிடுகிறார்?

சிவனைத் தொழாமல் மற்ற தெய்வங்களை நினைப்பவர் அனைவரையுமே அறியா மூர்க்க மாக்கள் என்கிறார். அம் மூர்க்க மாக்களைக் கொல்லாமல் வாழவிட்டதே கூற்றுவன் செய்த பெரிய குற்றம் என்கிறார்.

## ஏனோர் செயல்

சிவனை விட்டு ஏனைய தெய்வங்களைத் தொழுவோரின் செயல்களுக்குப் பல உவமைகள் கூறி விளக்கம் செய்கிறார்.

"மாமுயல் விட்டுக்
காக்கை பின்போம் கலவர் போலவும்
விளக்குஅங் கிருப்ப மின்மினி கவரும்
அளப்பரும் சிறப்பில் ஆதர் போலவும்"

*(கலவர்–கீழ்மக்கள்; ஆதர்–அறிவில்லாதவர்)*

ஏனோர் செயல்கள் அமைகின்றன என்கிறார்.

## கோச்சைத் தேவர்கள்

மற்ற தேவர்களின் நிலையைக் கூறும்பொழுது

"கச்சங் கொண்டு கருந்தொழில் முடியாக்
கொச்சைத் தேவரைத் தேவரென்று எண்ணிப்
பிச்சரைப் போலவோர்
ஆரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்புற்று
வட்டணை பேசுவர்"

என்று தமிழகத் தெய்வ வரலாற்றையே சுருக்கமாக வரைந்துவிடுகிறார். சிவனைத் தவிர மற்றைய தேவர்கள் அனைவருமே நக்கீர தேவ நாயனாரின் நோக்கிய கொச்சைத் தேவர் ஆகிவிடுகின்றனர்.

## ஒப்பிலாச் சிவன்

'அப்படி என்ன சிவனுக்கு ஏற்றம்? எனப் பலர்–உலகமே–வினவலாம். உண்மையில் ஏற்றம் இருக்கத்தான் செய்கிறது. சிலவற்றைக் காணலாம்.

(1) தொடக்க காலத்தில் படைத்தலுக்குப் பிரம்மனையும் காத்தலுக்குத் திருமாலையும் அழித்தலுக்கு உருத்திரனையும் கடவுளாகக் கொண்டு மக்கள் வழிபட்டனர். காலப்போக்கில் தங்கள் தங்கள் கடவுளை உயர்ந்தவர் என்ற எண்ணம் முகிழ்ந்து அரும்பிப் போதாகி மலர்ந்தது. அதிலிருந்து வெளிப்பட்ட தீநாற்றம் மக்களிடையே அமைதியின்மையையும் கலகத்தையும் உண்டாக்கிற்று.

இவற்றையுணர்ந்த தமிழ்ச் சான்றோர்கள் அம் மூன்று கடவுளரையும் ஒன்றாக இணைத்து, இணைக்கப்பட்ட உருவத்தைச் 'சிவன்' என்று பெயரிட்டு வழிபாட்டிற்குக் கொண்டுவந்தனர். சிந்து சமவெளியில் கிடைத்த மூன்று முகங்களோடு கூடிய சிவனுரு இவ்வாறு அமைந்ததே. 'சிவ்' என்னும் தமிழ்வேர்ச் சொல்லுக்குப் 'பொருந்துதல்' என்பது பொருள். இவ்வேரிலிருந்தே சிவண், சிவணி, சிவணிய என்னும் வினை வடிவங்களும் சிவன் என்னும் பெயர் வடிவமும் உருவாயிற்று. வடமொழியிலும் 'சிவ்' என்னும் வேர்ச்சொல்லுக்கு 'Unite' என்றே பொருள் காண்கிறார் மானியர் வில்லியம்ஸ்.

மூன்று இறைவரும் இணைந்த நிலையைத் தமிழில் மூவன் என்றனர். ஓர் உடலும் மூன்று முகமும் கொண்ட உருவம் அது. அச்சிவன் பெயரைக் கொண்ட குறுநில மன்னர்கள் 'மூவன்' என்று வழங்கப்-பட்டுள்ளமையும் புலவருள் ஒருவர் 'அம்மூவனார்' என்று பெயர் பெற்றுள்ளமையும் சங்க இலக்கியங்களில் காணலாம்.

தனியாக உள்ள மூவரினும் மூவர் இணைந்துள்ள சிவன் மேலானவன் அல்லவா?

பிரமன் என்றால் படைக்கத்தான் முடியும்; காக்கவும் அழிக்கவும் முடியாது. திருமால் என்றால் காக்கத்தான் முடியும்; படைக்கவும் அழிக்கவும் முடியாது. உருத்திரன் என்றால் அழிக்கத்தான் முடியும்; படைக்கவும் காக்கவும் முடியாது. ஆனால், மூவரும் இணைந்த சிவனோ படைக்கவும் முடியும், காக்கவும் முடியும், அழிக்கவும் முடியும்.

இக் காரணங்களினால்தாம், சிவனை 'மகேசன்' என்றும் 'மகேஸ்வரன்' என்றும் 'பெருந்தேவன்' என்றும் தொடக்கக் காலத்தில் எல்லாச் சமயங்களும் ஒத்துக்கொண்டன. இமயம் முதல் குமரி வரை – ஏன் கடல் கொண்ட தென்னாட்டிலும் கூட – சிவ வணக்கமே பெருகியிருந்தது. சிவ நெறிச் சின்னமாக ஒவ்வொருவர் கையிலும் மூவிலை வேல்–சூலம்–இருந்தது.

கையில் மூவிலை வேல்–சூலம்–இருந்தது உண்மை. ஆனால், உள்ளத்தில் ஓரணு உயிர்க்கும் ஊறு செய்யாத அருள் மண்டிக் கிடந்தது. சிவநெறியாளர்க்கு அது சமயச் சின்னம். பிரமன் திருமால் உருத்திரன் ஆகிய மூவரும் இணைந்து ஒன்றாக நிற்கும் சமய நல்லிணக்கச் சின்னம், மாற்றுச் சமயத்தாருக்கு அது கொலைக் கருவியாகக் காட்சியளித்தது. இதன் மற்றொரு நிலையே கலித்தொகையில் நாம் காணும் 'முக்கோல்' (பகவர்கள்).

இதுவரை ஓகநிலைச் சிவனை (யோகநிலைச் சிவனை) ஓரளவு கண்டோம். அடுத்து, ஆடும் நிலைச்சிவனைக் காண்போம். (ஓகம் உயர்வு).

ஓகநிலைச் சிவனுக்கு முகம் மூன்று; கை இரண்டே. இருக்கை நிலை, இயக்கமற்ற அமைதிச் சூழல், படைத்தல், காத்தல், அழித்தல்

ஆகிய முத்தொழில் ஆகும். நிலைச் சிவனுக்கோ முகம் ஒன்றே; ஆனால், கைகள் நான்கு நின்றாடும் நிலை. இன்னியங்கள் முழங்குகின்ற ஆரவாரச் சூழல், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில் (பஞ்ச கிருத்தியங்கள்).

ஒகநிலைச் சிவன் வானத்தின் இயக்கமற்ற நிலையைப் புலப்படுத்துவது. அதனால்தான் அவனைத் தமிழர்கள் விண்ணவன், வானவன், விசுவமீத்திறன் (விசும்பு என்ற மிக்க ஆற்றலுடையவன்) வான்மீகி (வானம் என்னும் மிகையோன்) என்றெல்லாம் குறிப்பிட்டனர். இச்சொற்களின் பொருள் புரியாமலோ வேண்டுமென்றோ 'விசுவாமித்திரன்' என்றும் 'வால்மீகி' என்றும் மாற்றி எழுதித் தமிழரின் தத்துவங்களை நாசஞ் செய்வதோடு தத்துவக் கடவுளரையும் தம்மவர் ஆக்கிக்கொண்டு வேண்டாத தத்துவங்களை விரிந்துரைத்தனர்.

எடுத்துக்காட்டிற்காக ஒன்று.

இந்த வானவெளியிலே ஆயிரக் கணக்கான பேரண்டங்கள் உள்ளன. ஒவ்வொரு பேரண்டத்திலும் பல ஆயிரங் கோடி நட்சத்திரங்கள் உள்ளன. நம் பேரண்டம் பத்தாயிரம் கோடி நட்சத்திரங்களைக் கொண்டது. இப்பேரண்டத்தின் இயக்கத்தைக் காட்டுவதே நம் ஆடுஞ்சிவன். ஆடுஞ் சிவனைச் சுற்றி அமைந்துள்ள 'திருவாசி' எனத் தவறாக வழங்கப்படும் 'இருள்வாசி' என்னும் ஒளிச்சுடர் வளைவே பிற பேரண்டங்கள்.

(அடுத்த இதழில் நிறைவுறும்)

## **தினமலருக்கு** நன்றி !

***பழங்காசு*** முதல் இதழ் வெளிவந்த நேரத்தில் எதிர்பாராது எங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தி தங்களின் வாழ்த்துக்களோடு ரூ. **1000/-** நன்கொடையளித்த **தினமலர்** நாளிதழுக்கும் அதன் ஆசிரியர் **நாணயவியல் ஆய்வுச் செம்மல் இரா. கிருஷ்ணமூர்த்தி** அவர்களுக்கும் எங்களின் மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

***பழங்காசு*** வெளியீட்டுச் செய்தியை முதலில் வெளியிட்ட **நாளை விடியும்** இதழுக்கும், மக்களுக்கு அறிமுகம் செய்த **முங்காரி, தினத்தந்தி, யாதும் ஊரே** ஆகிய இதழ்களுக்கும் எங்களின் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

# பொன்விழா காணும் தென்னிந்திய இரயில்வேக்கு பழங்காசின் வாழ்த்துக்கள்



1908ம் ஆண்டு எழும்பூர் சந்திப்பு கட்டிடக் கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் எடுக்கப்பட்ட புகைப்படம். இக்கட்டிடம் மொகலாயர் கலை பாணியில் கட்டப்பட்டதாகும். இக்கட்டுமானப் பணியின் ஒப்பந்தக்காரர்களுள் சாமிநாதப்பிள்ளை மற்றும் பொன்னிருளப்பிள்ளை ஆகியோரும் பங்கேற்றுள்ளனர். அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த டி.ஆர். சிவக்குமாரன் [பொறியியலார், (ஓய்வு) HRDC, BHEL, திருச்சி–14] அவர்கள் பழங்காசு இதழுக்கு நல்கிய இப்புகைப்படத்தினை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம். அன்னாருக்கு நன்றி.

# தென்னிந்தியா றெயில்வே-ஒரு தமிழனின் பாவியம்

-ப. சீனிவாசன்


1853 – இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனை. ஆம்! நமது நாட்டில் முதல் புகைவண்டி இவ்வாண்டில்தான் மும்பைக்கும் தானாவிற்கும் இடையே ஓடத்தொடங்கியது. அடுத்த மூன்றாண்டுகளில், 1856ம் ஆண்டு மே 28ம் நாள் தமிழகத்திலும் புகைவண்டியின் பேரிரைச்சல் கேட்கத்தொடங்கியது. இவ்வண்டி இராயபுரத்திற்கும் வாலாஜா ரோடுககும் இடையில் பயணப்பட்டது. இவ்வாறு தொடங்கிய புகை வண்டியின் பயணப் பாதைகள் (1861) நாகப்பட்டினம் – தஞ்சாவூர், (1862) தஞ்சாவூர் – திருச்சிராப்பள்ளி, (1880) சென்னை – தூத்துக்குடி, திருசசிராப்பள்ளி – ஈரோடு, செங்கல்பட்டு–அரக்கோணம், விழுப்புரம் – செஞ்சி என்று விரிவடையத் தொடங்கின. இரயில்வண்டிப் பயணம் எளிதாகவும், நலமாகவும், விரைவாகவும், சிக்கனமாகவும் இருந்ததால் இது, மக்களின் வாழ்க்கையில் பிரிக்கவியலா அங்கமாகவும் மாறியது. சமூகத்தில் தீண்டாமை கட்டுதளர இதுவும் ஒரு காரணமாயிற்று.

1902ல் இரயில் வண்டிப் பயணம் பற்றியும் சென்னை – நாகப்பட்டினம் மற்றும் பிற நிலையங்கள் பற்றியும் பாடப்பட்ட இச்சிந்து, புகைவண்டி பற்றி அக்காலத்திய மக்களின் வியப்பையும், பாராட்டையும் நமக்கு புரியவைக்கிறது. இறுதி வரிகளில் எழுதியவர் பெயர் வீரபத்திரன் என்றும், ஊர் திருவண்ணாமலை என்றும் பாட்டாகவே குறிக்கப்பட்டுள்ளன. இச்சிந்தில் பல ஊர்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அவைகள் அனைத்துமே 1902ல் புகைவண்டி நிலையங்கள்தானா என்பது ஆராயப்படவேண்டிய ஒன்றாகும். மதுராந்தகம் – மதுராந்தம் என்றும், வைத்தீஸ்வரன்கோயில் – வயித்தீஸ்வரன்கோயில் என்றும், பாபநாசம் – பாபவிநாசனம் என்றும், திருவாரூர் – திருவாலூர் என்றும், சிக்கல் – சிக்கில் என்றும், திருச்சிராப்பள்ளி – திருச்சினுப்பள்ளி என்றும், கள்ளிக்குடி – கள்ளுகுடி என்றும், விருதுநகர் – விருதுப்ட்டி என்ற பழம்பெயரிலும், தட்டப்பாறை – திட்டப்பாறை என்றும் சொல்வழக்காகவே குறிக்கப்பட்டுள்ளன.

பொன்மலை இரயில்வே மேல்நிலைப்பள்ளியில் ஒய்வுபெற்ற தலைமைத் தமிழாசிரியர் திரு. **P.S.** தனராஜ் அவர்களின் சேகரிப்புக்களை மேய்ந்தபொழுது இச்சிறு நூல் என்னை வியப்பில் ஆழ்த்தியது. தென்னிந்திய இரயில்வே வரலாற்றில் 1874 ஆம் ஆண்டு, Great Southern of India Railway என்ற நிறுவனமும் Carnatic Railway Company என்ற நிறுவனமும் இணைந்து South Indian Railway Company–ஐத் தோற்றுவித்தன. தென்னிந்தியா றெயில்வே என்றப் பெயரோடு சேர்த்து 'கர்நாடகப் புகைவண்டி' என்ற பெயரையும் இதற்குத் தலைப்பாகக் கொடுக்கப்பட்டதிலிருந்து 28 ஆண்டுகளாகியும் புதிய பெயரான தென்னிந்தியா றெயில்வே என்பது மக்கள் மனதில் நிலை கொள்ளவில்லையோ என்று ஐயப்பட வைக்கிறது.

> பொன்விழாவைக் கொண்டாடும் தென்னிந்திய இரயில்வேக்கு, 1902ல் ஒரு தமிழன் வழங்கிய பாராட்டுரையை மறு வெளியீடு செய்வதில் பெருமிதம் அடைகிறோம்.

இந்நூலை மறுவெளியீட்டிற்கு அளித்த திரு.**P.S. தனராஜ்** அவர்களுக்கு நன்றி!



கடவுள் துணை.

தென்னிந்தியா றெயில்வே

என்னும்

கர்னாடகப்புகைவண்டியின்சிந்து.

சென்னை - புரசை

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்


பதிப்பிக்கப்பட்டது.

1902.

# தென்னிந்தியா றெயில்வே

என்னும்

## கர்னுடகப் புகைவண்டி யின் சிந்து.



தென்னிந்தியா றெயில்பாரடி - பெண்ணேயிது
தெற்கேபோகும்நேரடி

மன்னர்கள்தான்துதிக்கும் மதிருஸ்கருகாக
உன்னிதமாகவே யுகமையாயேர்ப்பட்ட (தெ)

மண்டலத்தோர்புகழும் மதிருஸ்எம்பூரினில்
கண்டவர்வியப்படையக் கருதிநியமித்த (தெ)

சட்டமுடன்ஸ்டேஷன் பட்டணத்தோர்போற்ற
திட்டமதாகவே கட்டியிருக்கிற (தெ)

கண்ணுடிகதவுகள் கனத்தஆபீசுகள்
விண்ணுடரும்மெச்ச விதமாகயேர்ப்பட்ட (தெ)

கைகாட்டி மரங்களும் கனத்த ஆளுகளும்
பைகாட்சினேகர்முதல் பலருமிருக்கிற (தெ)

இஞ்சின்வண்டி முதல் இணையில்லாவண்டிகள்
அஞ்சுதலில்லாமல் தங்கியிருக்கிற (தெ)

டிக்கட்டுகள்வாங்கி இக்கட்டில்லாமலே
பக்குவமாகவே தக்கபடிபோவோம் (தெ)

சைதாப்பேட்டை ஸ்டேஷன் சார்ந்தபரங்கிமலை
பயிலாகிறெயில்வண்டி பார்மீதிலேபோகும் (தெ)

பல்லாவரம்பாரு பக்கத்தில்வண்டலூரு
எல்லார்தங்கும்கூடு வாஞ்சேரியிதுபாரு (தெ)

அங்கமதுயீடேற ஆண்டவனைப்போற்றும்
சிங்கப்பெருமாள்கோயில் ஸ்டேஷனிதுபாரு (தெ)


தங்கியிளப்பாரி தாகவிடாய்தீர
செங்கற்பட்டுஸ்டேஷன் சிறப்பதாய்நாம்வந்தோ (தெ)

கோர்ட்டுமுதலான தூக்குமரங்களும்
மேட்டிமையாய்ச்ஜெயில் தாட்டியாய்த்தோற்றுது (தெ)

பொன்விளைந்தகளத்தூரு* புகலரியமதுருந்தம்
தன்மையுள்ளதாசீல்தார் நடத்துங்கச்சேரி (தெ)

* பொன்விளைந்தகளத்தூரில் புகைவண்டி நிலையம் இருந்ததற்கு சான்று கிடைக்கவில்லை.

அச்சரவாக்கமிது அடர்ந்துவரும்றெயில்வண்டி<br>
இச்சையுடன்மாற்றும் இணையில்லாஸ்டேஷனிது (தெ)



ஒலக்கூருதாண்டி நாம் ஒயிலானதிண்டி வனம்<br>
கலக்கமிலாத்தா லுக்கா கட்டழகிவந்தோம்பார் (தெ)

புதுமையுள்ளசத்திரத்தில் போஜனம்நாம்செய்து<br>
இதமுடன்றெயிலேறி இக்ஷணம்போகலாம் (தெ)

மானிலந்தான்புகழும் மயிலமெனுந்தலத்தில்<br>
கானமயில்மீதேறும் கர்த்தனிருக்கிறுர் (தெ)

கண்டு பணிந்தால் கர்மவினைகள்போகும்<br>
வண்டு நிகர்விழியாளே மாங்குயில்மொழியாளே (தெ)

விக்கிரவாண்டி விழுப்புரந்தாண்டி<br>
பக்கத்தில்பண்ரூெட்டி பண்புள்ளஸ்டேஷனிது (தெ)

நெல்லிக்குப்பமெனும் நேரானவூரிது<br>
அல்லலகற்றுந்திருப் பாதிரிப்புலியூரிது (தெ)

பேடைமயிற்கண்ணுளே பிரியாதசெந்தேனே<br>
கூடலூர்ஸ்டேஷனைக் குறிப்பாகநீபாரு (தெ)

ஆலப்பாக்கமிது அடுத்தபரங்கிபேட்டை<br>
கோலமுள்ளகாயலார் குடி களிருக்கிறுர் (தெ)

பார்த்தனி லுள்ளோர்கள் பத்தியாய்தான்துதிக்கும்<br>
சீருள்ளசிதம்பரத் தெரிசனஞ்செய்யடி (தெ)

நடராஜர்வீற்றிருக்கும் நலமானசிற்சபையை<br>
மடமயிலேநீயும்மனதினிற்போற்றடி (தெ)

தொல்லேவினேகளேத் துரத்திக்கருவறுக்கும்<br>
தில்லேமாகாளியின் தெரிசனஞ்செய்யடி (தெ)

கனிவர்க்கங்களுண்டு காசாலட்டு*முண்டு<br>
இனிமைப்பிரசாதங்க ளிருக்குமிடமுண்டு (தெ)

வல்வினேயைத்தீர்க்கும் வயித்தீஸ்வரன்கோயில்<br>
எல்லேயைவிட்டு மகா வேகமாய்த்தான்போகும் (தெ)

மாயவரங்குத்தாலம் வயங்குநரசிங்கபேட்டை<br>
தூயஸ்டேஷன்கள் தாண்டி துரிதமாகப்போகும் (தெ)

திருவிடைமருதூர் தேன்பொழியுங்கும்பகோணம்<br>
பருவுஞ்செந்தலேப்பேறு** வந்தோமிப்போதடி (தெ)

பாவவிநாசனம் பகரும்ஜயம்பேட்டை<br>
சோபமதைநீக்குஞ் சொகுசுள்ள தஞ்சாவூர் (தெ)

---

* ஒருவகை மாம்பழம். கிளிமூக்கு என்றும் பெங்களூர் மாம்பழம் என்றும் கூறுவர்.

** சுந்தரபெருமாள் கோயிலாக இருக்கலாம்.

முப்பத்திரண்டும் முதன்மையாய்செய்வித்த
தப்பில்லாபோஜராஜன் தங்கியதஞ்சாவூர் (தெ)



சாலியமங்கலம் சார்ந்த அம்மாபேட்டை
நீடாமங்கலமிது நேர்ந்தகொரடாச்சேரி (தெ)

குளிக்கரைஸ்டேஷனிது குணமுள்ள திருவாலூர்
களிக்கவேதியாகரைக் கண்டுதெரிசிப்போம் (தெ)

இத்தலந்தன்னிலே யிணையில்லாதேருகள்
மெத்தவுச்சிதமாக மேன்மையாய்த்தோற்றுது (தெ)

அப்புரமிருக்கும் அடைவானஸ்டேஷன்களை
தப்பிதமில்லாமல் தண்மையுடன்சொல்வேன் (தெ)

கீவளூர்தானிது கிளர்ச்சிக்கில்தானது
மேவிநாகப்பட்டணம் மேன்மையுடன்வந்தோம் (தெ)

திடமுள்ள திருச்சினாப்பள்ளி ஸ்டேஷனிது
வடமேற்குறெயில்பாதை வந்துகலக்கும்பாரு (தெ)

பிட்டுக்குமண்சுமந்து பிரம்பாலடிபட்ட
திட்டமுள்ளசொக்கநாதர் திருமதுரைதலமிது (தெ)

அங்கயற்கண்மீனாட்சி யம்மனிருக்கிற
சங்கைகளில்லாத சன்னதியிற்கோறு (தெ)

திருப்பரங்குன்றம் திருமாநகரம்
விருப்பமுள்ளகள்ளுகுடி விருதுபட்டி ஸ்டேஷன் (தெ)

துலுக்கப்பட்டி சாத்தூர் கோவில்பட்டி குமரிபுரம்
துடர்ந்துவரும்ஸ்டேஷன் துருசாய்போகும் இஞ்சின் (தெ)

கண்டவர்வியப்படையுங் கடம்பூருஸ்டேஷனிது
அண்டையிலிருக்குமணி யாச்சிசத்திரமிது (தெ)

செந்தைகுண்டா*தாண்டி சிறப்பானறெயில்வண்டி
விந்தைமிகும்திருநெல் வேலியிதோவந்தோம் (தெ)

ஏத்தும்திட்டப்பாறை நேத்தியாய்நாம்வந்து
தூத்துக்குடி துலை தூரமேநாம்வந்தோம் (தெ)


தேசமெங்கும் புகழ் திருவண்ணாமலையில்வாழ்
பாசமுடன்வீர பத்திரனியம்பிய (தெ)

தென்னிந்தியா றெயில்பாரடி - பெண்ணையிது
தெற்கேபோகும்நேரடி



தென்னிந்தியா ரெயில்வே சிந்து
முற்றிற்று.

(1902-ன் வரி வடிவத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளது)



* கங்கைகொண்டான்-ஆக இருக்கலாம்



# சோழப் பேரரசு - கூறாக்க நிலை அரசுதானா?

வரலாற்று வித்தகர் ம. இராசசேகர தங்கமணி

கால் நூற்றாண்டு காலமாக, வரலாற்று வரைவியலில் பல புதிய உத்திகளும், கோட்பாடுகளும், அணுகு முறைகளும், வரலாற்றாய்-வாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றால் வரலாற்றில் புத்தொளி பாய்ச்சப்பட்டுள்ளது; வரலாற்றார்வமும் பெருகியுள்ளது.

தென்னிந்திய அரசுகளுள் சோழப் பேரரசிற்கோர் தனிச் சிறப்புண்டு. அதன் பீடும் பெருமையும் தென்னிந்திய வரலாற்று மேதை க.அ. நீலகண்ட சாஸ்திரியார், ஆங்கிலத்தில் "சோழர்கள்" (COLAS) எனும் நூலை எழுதிய பின்னர் உலகம் முழுவதும் பரவ ஆரம்பித்தது. கல்வெட்டு, செப்பேடு, அகழாய்வு, இலக்கியம், அயல் நாட்டார் குறிப்பு முதலான அனைத்துத் தரவுகளையும் பயன்படுத்தி, சாஸ்திரியார், இந்நூலைப் போற்றத்தக்க வகையில் படைத்துப் புகழ் பெற்றார் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அடுத்து தி.வை. சதாசிவ பண்டாரத்தார் அவர்களும் தமிழில் சோழர்கள் பற்றிய அருமையான ஆய்வு நூலைப் படைத்தளித்தார். வரலாற்று மாணவர்களும் ஆய்வாளர்களும் சோழப் பேரரசின் பல பரிமாணங்களைப் பற்றி கற்று, பல புதிய கோணங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளத் தலைப்பட்டனர்.

சோழர் கால அரசு, சமூகம், கலை நிலை, ஆகியவை பற்றிப் பல வரலாற்றறிஞர்கள், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும், நுண்ணிய ஆய்வுகளை மேற்கொள்வதில் முனைந்து செயல்பட்டனர். சோழர், அரசு சமுதாயம் குறித்து புத்தம் புதிய கோணத்தில் நுண்ணிதின் ஆய்ந்து, புரட்சிகரமான கருத்துகளை ஆய்வுலகிற்கு அறிவித்த பெருமை வரலாற்று மேதை பர்ட்டன் ஸ்டீன் அவர்களைச் சாரும். 1980இல் இவர் தனது "இடைக்காலத் தென்னிந்தியாவில் குடியானவர் அரசும் சமுதாயமும்" "*(Peasant State And Society in Medieval South India)* எனும் ஆய்வு நூலை வெளியிட்டு, வரலாற்று ஆய்வுலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்.

ஆய்வறிஞர் பலர் மாபெரும் வரலாற்றறிஞர் சாஸ்திரியாரின் கருத்துக்கு மறுப்பா எனும் முணுமுணுப்புடன் பர்ட்டன் ஸ்டீனின் நூலை வாங்கிப் படித்தனர். களை கட்டியது வரலாற்று ஆய்வுலகு. எங்கு பார்த்தாலும் ஸ்டீனின் நூலுக்கு மறுப்பு. எழுதவேண்டுமென்று பலர் துடித்துக் கொண்டிருந்தனர்.

அப்படி என்ன புரட்சிக்கருத்தைக் கூறி ஆய்வுலகைத் தட்டி-யெழுப்பினார் ஸ்டீன். அதைத்தான் பார்ப்போம். சாஸ்திரியார் சோழப் பேரரசு, பைசாண்டியப் பேரரசைப் போன்று வலிமைமிக்க, மையப்-படுத்தப்பட்ட அரசு எனும் கருத்தை வலியுறுத்திக் கூறியுள்ளார். ஆனால் பர்ட்டன் ஸ்டீன் சோழ அரசு கூறாக்கநிலை அரசுதான் (Segmentary State) மையப்படுத்தப்பட்ட அரசு அல்ல என்று ஆணித்தரமாகக் கூறினார்.

தமிழக முழுதும் கிடைக்கின்ற சாசனங்களைக் கொண்டு அந்நாளைய அரசு, சமூகம், பொருளாதாரம் ஆகியவை பற்றி மானிடவியல் கருத்தோட்டத்துடன் சென்ற முப்பது ஆண்டுகளாக ஆய்வுகள் செய்யப்-பட்டு வருகின்றன. மற்றொரு சாரார் அளவீட்டு முறையைப் (Quantitative Method) பயன்படுத்திச் சில கோட்பாடுகளை உருவாக்கியுள்ளனர். இவர்களுள் நொபரு கரஷிமா, லூ, சுப்பராயலு ஆகிய ஆய்வறிஞர்கள் குறிப்பிடத்-தக்கவர். இந்நிலையில் பர்ட்டன் ஸ்டீனும் அவரது மாணாக்கர்களும் கூறாக்க நிலை அரசு பற்றி ஆய்ந்து அதற்கான ஆதாரங்களை முன் வைத்தனர்.

தென்னிந்திய வரலாற்றறிஞர்களும், வட இந்திய வரலாற்றறி-ஞர்களும், சில அயல்நாட்டு வரலாற்றாய்வாளர்களும் 'கூறாக்க நிலை' அரசு பற்றித் திறனாய்வும், மறு ஆய்வும் செய்தனர். நொபரு கரஷிமாவும் வட இந்திய அறிஞர்களும் ஸ்டீனின் கோட்பாட்டைக் கடுமையாக விமர்சித்தனர். ஜார்ஜ் W ஸ்பென்சர், ஜேம்ஸ் ஐட்ஸ்மேன், கென்னத் ஹால், ரொமீலா தாப்பர், ஹெர்மன் குல்கீ முதலான வரலாற்றறிஞர்களும் தீவிர ஆய்வுகள் செய்து நூல்களாக வெளியிட்டனர்.

கூறாக்க நிலை அரசுக் கோட்பாட்டின் தோற்றம்

இக்கோட்பாடு முதன்முதலாக ஐடன் சௌத் ஹால் (Aidan South Hall) என்பவரால் உருவாக்கப்பட்டது. இவர் ஆபபிரிக்காவில் உள்ள அலூர் (Alur) என்ற பழங்குடியின் வாழ்க்கையில் கிடைத்த தரவுகளைக் கொண்டு, கூறாக்க நிலை அரசு பற்றி ஆய்வுகள் செய்தார்.

## கூறாக்க நிலை அரசு என்றால் என்ன?

பர்ட்டன் ஸ்டீன், ஐடல் சௌத் ஹாலின் ஆய்வு முடிவுகளை எடுத்துக் கொண்டு, இந்திய வரலாறு முழுவதும் கூறாக்க நிலை அரசியலே நிலை பெற்றிருந்தது என வாதிட்டார். அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிக்குப்பின் கூறாக்க நிலை அரசு செல்வாக்கிழந்துவிட்டதாகவும் ஸ்டீன் கருத்துத் தெரிவித்துள்ளார். கூறாக்க நிலை அரசை ஸ்டீன் கீழ்க்காணும் வகையில் விளக்குகிறார்.

"அரசியல் அதிகாரமும் கட்டுப்பாடும் பல ஜீவாதாரமான வழிகளில் வட்டார நிலைப்பட்டதாகவே காணப்பட்ட இடைக்கால இந்திய அரசானது இங்கு கூறாக்க நிலை அரசாகக் கொள்ளப்படுகிறது. இந்த அரசானது ஆக்க அலகுகளின் செயல்வீச்சு, நன்கு வரையறுக்கப் பட்ட நிலையான இனக்குழுமங்கள் வாழும் பிரதேசங்களுக்குள் வரையறை செய்யப்பட்டதாகவே இருந்தது. அப்பிரதேசங்களின் பேராளர்களாக (பிரதிநிதிகளாக) இருந்தோர் பெரும்பான்மையும் அந்த உள்ளூர் வட்டாரத்தில் வாழ்ந்த இனக் குழுக்களின் தலைவர்களாகவோ, தலைமைப் பேச்சாளர்களாகவோதான் இருந்தனர். அத்துடன் தென்னிந்தியாவிற்கே தனிச்சிறப்புத் தருகின்ற உள்ளூர்க் குழுக்களின் நலன்களைப் பிரதிபலிக்கும் பிரதிநிதித்துவம் செய்வனவாக இருந்த கூட்டு நிறுவனங்களில் அவ்வட்டாரத்தின் பொது அலுவல்களில் பங்கு கொண்டனர். இது பிரமிடு எனப்படும் கூர்க்கோபுர முறையின் கூறுகளாக ஆக்கப்பட்ட முழுமை பெற்ற அரசு வகையாகும். இந்த அரசுவகை இப்பெயர் பெறக் காரணம் அதன் கூட்டமைப்பே ஆகும்".

மேலும் கூறாக்க நிலை அரசு (Segmentary State) பற்றி அவர் கூறியுள்ள கருத்துக்களில் கீழ்க்காண்பவை குறிப்பிடத்தக்கவை. மண்டலங்-களுக்குத் தலைமை தாங்கும் சக்கரவர்த்தியின் அரசியலமைப்பின் சிறு (Miniature) வடிவங்களாக குறுநில அரசியலமைப்பு இருக்கும். அதனைப் போன்றே ஊர் அரசியல் அமைப்பும் அமைந்திருக்கும். சுருங்கக் கூறின் பேரரசின் பிரதி பிம்பமாக குறுநில அரசுகள் நிலை பெற்றிருந்தன. பேரரசின் அதிகார வலிமை எல்லைப்புறம் நோக்கிச் செல்லச் செல்ல வலிமை குன்றியிருக்கும். பேரரசின் கீழுள்ள சிற்றரசுகள் அரசியல் மாற்றங்களுக்குக்கேற்ப தமது கூட்டணியினை மாற்றிக்கொண்டே இருக்கும்.

ஸ்டீன் கோட்பாடுகளைப் பற்றி ரொமீலாதாப்பர் ஆய்வு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அவர் கருத்துப்படி கூறாக்கநிலை அரசியல் என்பது நாடு முழுவதும் ஒரே நிலையில் இருந்ததில்லை. ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு பகுதியில் இந்நிலை எழுச்சி பெற்றது. அதுவும் பழங்குடி நாடுகள் அரசு அமைப்பிற்குள் கொண்டு வரப்பட்ட நிலையில் கூறாக்க நிலை அரசின் கூறுகள் சில தெளிவாகப் புலப்பட்டன என்பதாகும். மேலும் ஸ்டீன் காலத்திற்கு முன்பு வரை இந்திய அரசானது மையப்-படுத்தப்பட்ட அரசு என கருத்தின் உண்மைத்தன்மையைப் பற்றிய ஐயப்-பாட்டை எழுப்புகின்றது. நெடுங்காலமாக இந்திய வரலாற்று ஆய்வுகளில் நிலைபெற்றிருந்த "மையப்படுத்தப்பட்ட அரசு" எனும் கோட்பாடு ஸ்டீன் கோட்பாட்டால்தான் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

ஸ்டீனின் கூறாக்கநிலை அரசுக் கோட்பாடு வரலாற்று ஆய்வாளரி-டையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தி, வரலாற்று ஆதாரங்களை நுண்ணிதின் ஆய்ந்து, புதிய புதிய விளக்கங்களைப் படைக்கத் தூண்டியது என்பதில் ஐயமில்லை. ஸ்டீனின் கோட்பாடு வெளியிடப்பட்ட பின்னரே இந்திய அரசு, குறிப்பாகத் தென்னிந்திய அரசின் இயல்புகள் பற்றிய செய்திகள் துருவித் துருவி ஆராயப்பட்டன. அரசின் தோற்றம், வளர்ச்சி, தன்மை பற்றிய புதிய செய்திகள் தோன்றின. தொல்லியல் அறிஞர் ஆர். பூங்குன்றனும் அரசுத் தோற்றம் பற்றிய ஆய்வேட்டினை வழங்கினார்.

கூறாக்க நிலை அரசியல் என்பது அரசு எழுச்சி பெறா சமூகத்தில் நிலை பெற்றிருக்கும் என்பது மானிடவியல் உறுதிபடக் கூறும் கோட்பாடுதான். இவ்வுண்மையை ஸ்டீன் அவர்களே ஓரிடத்தில் ஒத்துக்கொள்கிறார். இருப்பினும் அவர் சோழப் பேரரசு, கூறாக்க நிலை அரசு என வலியுறுத்துவது முன்னுக்குப் பின் முரணான கருத்தாகும். எனவே அவரது கருத்து ஏற்றுக் கொள்ளத் தக்கது அன்று.

## முடிவுரை

அறிஞர் பர்ட்டன் ஸ்டீன் அவர்களது கோட்பாட்டை மறுப்பவர்களும் அவரது கருத்துக்களையும் வாதங்களையும் முழுமையாக ஒதுக்கிவிடவில்லை. ஓர் அரசின் எல்லைப் பகுதிகளில் நிலைபெற்றிருந்த அரசியல், கூறாக்க நிலை அரசியலாக இருந்தது எனக் கொள்ளும் வகையில் தரவுகள் கிடைத்துள்ளன. ஸ்டீன் அவர்களது புதிய கோட்பாடு வரலாற்றாய்வில் ஒரு மாபெரும் புரட்சியைத் தோற்றுவித்தது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

## பயன்பட்ட நூல்கள்


1) K.A. Nilakanta Sastry 'THE COLAS' - 1975
2) Burton Stein - 'Peasant State and Society in Medieval South India' - 1980.
3) Noboru Karashima - 'South Indian History and Society - Studies from Inscriptions. A.D. 850 - 1800 - 1984.
4) Romila Thappar - "From Lineage to State" - 1984.
5) Herman Kulke - "The State in India 1000 - 1700" - 1997.



**நாமக்கல் மு. இராசாவை பழங்காசு பாராட்டுகிறது**

வரலாற்று ஆர்வலரும், நாணயங்கள் சேகரிப்பாளரும், பழங்காசின் ஆதரவாளரும், நாமக்கல் ஸ்ரீ திருமுருகன் எலக்ட்ரிகல்ஸ் உரிமையாளருமான திரு. மு. இராசா அவர்கள் நண்பர்கள் மற்றும் சுற்றத்தினர்கள் 30க்கும் மேற்பட்ட சந்தாதாரர்களை பழங்காசில் இணைத்துள்ளார். அவரின் செயல்பாட்டை பழங்காசு மனமுவந்து பாராட்டுகிறது. திரு. மு. இராசா போன்ற ஆதரவளார்களால் பழங்காசு மேலும் ஆற்றலுடன் செயல்படும் என்பது உறுதி



# இராஜராஜர் யார்?

முனைவர், டாக்டர் இரா. கலைக்கோவன்,
M.A., M.A., M.B.B.S., D.O., Ph.D.,

இராஜராஜர் யார்? மிக எளிதாகத் தோன்றும் இந்தக் கேள்விக்கு வரலாற்று வரிகளில் அவர் பெற்றிருக்கும் இடத்தைக் கொண்டே விடையிறுத்து விடலாம். சோழவேந்தர் இரண்டாம் பராந்தகரான பொன்மாளிகைத் துஞ்சிய சுந்தரசோழருக்கும், அவருடன் முழங்கெரி நடுவணுந் தலைமகன் பிரியாத் தையலாய் நிலைத்த திருக்கோவலூர் மலையமான் மகளார் வானவன் மாதேவிக்கும் பிறந்த இரண்டு ஆண்மக்களுள் இளையவர். இளவயதிலேயே போர்க்களம் புகுந்து, சேவூரில் மதுரை மன்னர் வீரபாண்டியரைத் தோற்கடித்து, வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரிவர்மராய், நான்காண்டுகள் சோழமண்டலத்தின் பல பகுதிகளில் தம் கல்வெட்டுகளைப் பொறித்த ஆதித்த கரிகாலரின் அருமைத் தம்பி, வல்லவரையர் வந்தியத் தேவர் தேவியார் ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் என்று கல்வெட்டுகள் வானளவப் புகழும் அருமைக்குரிய சோழ இளவரசியைத் தம் தஞ்சாவூர் இராஜராஜீசுவரத்துக் கல்வெட்டில் 'நம் அக்கன்' என்று அன்பொழுக அழைத்துப் பெருமைப்படுத்திப் போற்றி மகிழ்ந்த அவரின் தம்பி.

தக்கோலப் படையெடுப்பால் வலிமையிழந்திருந்த சோழ அரசைக் கண்டராதித்தரும், சுந்தரசோழரும், உத்தமசோழரும் பொலிவுபடுத்த எடுத்த முயற்சிகளையெல்லாம் முழுமையாக்கிய சோழப் பெருவேந்தர் இராஜராஜர். சரணடைந்த எதிரிகளைக் கொல்வதில்லை என்ற அறக்கொள்கையோடு அரசாண்டவர் அருமொழி என்கிறது வீரராசேந்திரரின் கன்னியாகுமரிக் கல்வெட்டு, சோழர்குலத்தின் ஒளியென்றும், இந்திரன் தேவலோகத்தில் வழிபட்டதுபோல் தம்முடைய குடிமக்களால் மதிக்கப்பட்டவரென்றும், தம் ஊரில் மகிழ்வோடு வாழ்ந்த அளவற்ற பெருந்தன்மையாளரென்றும் பெரிய லெய்டன் செப்பேடுகள் இவரைப் புகழ்ந்துரைக்கின்றன. அறிவார்ந்தவர்களின் திருமுகங்களை அன்றலர்ந்த தாமரைகளாய் மலரவைக்கும் எழுகதிரோன்போல் திகழும் பெரியவர்களின் பெருமைகளைத் திரட்டிச் சொல்வது அவ்வளவு எளிதானதன்று என்று இவரைப் பற்றிக் குறிப்பிடும்போது திருவாலங்காட்டுச் செப்பேடுகள் தவித்துப் போகின்றன.

சோழப் பெருநாட்டை இவராண்ட இருபத்தொன்பதாண்டுகளில் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் வெட்டப்பட்ட ஆயிரக்கணக்கான கல்வெட்டுகளின் கண் சிமிட்டங்கள் இராஜராஜரைப் புரிந்துகொள்ள

உதவுகின்றன. பல வரலாற்றாசிரியர்கள் இக்கல்வெட்டுகளின் வரிகளுக்குள் நுழைந்து தேடி அவரைப்பற்றிய வரி வடிவங்களைத் தத்தமது நூல்களில் தந்திருக்கிறார்கள். இராஜராஜரின் மெய்க்கீர்த்தியே அவரைப் படம்பிடிக்க உதவும் ஒரு வழிகாட்டியென்றாலும் இவையெல்லாம் 'இராஜராஜர் யார்'? என்ற கேள்விக்கு முழுமையான விடையாக உருவெடுத்தவல்லனவா?

தஞ்சை மண்ணில் எழுந்ததால், தமிழ்நாட்டுக்கும் தமிழ்க் குலத்துக்கும் உலகப் புகழ் தேடித் தந்த இராஜராஜீசுவரம் இராஜராஜரின் பிரதிபிம்பம். வானந்தழுவ விழைந்தாற்போல் விண்ணுயர எழும்பிநிற்கும் அந்த விமானத்தின் உயரமும் கம்பீரமும், அதைக் காணும்போது கலைநெகிழ் உள்ளங்களில் கனியும் கட்டுக்கடங்காத உயர்வுகளும் இராஜராஜர் யார் என்ற கேள்விக்கு விடை சொல்லக்கூடும். காலநடையில் ஒரு மனிதர் தன்னை அடையாளப்படுத்திக்கொண்டு ஆழ்ந்துறைந்த கட்டுமானம் அது. கனவுகளையெல்லாம் கற்களாக்கி, எண்ணங்களையெல்லாம் சுண்ணமாக்கித் தன் காலக் கலையறிவின் உச்சத்திற்கோர் உறைகல்லாய் அருமொழி கட்டிய அந்தத் திருக்கோயில், தன்மீது பொறிக்கப்பட்டிருக்கும் தன்னிகரற்ற தமிழ் எழுத்துகளாலும், தான் உட்கொண்டிருக்கும் கட்டுமானச் சிறப்பாலும், இராஜராஜர் யார் என்ற கேள்விக்கு விடை காண வேண்டுமென்ற விழைவோடு நெருங்குவோர்க்கு நிறைவான விடையைத் தரக்கூடும்.

எதுவுமே தேடுவோரைப் பொறுத்தமைகிறது. என்ன தேடுகிறோம் என்பதே தெரியாமல் தேடுவோர் சிலர். தேடலே இல்லாமல் தேடுவது-போல் நடிப்பவர் சிலர். கிடைத்ததையெல்லாம் தேடியெடுத்தவைபோல் சுற்றிவிடுபவர் சிலர். குறிக்கோள் இலாது கெட்டேன்' என்று அப்பர் சொன்னது இவர்களுக்குத்தான் பொருந்தும். தேடல் இலாது அமைந்தமையால்தான் பெரும்பாலான வரலாற்று நூல்கள், வரிகளின் அடுக்குகளாக மட்டுமே அமைந்துவிடுகின்றன. வரலாறு, வாழ்க்கையைக் காட்டுவது; அந்த வாழ்க்கையின் படப்பிடிப்பில் மற்றொரு வாழ்க்கைக்கு அடித்தளமிடுவது. வாழ்ந்தவர்களை அடையாளப்படுத்த வேண்டிய வரலாறு, வெறும் நிகழ்ச்சிக் குவியல்களின் தொடரற்ற தொகுப்பாகப் போனதால்தான், வாழ்க்கைக்குத் தேவையற்றது என்ற துன்பநிலைக்குத் தள்ளப்பட்டது. நுட்பநோக்கு, நுணுகிய ஆய்வு, தெளிந்த தேடல், அறிந்துணர்ந்தவற்றின் இடையறாப் பதிவு என்று வரலாறு எழுதப்பட்டிருக்குமானால் இராஜராஜர் யார் என்ற கேள்வியையே இங்கு எழுப்பியிருக்க வேண்டியதில்லை.

அந்தந்தக் காலகட்ட வாழ்க்கையின் விளக்கமாய் அமைந்தவை, அமைபவை இலக்கியங்கள். அவற்றுள் சில எந்தக் காலத்திற்கும் பொருந்தும்

விடிவெள்ளிகளாய் விளங்குவதுண்டு. வள்ளுவம் அத்தகையதோர் உலக இலக்கியம். அதன் மூன்று பகுப்புகளுமே மனித வாழ்வின் மூலங்கள். வள்ளுவம் வழி வாழ்க்கை அமையுமானால், அந்த வாழ்க்கையை நிறைவான வாழ்க்கை என்றிடல் தகும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்றவரும் வள்ளுவர்தானே? இராஜராஜரை யாரென்று காண, வள்ளுவக் கண்ணாடியில் அருமொழியின் வாழ்க்கையை ஏன் பிரதிபலித்துப் பார்க்கக்கூடாது?

தெற்காசிய விமானக் கட்டுமானங்களிலேயே மிக உயரமானது இராஜராஜீசுவரத்தின் விமானம். ஏறத்தாழ ஆயிரம் வயதாகும் அந்த 'எழில்வளர் ஊழியின்' பெருமைகளையெல்லாம் ஒரு கட்டுரைக்குள் சுருக்கிவிட முடியாது. இராஜராஜரே நிமிர்ந்து நிற்பதுபோல் காண்பார் பார்வைக்கும், கலைநோக்கிற்கும் ஏற்பக் காட்சிகளை விரிக்கும் அந்தக் கட்டுமானம், தனக்குள் அடக்கி வைத்திருக்கும் கலையற்புதங்கள் ஒன்றிரண்டல்ல. தமிழ்நாட்டுக் கல்தச்சர்களால் நன்கு திட்டமிடப்பட்டு, அயராத உழைப்பாளிகளின் தொடராற்றல் துணை கொண்டு, கண்ணுக்குள் வைத்து ரசித்து ரசித்து இராஜராஜர் கட்டிய அந்த அழகிமயம், தமிழ்நாட்டின் முதலும் கடைசியுமான மிக உயர்ந்த விமானம். தென்மேரு என்றும், தேவாலயங்களின் சக்கரவர்த்தி என்றும் இன்றளவும் போற்றப்படும் இவ்விமானத்திற்கு முதன்மைத் திசைகள் நான்கிலுமே வாயில்களுண்டு. இப்படி நான்கு வாயில்களுடன் தமிழ்நாட்டில் அமைந்த முதல் விமானமும் இதுதான்; ஒரே விமானமும் இதுதான்.

சாந்தாரம் எனும் இரு சுவர்கள் நடுவே நடை பழகுமளவு இடைவெளியோடு கூடிய விமான அமைப்பைத் தமிழ்நாட்டுக் கலை வரலாற்றில் அறிமுகப்படுத்தியவர், நயன மனோகரரான ராஜசிம்மப் பல்லவர். அவர் கட்டிய கச்சிப்பேட்டுக் கற்றளியின் ஆதிதளச் சுவர்களி-டையே அகலக் குறைவான திருச்சுற்றமைந்து அதை முதல் சாந்தார விமானமாக்கியது. இந்த அமைப்பு, பல்லவர்களால் திருவதிகையில் தொடரப்பட்டாலும், அது பிரதியாக அமைந்ததே தவிர முன்னேற்றமில்லை. ஆனால் நித்த வினோதரான இராஜராஜர், கச்சிக் கற்றளியின் சாந்தார அமைப்பை இராஜராஜீசுவரத்தில் எப்படிப் பயன்படுத்தி எத்தனை அற்புதங்கள் சாதித்திருக்கிறார் என்பதை அந்தக் கோயிலுள் நுழைந்து விமானச் சுவர்களுக்கிடையே சுற்றியும், அண்ணாந்தும், உற்று நோக்கியும், பின் வியந்தும் மட்டுமே உய்த்துணர முடியும்.

ஆதிதளத்தில் மட்டுமே சாந்தார அமைப்புடன் விளங்கும் பல்லவ விமானங்களிலிருந்து பெரிதும் மாறுபட்டு, இரு தளங்களில் சாந்தார அமைப்பு கொண்டு எழுந்த முதல் திருக்கோயில், தமிழ்நாட்டில் இராஜராஜீசுவரந்தான். இரண்டு சுவர்களுக்கிடையில் விழும் இடைவெளிக்

கூரையைப் பலகைக் கற்களால் பல்லவர்கள் மூடியபோது, இரண்டாம் தளச் சுவர்களையே மேல் போகப்போக நெருங்கவைத்துச் 'சுவர்க் காதல்' முறையில் கூரையிட்டுச் சாந்தாரம் அமைத்த பொறியியல் திறம் சோழப் பெருந்தச்சர்களிடமிருந்தது. எப்படியிது சாத்தியம் என்று நம்மையறி-யாமலே வியப்பின் விளிம்பில், விரல் மூக்கின்மேல் அமருமாறு, கற்களை நகர்த்தி இடைவெளிக் குறுக்கம் கண்டது, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் விளங்கிய அறிவின் உச்சமல்லவா! அதற்குத் தூண்டலாய் அமைந்தவர் சோழத் தூங்காமணி விளக்கான இராஜராஜரல்லவா!

சாந்தாரம் கண்டது, கருவறை இறைவனை வலம்வர மட்டுமே என்றிருந்த பல்லவச் சிந்தனை, இராஜராஜீசுவரத்தில் சிறகடித்தது. விளைவு, சுற்றிவரும்போதே வரலாற்றுச் சுகம் காண வனப்பான ஓவியங்கள், ஆதிதளச் சாந்தாரத்தில் எப்பக்கம் திரும்பினும், நிமிர்ந்தாலும், குனிந்தாலும் வண்ணங்களின் தோய்வில் அநுபவத் தூரிகைகள் அள்ளித் தெளித்திருக்கும் காலக் கண்ணாடியின் கலைப் பதிவுகள். நடப்பதே தெரியாமல் ஒரு கனவுலக பவனி. வாயில்களின் எதிரில் இராஜராஜரின் எண்ணங்களைப் போலவே, வீரமும் கலையும் நளினமுமே எம் அடையாளங்கள் எனுமாறு எழுந்தமைந்த பெரிதினும் பெரிதான சிற்பங்கள். தமிழ் எந்தக் காலத்தும் குனிந்துவிடக் கூடாது என்பதற்காகவே உருவாக்கினாற்போல் கழுத்தை வலிக்கச் செய்யுமளவு பார்வைப் பரப்பில் விரியும் கூரைச் சிற்பங்கள். இந்த ஓவியக் கூடத்தின் விரிவான விளக்கங்கள், இராஜராஜர் யார் என்பதை விளக்குவதிலிருக்கட்டும், இந்த அமைப்பே, இதன் நோக்கே அவரைக் காட்டவில்லையா? 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்பதன் உள்நாதம், இந்தத் தொடக்கத்திலேயே செவிக்குள் செந்தேனாய்ப் பாயவில்லையா? சிந்தனைக் கீறல்களை அந்தப் பொருள்நயம் வளர்த்துப்போடும் மாயம் நிஜந்தானே?

சாந்தார இடைவெளியின் மேற்கு அகச்சுவரில், ஒரு பத்தியின் முழுமைக்குமாய்ப் பரவியிருக்கும் சுந்தரர் வாழ்க்கையின் திருப்புமுனைக் காட்சிகள் வரலாற்றில் இராஜராஜருக்கு இருந்த ஈடுபாட்டிற்கு மட்டுமல்ல, தோழமையில் அவருக்கிருந்த நாட்டத்திற்கும், அந்தத் தோழமைப் பண்பையே தம் வாழ்நாளெல்லாம் தம்மைச் சுற்றி நிகழ்ந்த நிகழ்ச்சிகளிடத்தும், தம்மைச் சேர்ந்தும், சார்ந்தும் இருந்த மானுடரிடத்தும் அன்புப் பின்னலாய் வளர்வித்த அவரது ஆளுமைக்கும் மௌனச் சான்றுகளாய் விளைந்துள்ளன. ஆயிரம் ஆயிரம் உரையாடல்களைவிட இதுபோன்ற பொருள் பொறிந்த மௌனங்கள் வரலாற்றிற்கு விடிவிளக்கு-களாய் அமையவல்லன.

(வளரும்)

மெய்ப்புத் திருத்தம் : திரு. **B.S. தனராஜ்** M.A., B.T.,
தலைமைத் தமிழாசிரியர் (ஓய்வு) இரயில்வே மேல்நிலைப்பள்ளி, பொன்மலை, திருச்சி–4.

# சகோதர வாழ்த்துக்கள்

தமிழ்ச் சிற்றிதழ் சங்கம் *(TAMIL SMALL NEWSPAPERS ASSOCIATION - TASNA)* தாஸ்னாவில் பழங்காசு 264–வது உறுப்பிதழாக இணைந்துள்ளது. தாஸ்னாவின் திங்களிதழான 'முங்காரி'யில் பழங்காசினை அறிமுகப்படுத்தி எழுதிய அதன் ஆசிரியர் குன்றம் மு. இராமரத்னம் அவர்கள்.

"தாஸ்னா உறுப்பிதழ்களிடையே தனிச்சிறப்பு வாய்ந்த இதழ் பழங்காசு. முழுமையற்ற – இடைவெளிகள் கொண்ட – இடைச் செருகல்களும், திரிபுகளும் மிகுந்த வரலாறு இன்றைய நம் நாட்டு வரலாறு. உண்மையான–முழுமையான வரலாற்று வரைவுக்குத் தேவையான சான்றாதாரங்களில் பழங்காசுகள், கல்வெட்டுகள், செப்பேடுகள், பழங்காலக் கருவிகள் – பொருட்களின் எச்சங்கள் முக்கியமானவை. அத்தகைய வரலாற்றுச் சான்றுகளைத் தேடி ஆய்வதும், ஆய்வுகளை வெளிக் கொணர்வதும் இந்தக் காலாண்டு இதழின் நோக்கம். இதில் இடம்பெற்றுள்ள ஆய்வுக் கட்டுரைகளும், இவ்விதழை நடத்தும் குழுவே அநுபவமிக்க ஆய்வாளர்களாக அமைந்திருப்பதும் இவ்விதழின் வெற்றிக்கு அச்சாரமாக இருக்கின்றன" என்றும் பாராட்டியுள்ளார்.

'முங்காரி' திங்களிதழ்
புலமைப் பண்ணை, சுகர்கேன் (அ.நி
கோயம்புத்தூர் – 641 007. தொலைபேசி : 472777.

❂ ❂ ❂

'எழுகதிர்' இதழின் ஆசிரியர் முனைவர் அரு. கோபாலன் அவர்கள் 'பழங்காசு'க்கு எழுதிய கடிதம்.

பேரன்புடையீர்! வணக்கம். பழங்காசு இதழ் கிடைத்தது. ஆய்வுக் கட்டுரை–களுடனும், அறிஞர்களின் வாழ்த்துரைகளுடனும் முதல் இதழ் சிறப்பாக உள்ளது.

நம் தமிழ்நாட்டு வரலாற்றறிவு இல்லையென்பது பொருந்தாக் கூற்றாகும். அவர்களின் பொறிப்புக்களை ஒன்றுதிரட்டி ஆய்ந்து முறைப்படி தொகுத்தெழுதாமை தான் குறை. அதை நிறைவு செய்வதே இன்றையத் தேவை. அத்தேவையை 'பழங்காசு' ஈடுசெய்யும் என நம்புகிறேன். பாராட்டுகிறேன்.

அன்புடன்
அரு. கோபாலன்

'எழுகதிர்'
6/77, சுபேதார் தோட்டம், சென்னை – 600 094.

❂ ❂ ❂

அன்புள்ள பழங்காசு இதழ் ஆசிரியருக்கு,

தங்கள் இதழ் பணி சிறக்க வாழ்த்துக்கள்

அன்போடு
எஸ். முருகன்

'தேடல்'
70, தெற்கு ரத்தினசபாபதிபுரம் தெரு,
திருநகரம், அருப்புக்கோட்டை–626 101.

## 'சிற்றிதழ் செய்தி' ஆசிரியர் பொள்ளாச்சி நசன் அவர்களின் கடிதம்

அன்பிற்குரிய பழங்காசு இதழாளர் அவர்களுக்கு பொள்ளாச்சி நசனின் அன்பான வணக்கங்கள். தங்களின் இதழ் கிடைத்தது. மிகவும் மகிழ்ந்தேன். இதழில் வரலாறு தொடர்பான தரமான கட்டுரைகள் இருக்கக் கண்டு மகிழ்ந்தேன். இதுபோன்ற இதழை அரசு நடத்தினால் தொடரும். ஆனால் தரமாகத் தொடராது. தனியார் நடத்தினால் தரமாக இருக்கும். ஆனால் தொடரமுடியாது. படிப்பவர் குறைவு. எழுதுபவரும் பயனாகுபவரும் பாராட்டி எழுதுவர். பணம் அனுப்பமாட்டார். ஒவ்வொரு கட்டுரைக்கும் கட்டணம் வாங்கி இதழ் தொடர்ந்தால் தொடரும். ஆய்வாளர் கட்டணம் செலுத்தி எழுதிட அது சிறப்புறும். தங்களின் முயற்சிக்கு என் வாழ்த்துக்கள்

தங்களின் இதழ் எனது தொகுப்பில் 2410வது வகையான இதழாகும், 2001இல் தொடங்கப்பட்ட இதழ்கள் வரிசையில் 10–வது வகையான இதழாகவும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

முதல் இதழில்,

இரவலர் முத்துவின் ஈகம் உயரியது. கருவூர் காசு வரலாறு காட்டுவதே. பழங்காசும், கல்வெட்டும் தமிழரின், வாழ்ந்த வாழ்க்கையின் எச்சங்கள். இது தொடரவும்.

'சிற்றிதழ் செய்தி' (ஆய்வு இதழ்)
1, சம்பத் நகர், சூளேசுரன்பட்டி–642 006.

அன்புடன்
பொள்ளாச்சி நசன்

❂ ❂ ❂

'யாதும் ஊரே' இதழின் ஆசிரியர் திரு. நா.வை. சொக்கலிங்கம் க.மு. அவர்கள் பழங்காசுக்கு எழுதிய கடிதம்.

தமிழன்புடையீர்! வணக்கம். தாங்கள் வெளியிட்டிருக்கும் பழங்காசு இதழ் – தமிழின், தமிழரின் வரலாற்றுப் பெருமைகளை அறிய உதவும். தமிழின், தமிழரின் தொன்மையை, நாகரிகத்தினை மீட்டெடுக்க 'பழங்காசு இதழ் துணை புரியட்டும். முயற்சி வெல்க!

'யாதும் ஊரே' – திங்களிதழ்
ஆனந்தன் தெரு, திருவள்ளுவர் நகர்,
பம்மல், சென்னை – 75.

அன்புடன்
நா. வை. சொக்கலிங்கம்.

❂ ❂ ❂

மதிப்பிற்கினிய 'பழங்காசு' இதழாசிரியர்க்கு

வணக்கம். மறைந்திருக்கும் தொல்லியல் செய்திகளைத் தமிழுக்கும் தமிழனுக்கும் அடையாளப்படுத்தி இன மேம்பாட்டுக்காக வெளிவருகிற பழங்காசு இதழ் தமிழ் மண்ணில் வேரூன்றி, பரவி, புதிய வரலாறு படைத்து, சிறந்தோங்கிட 'ஏர்' இதழ் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

'ஏர்' (மாணவர் இதழ்)
105, பாரதி விடுதி,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 21.

தோழமையுடன்
நா. மகாராசன்

# மனம் திறந்து...

பழ. நெடுமாறன்
தலைவர், தமிழர் தேசிய இயக்கம்

33, நரசிம்மபுரம், மயிலை,
சென்னை–600 004.

அன்புடையீர், வணக்கம்.

தங்களின் "பழங்காசு" இதழ் கிடைக்கப் பெற்றேன். மிக்க நன்றி.

"பழங்காசு" இதழை முழுமையாகப் படித்துப் பார்த்தேன். சிறப்பான ஆய்வுக் கட்டுரைகள் பல அதில் இடம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டில் வரலாற்றியல் பற்றிய ஆய்வுரைகளைத் தாங்கி வரும் பத்திரிகைகள் மிகவும் குறைவு. எனவே முழுமையாக இத்துறைக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டு இதழ் வெளிவருவது சிறப்பானதாகும். இந்தச் சீரிய முயற்சியில் ஈடுபட்டுள்ள தங்களையும் மற்றுமுள்ள அறிஞர் பெருமக்களையும் மனமாரப் பாராட்டுகிறேன்.

அன்புடன்

பழ. நெடுமாறன்

அன்புடையீர், வணக்கம்.

பழங்காசு இதழ் கிடைத்தது. கடும் உழைப்பில் படித்துப் பாதுகாக்க வேண்டிய நூல்வடிவில் இதழ் வெளியாகி இருப்பது மகிழ்ச்சி தருகிறது. மானுடவியலையும், முன்னோர்களின் வாழ்வியலையும் அறியும் ஆர்வம் இன்றைய அவசரமான உலகில் அபூர்வமாகத்தான் காணப்படுகிறது.

இந்தியாவில் நாணயவியலும், வரலாற்றியலும் கலந்து பழைய வரலாற்றை மீள்பார்வைக்கு உட்படுத்தும் பழங்காசு இதழ் இவ்வகையில் தனிச்சிறப்பு.

பழைய வரலாறு எனும்போது சமய வரலாறு தவிர்க்க முடியாததுதான். கோயில்களும் கல்வெட்டுகளும் பிரிக்க முடியாதவை. சமயப் பாடல்களில் வரலாற்றுச் சான்றுகள் ஏராளம்.

"தமிழகத்தில் விநாயகர் வழிபாடு" என்னும் கட்டுரையின் இறுதிப்பகுதி போன்றவை இதழை வரலாற்றாய்வு இதழ் நிலையிலிருந்து பக்தி இதழாக மாற்றிவிடக்கூடிய அபாயமுண்டு. இதுபோன்றவற்றைக் கட்டுரையாளர்களின் அனுமதியோடு தணிக்கை செய்து வெளியிடுதல் நன்று. அது ஆசிரியரின் கடமையும் கூட. இதழின் குறிக்கோளுக்கு மாற்றான கருத்துகள் இதழில் வெளிப்படுவது இதழ் வளர்ச்சிக்கு ஊறாகும்).

நாணயவியல் தொடர்பான தகவல்கள் ஆய்வு நோக்கில் சிறப்பாக வெளிப்பட்டுள்ளன.

அன்புடன்

சதீஷ் சிஸரோ

உதயதாரகை கலைக்கழகம்
அனுக்கிரகம்
12/110, ஆர்.சி. தெரு, படந்தாலுமூடு – 629 194.

பெருந்தகையீர்! வணக்கம். நலமா?

அரிய வடிவமைப்போடும், கனமான உள்ளடக்கத்தோடும் பழங்காசு முதல் இதழ் வெளிவந்திருப்பது மிகவும் மகிழ்ச்சி தருகிறது. இன்றைய சூழலில் காலத் தேவையை பூர்த்தி செய்ய 'பழங்காசு' போன்ற இதழ்கள் நிச்சயம் தேவை.

அன்புடன்

ஆராய்ச்சியாளர், ஆங்கிலத் துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி–24.
கவிஞர் அதங்கோடு அனிஷ்குமார்

அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம். 'பழங்காசு' வெளியீட்டு விழாவன்றே (28.1.2001) வாழ்நாள் நன்கொடையாளராக ஆகி, அன்றே அவ்விதழையும் படித்து முடித்தேன். முத்து என்ற இரவலர், இல்லை மாமன்னர் திருவளர்ச்சோலையில் க(வெ)ட்டிய மூன்று கிணறுகள் பற்றிய கல்வெட்டு படத்தை அட்டையிலேயே வெளியிட்டு அசத்திவிட்டீர்கள்.

பேரா.க.ஆ. திருஞானசம்பந்தம் அவர்களின் 'இஸ்லாமிய மன்னர்களின் காசுகளை அலங்கரித்த இந்து கடவுள்கள்' காலத்தின் தேவை. மத நல்லிணக்கத்துக்கோர் முத்திரை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பரமு. புஷ்பரட்ணம் அவர்களின் 'சங்ககால நாணயங்களும், இலங்கைத் தமிழ் மன்னர்களும், ஸ்தபதி வே. இராமன் அவர்களின், 'தமிழகத்தில் விநாயகர் வழிபாடு' ஆகிய படைப்புகளும் நனி சிறந்தவையே! முனைவர். பே.க. வேலாயுதனாரின் 'திருமுருகாற்றுப் படையின் ஆசிரியர் பற்றிக் கூற வேண்டுமாயின், ஒன்று நானும் அவரைப் போல் ஒரு அறிவு ஜீவியாக இருக்க வேண்டும் அல்லது அவரின் அடியொட்டிச் செல்லும் ஞானமாணவனாகவாவது இருக்க வேண்டும். ஆகவேதான் அவருடைய படைப்பு பற்றி கருத்து கூறுவது எனது சக்திக்கு அப்பாற்பட்டதாகக் கருதுகிறேன்.

இறுதியாக ஒரு செய்தி. சென்ற 23.3.2001 நாளிதழான 'தி இந்து' *(THE HINDU)* வில் பக்கம் 3–ல் பழங்காசு (இதழ்–1) அட்டை (முத்துவின் ஈகை கல்வெட்டு)ப் படத்தை எடுத்துப் போட்டு செய்தி வெளிட்டு உள்ளனர். ஓர் இதழில் வெளியிடப்பட்ட புகைப்படத்தையோ, செய்தியையோ, மற்றோரிதழில் எடுத்தாளப்படும்பொழுது நன்றி/ ஆதாரம், *Coutesy* போன்ற சொல்லோடு முன் இதழின் பெயரையும் வெளியிடுவது மரபாகும். ஆனால் பாரம்பரியமிக்க 'இந்து' இதழானது இம்மரபைப் புறக்கணித்து 'பழங்காசு' பெயரை வெளியிடாது மறைத்துவிட்டது இதழியல் மரபுகளை மீறிய செயலாகும்.

'தி இந்து' மற்றும் 'பழங்காசு' ஆகிய இரண்டு இதழ்களையும் வாங்கும் சாமானியன் என்ற முறையில் இந்தச் செய்தியை தங்களது இதழில் வெளியிட்டு, அனைவரும் அறியச் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். 'பழங்காசு' தன்னுடைய நீண்ட பயணத்தில் சீராக செம்மாந்து செல்ல இந்த எளியவனின் வாழ்த்துக்கள்.

அன்புடன்

No. 23E/2, டாக்கர் பங்களா,
உறையூர், திருச்சி–3.
கா.ஹ. தாஸரதி

('தி இந்து' நாளிதழைப் பற்றிய இதே கருத்தை பழங்காசின் ஆர்வலர்கள் பலரும் கடிதங்கள் மூலமும் தொலைபேசி மூலமும் நமக்குத் தெரிவித்தனர். பழங்காசின் முதல் இதழே இந்துவின் செய்தியானதில் நமக்கு மகிழ்ச்சியே. பாரம்பரியம் மிக்க இந்து இதழின் இச்செயல் பாடு பழங்காசுக்கு அது அளித்த அங்கீகாரமாகவே நாம் கருதுகிறோம். எதிர்காலத்தில், இதழியல்நெறியை மீறாது இந்து இதழ் பழங்கசின் பெயரைச் சுட்டியே செய்திகளை வெளியிடும் என நம்புவோம் – ஆசிரியர்)

நமது பரிணாமப் பாதையின் சுவடுகள் தான் இந்தக் காசுகள். எப்படி இருந்தோம் என்று தெரிந்து வைத்திருந்தால், எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான உத்வேகம் பிறக்கும்.

நமது தொன்மைச் சிறப்புக்கள் எந்த நாட்டினருக்கும் இரண்டாம் தரமானதல்ல. காசு பணம் பற்றிய கணக்கு பார்க்காமல் துணிச்சலுடன் மேற்கொண்டுள்ள இந்த முயற்சி பாராட்டுதலுக்குரியது. கட்டுரைகள் சுவையாகவும், மாறுபட்டுமுள்ளன. வெற்றி சிறக்க பாராட்டுக்கள்.

அன்பன்

C-34, ஜெய்நகர், திருச்சி–13.

பி.ஆல்பர்ட் ராஸ்

❂ ❂ ❂

நண்பர் அரசெழிலனின் 'நாளை விடியும்' இதழில் 'பழங்காசு' இதழ் வெளியீட்டு விழா பற்றி பார்த்தேன் ஏறத்தாழ அனைத்தும் வணிகமயமாகிப் போன இன்றை உலகில் இப்படி ஒரு முயற்சி பெரிதும் பாராட்டுக்குரியது. முதல் இதழிலிருந்தே எனக்கு வேண்டும். அனுப்பி வைப்பீர்களா?

'எழுச்சியம்'
96, சீனிவாச நகர் 3–ஆம் வீதி, புதுக்கோட்டை–4.

தங்கள் அன்புள்ள

நா. முத்து நிலவன்

❂ ❂ ❂

S. ARUNASALAM
36, JALAN BATU ARANG
42000 PANDAMARAN, KLANG,
SELANGOR,MALAYSIA.

அன்பிற்கினிய 'பழங்காசு' ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

பழங்காசு இதழ் வெளியீட்டு விழாச் செய்தியை நாளை விடியும் இதழில் கண்டேன். வியப்பாக உள்ளது. இதுபோன்ற முயற்சிகள் தமிழ் நாட்டிலும் நடக்கிறதே! அரசியல் சண்டைக்கே நேரம் போதாத அரசாட்சியில் ஒரு சில நல்லுள்ளங்களால் இவ்வகை நற்பேறு நடக்கின்றது. மகிழ்ச்சி. வாழ்த்துக்கள்.

அன்புடன்

அருணாச்சலம்

# நேற்று - நாளை

(நாணயவியல் வரலாற்றியல் தொடர்பான கருத்தரங்கு, பயிலரங்கு, கண்காட்சி போன்ற பல நிகழ்ச்சிகள் பல நிறுவனங்களாலும், ஆர்வலர்களாலும் ஆங்காங்கே நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறு நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளும், நடைபெறப்போகும் நிகழ்ச்சிகளைப் பற்றிய அறிவிப்புகளும் இத்தலைப்பில் தொடர்ந்து வெளியிடப்படும். இது பற்றிய செய்திகளை அனுப்புபவர்கள் வெள்ளைத் தாளில் ஒரு பக்கத்திற்கு மிகாமல் எழுதி அனுப்பும்படி கோரப்படுகிறார்கள் – ஆசிரியர், பழங்காசு)

## நாணயவியல் — வரலாற்றியல் துறையில் முதல் காலாண்டிதழ் 'பழங்காசு' வெளியீட்டு விழா

திருவள்ளுவராண்டு 2032 சுறவம் (தை) திங்கள் 15–ம் நாள் (25.1.2001) திருச்சிராப்பள்ளி அரசு அருங்காட்சியகத்தில் நாணயவியல் வரலாற்றியல் துறையில் முதல் காலாண்டு இதழான 'பழங்காசு' வெளியீட்டு விழா நடைபெற்றது.

விழாவிற்கு பாரத மிகுமின் தொழிலகத்தின் (BHELன்) ஊழியர் மற்றும் நிர்வாகத் துறை முதுநிலை துணைப் பொது மேலாளர் மரியாதைக்குரிய திரு. **A. விக்டர்** அவர்கள் தலைமை வகித்தார். முதுபெரும் நாணயவியலர் வணக்கத்திற்குரிய, உறையூர் **கே. துளசிராமன்** அவர்கள் முன்னிலை வகித்தார். பழங்காசின் துணையாசிரியர் **குழந்தை ஈகவரசன்** அவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட விழா துவங்கியது.

அன்று மதியத்திலேயே குஜராத்திலிருந்து பேரிடியான பூகம்பச் செய்தி கிடைத்திருந்த காரணத்தால் வரலாறாகிப்போனதை குஜராத் மக்களுக்கு அஞ்சலி தீர்மானத்தை திரு. ப. சீனிவாசன் முன்மொழிய அவையினர் அனைவரும் சோகச் சுமையுடன் மௌன அஞ்சலி செலுத்தினர்.

விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரலாற்று வித்தகர் கருவூர் **ம. இராசசேகர தங்கமணி** அவர்கள் வரவேற்றார். காப்பாட்சியர் **ப. இராசமோகன்** அவர்கள், அரசு அருங்காட்சியகத்தின் வளர்ச்சி மற்றும் கல்விப் பணிகள் குறித்தும் திரு. ப. **சீனிவாசன்** போன்றோர்கள், இப்பணிகளுக்கு எவ்வாறெல்லாம் துணை நிற்கிறார்கள் என்றும் விவரித்தார். நாணயவியல் வரலாற்றியல் முதல் காலாண்டு இதழான பழங்காசு, வரலாற்று சிறப்பு மிக்க நாயக்க அரசி – ராணி மங்கம்மாள் கொலு மண்டபத்தில் வெளியிடப்படுவது பெருமையிலும் பெருமையாகும் என்றார்.

பழங்காசின் அறிவுரைஞர்கள் **ப. சீனிவாசன்** மற்றும் ஸ்தபதி **வே. இராமன்** ஆகியோர் விழாவிற்கு வந்திருந்த அனைத்து அறிஞர் பெருமக்களுக்கும் பொன்னாடை அணிவித்து சிறப்பித்தார்கள்.

விழாத் தலைவர் திரு. **A. விக்டர்** அவர்கள், 'பழங்காசின் ஆசிரியர் திருமதி **சுசீலா தேவி** சித்த மருத்துவரானாலும், வரலாற்றுத் துறையில் அன்னாரின் ஆர்வம் போற்றத் தக்கதாகும். அவரின் துணைவர் திரு. **ப. சீனிவாசன்** ஒரு சிறந்த தொழிற்சங்கவாதியாகத்தான் எனக்கு அறிமுகம். ஆயினும் பிற துறைகளில் அவரின் பங்களிப்புக்களையும், அவற்றிற்கு துணைபுரிந்து வரும் இவ்வறிஞர் குழாமையும் காணும்போது, எங்களின் *BHEL* நிறுவனத்தில்தான் அவர் பணியாற்றுகிறார் எனக் கூறும்போது நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்" என்றார்.

ஈரோடு கொங்கு நாணயவியல் ஆய்வு மைய இயக்குனர் பேராசிரியர் **க.ஆ. திருஞானசம்பந்தம்** அவர்களின் தொகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட, சங்ககாலத் தமிழக, கிரேக்க, உரோமானிய காசுகளின் சிறப்புக் கண்காட்சியினை, வரலாற்றாய்வாளரும், புதுகை அரசு அருங்காட்சியகக் காப்பாட்சியருமான முனைவர் **ஜெ. இராஜா முகமது** அவர்கள் திறந்து வைத்து உரையாற்றினார். காட்சிக்கு வைக்கப்–பட்டிருந்த காசுகளின் சிறப்புக்களை, பேரா. **திருஞானசம்பந்தம்** அவர்கள் விளக்கினார்.

பழங்காசின் முதல் இதழை திரு. **A. விக்டர்** அவர்கள் வெளியிட யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் கலாநிதி. **பரமு. புஷ்பரட்ணம்** அவர்கள் பெற்றுக் கொண்டு நிகழ்த்திய ஏற்புரையில், *'தமிழகத்தில் கல்வித்துறை தொல்லியல் துறை மட்டுமல்லாது, மருத்துவம், பொறியியல் போன்ற பிறதுறைகளில் பணியாற்றுபவர்களும் ஆர்வத்துடன் வரலாற்றாய்வுகளை மேற்கொண்டு, புதிய பல செய்திகளை வெளியுலகுக்கு அறிவிக்கிறார்கள். இதுகண்டு நான் வியப்பும் மகிழ்ச்சியும் அடைகிறேன். கண் மருத்துவரான முனைவர். இரா. கலைக்கோவன் அவர்களின் வரலாற்றாய்வுப் பணிகளை இங்கு பெருமை படக் கூறலாம். சித்த மருத்துவரான திருமதி சுசிலாதேவி சீனிவாசன் அவர்கள் தொடங்கிய இப் 'பழங்காசைப்' போல இலங்கையில் யாரும் வரலாற்றாய்வு இதழைத் தொடங்க முயற்சிக்கவில்லை என்பதை சிறிது வருத்தத்துடனே கூறிக் கொள்கிறேன். நான் பழங்காசு இதழுக்கு என்னாலான அனைத்து ஒத்துழைப்பையும் நல்க உறுதி பூண்டுள்ளேன். பொறியியல் துறையில் பணி புரிந்தாலும் வரலாற்றுத் துறையில் ஆர்வமுடன் உழைத்து வரும், பழங்காசின் அறிவுரைஞர் திரு. சீனிவாசன் அவர்களையும், பிற அறிவுரைஞர்கள் அனைவரையும் மற்றும் ஆர்வலர்களையும் மனதாரப் பாராட்டுகிறேன்"* என்று குறிப்பிட்டார். மற்ற அறிஞர்கள் வழங்கிய வாழ்த்துரைகள் வருமாறு.

## அறிஞர்கள் வழங்கிய வாழ்த்துரைகள்:

முனைவர் **சே. இராமலிங்கம்,** முதல்வர், நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி : தமிழகத்தின் வரலாற்றை செம்மை செய்ய பழங்காசு தனது பங்களிப்பினை மிகச் சிறந்த முறையில் நிறைவு செய்யும் என நம்புகிறேன்.

ஆய்வறிஞர் **கி. ஸ்ரீதரன்,** பதிவு அலுவலர், அரசு தொல்லியல்துறை : நாணயவியல் துறையில் ஒரு புதிய வரவு பழங்காசு. தமிழகம் இதற்குப் பெரிய ஆதரவினை நல்க வேண்டும்.

முனைவர் **பே.க. வேலாயுதனார்,** தலைவர், தமிழ்க்கோட்டம், புதுக்கோட்டை: மிகவும் பிடிவாதமுள்ளவராக மரு. சுசீலாதேவி சீனிவாசன் அவர்கள் தொடங்கியிருக்கும் இப் பழங்காசு பல்லாண்டுகள் தொடர்ந்து வெளிவர வாழ்த்துகிறேன்.

**குடவாயில் பாலசுப்ரமணியன்,** சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர் : வரலாற்றுச் சான்றுகளின் புதிய கண்டுபிடிப்புகளை வெறும் செய்தியாக்கிவிடாமல், வரலாற்று ஆவணமாக பழங்காசு பதிவு செய்துவிட வேண்டும்.

**V. பாரதமணி (BHEL)** தலைவர், திருச்சிராப்பள்ளி நாணயவியல் கழகம்: *ஆய்வு செய்வதில் பெருவிருப்பமும் அமைப்புகளை நிறுவுவதில் திறமையும் கொண்டவர் சீனிவாசன். **AITUC, AIPSO, ISCUS, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்** முதலிய அமைப்புகளில் கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக அவரோடு பணியாற்றியவன், அவரின் பன்முகத் திறமைகளை நேரில் கண்டு வியப்படைந்தவன் நான். அவரால் கண்டுபிடிக்கப்பட்ட 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பீரங்கி இந்தமங்கம்மாள் கொலு மண்டபத்தின் வாயிலை அலங்கரித்துக் கொண்டிருப்பதே அவரின் திறமைக்குச் சான்றாகும்.*

*திரு. சீனிவாசன் அவர்கள்தான் இம்மாவட்டத்தில் முதன் முதலாக நாணயவியல் கழகத்தை 1994ல் நிறுவினார் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். 1990லிருந்தே அவர் இவ்வமைப்பைத் தொடங்க முயற்சித்து வந்தபோது சிறு துரும்பைக் கூட அசைக்க ஆற்றலற்றவர்கள், இன்று அத்துவக்கத்திற்கு உரிமை கொண்டாடி பொய்யுரைக்குப் பூச்சூடி உலவவிடுகிறார்கள். இது வெட்டி வேலை என ஒதுக்கியவர்களும் எனக்கு அனுபவம் குறைவுதான் என்று கூறி ஒதுங்கியவர்களும் அவருக்கு முன்பே இவ்வமைப்பைத் தொடங்க நான் முயற்சி மேற்கொண்டு விட்டதாகவும், இவ்வமைப்பு தொடங்க நான்தான் சீனிவாசனுக்கு ஆலோசனை கூறியதாகவும், வெட்கமில்லாமல் பச்சைப் பொய்யைக் கூறி பசப்பிவருகிறார்கள். 'தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தருமம் மறுபடியும் வெல்லும்' என்ற பாரதியின் வாக்கு பொய்க்கப் போவதில்லை. அவரின் வழிகாட்டுதலோடு அவரின் துணைவியார் திருமதி சுசீலாதேவி அவர்களால் தொடங்கப்பட்டுள்ள இப் 'பழங்காசு' வரலாற்றாய்விற்கு தவிர்க்கவியலாததொரு துணையாக விளங்கும் என்பது திண்ணம்".*
(திருச்சிராப்பள்ளி நாணயவியல் கழகத்தின் சார்பில் திரு. சீனிவாசன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து பாராட்டினார்)

முதுபெரும் நாணயவியலர் உறையூர் **மு. துளசிராமன்** அவர்கள்: *"திருச்சிராப்பள்ளியில் முதன்முதலாக திவான் பகதூர் தேசிகாச்சாரி முதற்கொண்டு டாக்டர் N.R. சீனிவாசன், பீர்கன் ராவுத்தர் A. சுப்ரமணியப் பிள்ளை, S. சுப்ரமணியப் பிள்ளை, பர்மா. பார்த்தசாரதி நாயுடு, ஆறுமுகம்பிள்ளை ஆகியோரும் துளசிராமானாகிய நானும் இத்துறையில் ஆர்வத்துடன் ஈடுபட்டோம். ஆனால் நாங்கள் யாரும் திரு. சீனிவாசனைப் போல், நாணய சேகரிப்பாளர்களை அமைப்பு ரீதியாகத் திரட்டவில்லை. அப்பணியை சிறப்பாக அவர்தான் செய்து முடித்தார் என்பது கல்வெட்டு போன்ற உண்மையாகும். கல்வெட்டுக்களை படிக்க பயிற்சி, காசுகளை சுத்தம் செய்ய, பாதுகாக்க பயிற்சி, வரலாற்றிடங்களுக்கு சுற்றுலா ஆகியவற்றையும் திட்டமிட்டு சீரிய முறையில் செய்து தன்னைச் சார்ந்தவர்களையும் வளர்த்துவிட அவர் செய்து வரும் பணிகளை நான் மனதாரப் பாராட்டுகிறேன். எங்கள் காலத்தில் இப்படி பணிபுரியக் கூடியவர்கள் இல்லாமல் போய்விட்டதே என்ற வருத்தம் எனக்கு ஏற்படுகிறது. வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற இராஜராஜ சோழனைப் போல், திரு. சீனிவாசன் அவர்களும் புகழ் பெற வேண்டுமென்று பிரார்த்தித்து இந்த இராஜராஜன் சிலையை நினைவுப் பரிசாக அவருக்கு அளிக்கிறேன்".*

## அறிஞர்களுக்கு நினைவுப் பரிசுகள்

ஒரத்தநாடு மருதம் பதிப்பகத்தாரின் புதிய வெளியீடுகளான கடவுள்களின் அடிமைகள் (ஆங்கில மூலம் மிஸ் கேதரீன் மேயோ; தமிழில் ப. சீனிவாசன்) சச்சிதானந்த சிவம் (சுப்ரமணிய சிவா) ஆகிய இரண்டு நூல்களும் நிகழ்ச்சிக்கு வந்திருந்த அறிஞர் பெருமக்களுக்கு நினைவுப் பரிசாக, திரு. ப. சந்திரசேகர் (உரிமையாளர் – மருதம் பதிப்பகம்) அவர்களால் வழங்கப்பட்டது.

மற்றும் திரு. நாக கணேசன், காப்பாட்சியர், அரசு தொல்லியல் துறை, கருவூர்; மு. துரைராசு, நிறுவனர், சோழ மண்டல நாணயவியல் கழகம், தஞ்சாவூர்; பேராசிரியர் பவுன்துரை தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர், முனைவர் க. நெடுஞ்செழியன், திருச்சி, திரு. சந்திரசேகர், மருதம் பதிப்பகம், ஒரத்தநாடு ஆகியோர் 'பழங்காசின்' வருகையை வாழ்த்தியும் சுசீலாதேவி சீனிவாசன் தம்பதியரைப் பாராட்டியும் பேசினார்கள். 'பழங்காசு' இதழுக்கு புரவலர் நன்கொடை அளித்த திரு. சுபாஷ் சந்திரபோஸ், வாழ்நாள் நன்கொடை அளித்த திருச்சி BHEL ஊழியர்களான திரு. சிதம்பரராசன், திரு. தாசரதி, திரு. ரெங்கராசன்,

திரு. இராஜேந்திரத் தேவன், திரு. ஏ. பாரத் மணி ஆகியோருக்கு முதுபெரும் நாணயவியலர் திரு. துளசிராமன் அவர்கள் பழங்காசின் முதல் இதழை அளித்துச் சிறப்பித்தார்.

சிற்றிதழ் ஆய்வாளர் திரு. தி.மா. சரவணன் அவர்கள் 'நாணயவியல் துறையில் வெளியிடப்படும் முதல் தமிழ் இதழாக 'பழங்காசு' பதிவு செய்யப்படுகிறது என்று பாராட்டியதோடு நிகழ்ச்சிக்கு வந்து சிறப்பித்த அனைத்து அறிஞர்களுக்கும் நன்றி தெரிவித்தார். நாட்டுப் பண்பாட பழங்காசு வெளியீட்டு விழா நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.

## தொல்லியல் மேரு
## அமரர் கூ.ரா. சீனிவாசன் அறக்கட்டளைப் பொழிவு தொடக்கம்

திருச்சிராப்பள்ளி டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையமும், சீதாலெட்சுமி ராமசாமி கல்லூரி (தன்னாட்சி) வரலாற்றுத் துறையும் இணைந்து நடத்திய பத்மபூஷண் திரு. கூ.ரா. சீனிவாசன் நினைவு அறக்கட்டளைப் பொழிவு, கல்லூரி வளாகத்தில் 11.2.2001 ஞாயிறன்று காலை பத்து மணியளவில் தொடங்கியது. கல்லூரி முதல்வர் ஜானிபாய் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். கல்லூரியின் நிர்வாக அறங்காவலர் திரு. இரா. பஞ்சாபகேசன், திரு. கூ.ரா. சீனிவாசனின் அருமை மகள் சீ. வித்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர். வரலாற்றாய்வு மையத்தின் கல்வெட்டாய்வரும், செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவருமான முனைவர் அர. அகிலா அறக்கட்டளை நாயகரான திரு. கூ.ரா. சீனிவாசனை அவைக்கு அறிமுகப்படுத்த, மையத்தின் தலைமைக் கல்வெட்டாய்வரும் சீதாலெட்சுமி ராமசாமி கல்லூரி (தன்னாட்சி) வரலாற்றுத் துறைப் பேராசிரியருமான முனைவர் மு. நளினி அறக்கட்டளையை நிறுவிய நாடறிந்த கல்வெட்டறிஞரும், தமிழறிஞருமான திரு. ஐராவதம் மகாதேவனை மாணவியர்க்கு அறிமுகப்படுத்தி மகிழ்ந்தார்.

மையத்தின் இயக்குநர் முனைவர் மருத்துவர் இரா. கலைக்கோவன் முதல் அறக்கட்டளைப் பொழிவை நிகழ்த்த வருகை தந்திருந்த மகா ஸ்தபதி திரு. வை. கணபதியின் சிறப்புக்களை அவைக்கு எடுத்துரைத்தார். திரு. ஐராவதம் மகாதேவன் தலைமையுரை நிகழ்த்தும்போது இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தின் உழைப்பைக் குறித்துப் பெருமைப்பட்டதுடன், அதன் இயக்குநர் இரா. கலைக்கோவனை, 'குருவை மிஞ்சிய சிஷ்யன்' என்று மனமாரப் பாராட்டி, இம்மையத்தின் செய்யற்பாடுகளைத் தாம் கூர்ந்து நோக்கி வந்ததன் பயனே இங்கு இவ்வறக் கட்டளையை நிறுவியது என்றும் கூறி மகிழ்ந்தார்.

விமானத்தின் தோற்றம், வளர்ச்சி குறித்து அறக்கட்டளைப் மொழிவாற்றிய திரு. வை. கணபதி ஸ்தபதி, தமிழ்நாட்டுச் சிற்ப மரபு பற்றி விரிவாக எடுத்துரைத்தார். தமிழக மயனுக்கும், மெக்சிகோ மாயன் நாகரிகத்திற்குமுள்ள ஒற்றுமைகளைத் தம் ஆய்வின் மூலம் கண்டறிந்ததைக் குறிப்பிட்டு மயமதத்தின் தோற்றம் குமரிக் கண்டத்தில் என்று சான்றுகளுடன் விவாதித்தார். சிற்பி இறைவனுடன் ஒப்பிடத்தக்கவன் என்பதைக் காரண, காரியங்களுடன் விளக்கிய ஸ்தபதி, விமானம் என்பதன் உட்பொருளைத் தத்துவார்த்தமாக விளக்கினார். அனைவருக்கும் புரியுமாறு ஆய்வு நுட்பங்களை எளிய தமிழில் எடுத்துரைத்த ஸ்தபதியின் பொழிவை மாணவர்கள் விரும்பிக் கேட்டனர்.

ஏறத்தாழ இரண்டு மணி நேரம் நிகழ்ந்த பொழிவிற்கு பழங்காசின் அறிவுரைஞர் திரு. ப. சீனிவாசன் அவர்களும், கல்லூரி மாணவியரும், பிற கல்லூரிப் பேராசிரியர்களும், வரலாற்றறிஞர்களும், ஆய்வாளர்களும் சுவைஞர்களாய்த் திரண்டிருந்தனர். சீதாலெட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத் துறையின் சார்பில் திரு. ஐராவதம் மகாதேவன், திரு. கணபதி ஸ்தபதி ஆகியோருக்குத் திரு. பஞ்சாபகேசன் பொன்னாடை அணிவித்து, நினைவுப்

பரிசுகள் வழங்கினார். பொன்னாடைகளைத் துறைப் பேராசிரியர் சீ. கீதா முனமுவந்து வழங்கியிருந்தார். துறைத் தலைவர் பேராசிரியர் கோ. வேணி தேவி நன்றியுரைத்தார். நாட்டுப்பண்ணுடன் நிறைவடைந்த அறக்கட்டளைப் பொழிவிற்குப் பிறகு அனைவர்க்கும் மதிய விருந்து அளிக்கப்பட்டது.

## புதுக்கோட்டை வரலாறு—கருத்தரங்கம்

24.3.2001 அன்று புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் "புதுக்கோட்டை வரலாறு" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கிற்கு வருகை தந்தவர்களை அருங்காட்சியகக் காப்பாட்சியர் டாக்டர் ஜெ. ராஜாமுகமது வரவேற்றார். மன்னர் கல்லூரி வரலாற்றுப் பேராசிரியர் திரு. எஸ். பிச்சை முகமது தலைமை உரையாற்ற முனைவர் செ. இராசு கருத்தரங்கத் தொடக்க உரையாற்றினார். கருத்தரங்கச் சிறப்பு விருந்தினரான புதுக்கோட்டை ராணியார் சாருபாலா தொண்டைமான் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். ராமநாதபுரம் சேதுபதி மன்னர் குடும்பத்தைச் சேர்ந்த திரு. தினகர் சேதுபதியும் விழாவிற்கு வருகை தந்தார்.

கருத்தரங்கில் 12 ஆய்வுக் கட்டுரைகள் வாசித்தளிக்கப்பட்டன. கரு. இராசேந்திரன் – கல்வெட்டுக்களில் தொண்டைமான் மன்னர்கள், டாக்டர் ஏ.வி. பெருமாள் – புதுக்கோட்டை சமஸ்தானத்தில் வாரிசுரிமை நிர்ணயம், டாக்டர் இரா. கருப்பையா – புதுக்கோட்டை கோயில்களில் வைரவனும் வழிபாடும், டாக்டர் வள்ளி – நகரத்தார்களும் தொண்டைமான் மன்னர்களும், முனைவர் செ. இராசு – தொண்டைமான் செப்பேடுகள், பேராசிரியர் பிச்சைமுகமது – தொண்டைமான் மன்னர்கள் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு, டாக்டர் பா. ஜம்புலிங்கம் – தஞ்சைமாவட்ட கற்றளிகளுக்கு புதுக்கோட்டை மாவட்டத்தின் பங்களிப்பு – டாக்டர் ஜெ. ராஜாமுகமது – புதுக்கோட்டை சமஸ்தானத்திலிருந்து இங்கிலாந்துக்கு நீலச்சாய ஏற்றுமதி, புதுக்கோட்டை சமஸ்தான நிர்வகிகள், முனைவர் ஆர். சந்திரபோஸ் – தொண்டைமான் ஆட்சிக்காலத்தில் கோயில் கலை வளர்ச்சி, ஐ. உதயசங்கர் – சேஷைய்யா சாஸ்திரி, பி. வேலாயுதராஜா – புதுக்கோட்டை சமஸ்தானத்தின் தோற்றம், வி. சாமிநாதன் – புதுக்கோட்டை தொண்டைமான் காலத்தில் முந்திரி சாகுபடி ஆகிய ஆய்வுக் கட்டுரைகள் வாசித்தளிக்கப்பட்டன. ஆய்வுரைகள் குறித்து கூடியிருந்த ஆய்வாளர்கள் கலந்துரையாடினர். இந்தக் கட்டுரைகளின் மூலம் பல புதிய வரலாற்றுச் செய்திகள் வெளிப்பட்டன.

புதுக்கோட்டை வரலாறு குறித்து ஆய்வு செய்து வெளியிடப்பட வேண்டிய செய்திகள் நிறைய இருப்பதாகவும் அவற்றை வெளிக்கொணரவே இதுபோன்ற கருத்தரங்கம் தேவை என அருங்காட்சியகக் காப்பாட்சியர் டாக்டர். ஜெ. ராஜாமுகமது கூறினார். மேலும் தொண்டைமான் – கட்டபொம்மன் வரலாற்று தொடர்பு குறித்து இதுவரை செய்யப்பட்டுள்ள ஆய்வுகளை தொகுத்து நூலாக வெளியிடவிருப்பதாகவும், இருபதாம் நூற்றாண்டில் புதுக்கோட்டை' என்று வரலாற்றுக் குறிப்பு புத்தகமும் விரைவில் வெளியிடவிருப்பதாகவும் அவர் கூறினார்.

வாழ்ததிப் பேசிய புதுக்கோட்டை ராணியார் சாருபாலா தொண்டைமான் புதுக்கோட்டையின் வரலாறு தொன்மையானது எனவும், தொண்டைமான் மன்னர்கள் சுமார் 300 ஆண்டு காலம் தொடர்ந்து நல்லாட்சி நடத்தி, நவீன புதுக்கோட்டையில் சிற்பிகளாகத் திகழ்கிறார்கள் என்றும் கூறினார். புதுக்கோட்டை அலுவலகங்களில் உள்ள ஆவணங்கள் சென்னை ஆணைக்காப்பகம், லண்டனிலுள்ள இந்திய ஆவணக்காப்பகம் ஆகியவற்றிலுள்ள குறிப்புகளின்படி தொண்டைமான் வரலாறு குறித்த அசல் பதிவேடுகளை மேலும் ஆய்வு செய்து புத்தகமாக வெளியிடவேண்டுமென கேட்டுக்கொண்டார். புதுக்கோட்டை மாவட்ட கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் புதுக்கோட்டையில் சரியான வரலாறு சொல்லித்தர ஆவன செய்ய வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

புதுக்கோட்டையில் வரலாற்றுச் செய்திகளை வெளிக்கொணருவதில் புதுக்கோட்டை அருங்காட்சியகக் காப்பாட்சியர் டாக்டர் ராஜாமுகமதுவின் பணியினை ராணியார் பாராட்டினார். இக்கருத்தரங்கத்தில் பழங்காசின் அறிவுரைஞர் திரு. ப. சீனிவாசன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு பாராட்டிப் பேசினார். இதுபோன்ற வரலாற்றுக் கருத்தரங்கங்கள் தமிழக வரலாற்றுக்கு பல புதிய செய்திகளை கொண்டுவர ஏதுவாக அமையும் என திரு. தினகர் சேதுபதி கூறினார். அருங்காட்சியக உதவியாளர் திரு. மு. முத்து சீனிவாசன் நன்றி கூறினார்.

❂ ❂ ❂

## தமிழகத் தொல்லியல் கழகத்தின் பதினோன்றாம் ஆண்டு கருத்தரங்கம் மற்றும் ஆவண இதழ் வெளியீட்டு விழா

2001 ஜூலை மாதத்தில் மதுரையில் தமிழகத் தொல்லியல் கழகத்தின் பதினொன்றாம் ஆண்டு கருத்தரங்கம் மற்றும் ஆவண இதழ் வெளியீட்டு விழா நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கருத்தரங்க நாள், இடம், தங்கும் வசதி தொடர்பாக அடுத்த சுற்றறிக்கையில் உள்ளூர் செயலர் முனைவர் வெ. வேதாசலம் அவர்கள் தெரிவிப்பார். மேலும், உறுப்பினர்கள் தங்கள் முகவரிகளில் மாற்றம் இருப்பின் உடன் தொல்லியல் கழகம், தஞ்சைக்கு தெரிவியுங்கள்.

இக்கருத்தரங்கில் திரு. ஐராவதம் மகாதேவன் அவர்களால் நிறுவப்பட்ட தி.ந. சுப்பிரமணியன் அறக்கட்டளைச் சொற்பொழிவு வரிசையில் மூன்றாம் சொற்பொழிவினை முனைவர் கே.வி. இரமேஷ் (முன்னாள் கூடுதல் தலைமை இயக்குநர் இந்தியத் தொல்லியல் அளவீட்டுத துறை) அவர்கள் நிகழ்த்த உள்ளார்கள்.

*தொடர்பு முகவரி:*

தமிழகத்தொல்லியல் கழகம் (பதிவு எண் 52/1993)

மே/பா கல்வெட்டியல் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் – 613 005.

---

பழங்காசு வெளியீட்டு விழாவில் முதல் இதழ் பெற்ற வாழ்நாள் நன்கொடையாளர்கள்


புரவலர். லெ. சுபாஷ் சந்திரபோஸ்


ஏ. ரெங்கராஜன்


கா.ஹ. தாஸரதி


வி. பாரதமணி


டி. சிதம்பரராஜன்


இராஜேந்திரத்தேவன்

# “பழங்காசு” வெளியீட்டு விழா — சில காட்சிகள்


அறிஞர் குழாம்


ஆர்வலர் குழாம்


வரவேற்புரை: ம.இரா.தங்கமணி


துளசிராமனுக்கு பாராட்டு


தலைமையுரை–A. விக்டர்


சே. இராமலிங்கம்


கி. ஸ்ரீதரன்


ஏற்புரை: பரமு. புஷ்பரட்ணம்


பே.க. வேலாயுதம்


க.ஆ. திருஞானசம்பந்தம்


குடவாயில் பாலசுப்ரமணியம்


ஜெ. ராஜா முகமது


பவுன்துரை


க. நெடுஞ்செழியன்


மு. துரைராசு


நாக. கணேசன்


வி. பாரதமணி


ம.தி. சோழருக்கு பாராட்டு


ப. சந்திரசேகருக்கு பாராட்டு


துளசிராமன் வாழ்த்துரை


பரமு. புஷ்பரட்ணத்திற்கு பாராட்டு


நன்றியுரை: தி.மா. சரவணன்

## கட்டுரையாளர்கள்

1. க.ஆ. திருஞானசம்பந்தம், M.A., M.Phil.,
இயக்குனர்
கொங்கு நாணயவியல் ஆய்வு மையம்
87, சின்ன மாரியம்மன் கோவில் தெரு
ஈரோடு – 638 003.

2. மு. துரைராசு
நிறுவனர், சோழமண்டல நாணயவியல் கழகம்
தமிழ்க்குடில், 4, ஜமால் ஹுசைன் நகர்,
நாஞ்சிக்கோட்டை சாலை, தஞ்சாவூர்–6.

3. கலாநிதி பரமு. புஷ்பரட்ணம்
முதுநிலை விரிவுரையாளர்
வரலாற்றுத் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

4. கி. ஸ்ரீதரன்
பதிவு அலுவலர்,
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை,
14-D, அனீபா காலனி, திருச்சிராப்பள்ளி–20.

5. ஆர். பூங்குன்றன்
காப்பாட்சியர், அருங்காட்சியகம், அரசு
தொல்லியல் துறை, கோயமுத்தூர்.

6. Er. லெ. சந்திரபோஸ்
நிறுவனர், பழந்தமிழர் வரலாற்றுப் பேரவை
43-B, புதுரெட்டித் தெரு, பீமநகர்,
திருச்சிராப்பள்ளி – 620 001.

7. முனைவர் செ. இராசு
கொங்கு ஆய்வு மையம்
3-B, வெங்கடேசா நிவாஸ்,
130/2, வள்ளியம்மை வீதி,
நாராயண வலசு, நசியனூர் ரோடு,
ஈரோடு–11.

8. ஸ்தபதி வே. இராமன், D.S.A.,
38/5, புதிய சுற்றுலா மாளிகைக் குடியிருப்பு
திருச்சிராப்பள்ளி – 620 020.

9. முனைவர் பே.க. வேலாயுதம்
தலைவர், தமிழ்க்கோட்டம்
38–1, ஆசிரியர் குடியிருப்பு
மணிப்பள்ளம் சாலை
புதுக்கோட்டை – 622 001.

10. பேரா. ம. இராசசேகர தங்கமணி
பாண்டியன் நகர்,
சின்னான்டார் கோயில், கரூர்–1.

11. முனைவர் டாக்டர் இரா. கலைக்கோவன்
M.B.B.S., D.O., M.A., M.A., Ph.D.,
48, புத்தூர் நெடுஞ்சாலை
திருச்சிராப்பள்ளி – 620 017.



# கவிஞர் நா. முத்துநிலவன் எழுதும் கவிதையின் கதை

**தமிழ்க்கவிதை வரலாறு மற்றும்**
**நல்ல தமிழ்க்கவிதைகள் பற்றிய அரிய களஞ்சியம்**

## 40சதவிகித சலுகையில் முன்வெளியீட்டுத் திட்டம்

- ஆதிச்சங்ககாலம் முதல், இன்றைய சாதிச்சங்ககாலம் வரையிலான தமிழ்க்கவிதையின் பரிணாம வரலாறு
- இருபது நூற்றாண்டுகளின் மரபுக்கவிதைகள்
  இருபதாம் நூற்றாண்டின் புதுக்கவிதைகள் மற்றும்
  ஹைகூ கவிதைகள் எனும் முப்பெரும் பிரிவுகளில்
- உள்ளடக்க உருவ மாற்றங்கள் சமூகக்காரணி, சான்றுகள்
- அந்தந்த வடிவ சிறந்த கவிதைகள், தொகுப்புகள், பகுப்புகள்
- நூல் அளவு சுமார் 480 பக்கம் தாள் அளவு டெம்மி 1/8
- வெளிவரும் நாள் அளவு – வரும் 15.08.2001
- நூல் பதிப்பு – காலம் வெளியீடு, மதுரை 625 002,
- நூல் மதிப்பு ரூ.165/– (வரும் 16.5.2001 க்குள் முன்பதிவு செய்வோர்க்கு முன் வெளியீட்டு விலை ரூ.100/– மட்டும். அஞ்சல் செலவுக்கு ரூ.20/– சேர்த்தே அனுப்பிவிடலாம்.)

**கவிதையின் கதை –**

**கவிதை வரலாறு மட்டுமல்ல, நல்ல கவிதைகளுக்கான அடையாள அணிவகுப்பும் கூட. வெறும் பட்டியல் அல்ல, விமர்சனம்**

பணவிடை (M.O), வரைவோலை (D.D), காசோலை (CHEQUE)
அனுப்ப மற்றும் தொடர்பிற்கு

**நா.முத்துநிலவன்**, 'எழுச்சியகம்' 96, சீனிவாச நகர் 3ஆம் வீதி,
புதுக்கோட்டை–622 004. தமிழ்நாடு
தொலைபேசி: 04322-23423, 23523. தொலைநகல் (Fax) 04322-22434
மின் அஞ்சல்: (e-mail): muthunilavan@yahoo.com


த.சி.ச. உறுப்பிதழ் : 264/2001 TASNA Regd. No. 264/2001

கட்டுரைகள் அனைத்தும் அவற்றின் படைப்பாளர்களுக்கே உரிமையுடையவை.

பழங்காசு மின்னஞ்சல் (E-mail) : pazhangasu@usa.net
pazhangasu@yahoo.com

ஓரிதழ் நன்கொடை : உரூ. 15/– (தனிச்சுற்றுக்கு மட்டும்)

# வாழ்க மணமக்கள்!



வரலாற்று ஆர்வலரும்
பழங்காசின் ஆதரவாளருமான
மணமகன்
**மு. இராசா**வுக்கும்
(பி. முத்துசாமி – நல்லம்மாள்
தம்பதியரின் செல்வ மகன்)



மணமகள்
**பா. மாலதி**க்கும்
(கே. பாலன் – பாப்பு
தம்பதியரின் செல்வ மகள்)

9.3.2001ல் நாமக்கல்லில் நடைபெற்ற திருமணத்திற்கு பழங்காசின் சிறப்பாசிரியர் வரலாற்று வித்தகர் பேரா. ம. இராசசேகர தங்கமணி அவர்களும், அறிவுரைஞர்கள் ஈரோடு பேரா. க.ஆ. திருஞானசம்பந்தம் மற்றும் திருச்சிராப்பள்ளி ப. சீனிவாசன் அவர்களும் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர். இத்திருமணத்தை முன்னிட்டு மணமகன் மு. இராசா அவர்களால் பழங்காசின் வளர்ச்சி நிதிக்காக ரூ.1000/– நன்கொடையளிக்கப்பட்டது. மணமக்களுக்கு பழங்காசின் வாழ்த்துக்கள்.

அச்சிட்டோர் : கிரியா ஸ்கிரீன்ஸ், திருச்சி–8.